பக்கங்கள்: 20

விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalāikkathir

விழயல் 01 | வள்ளுவர் ஆண்டு 2048 | தை 01, சனிக்கிழமை 14.01.2017 | கதிர் 70

அனைவருக்கும் இனிய
தைத்திருநாள் நல்வாழ்த்துக்கள்!

சரவணா
ரெக்ஸ்

இல.526,529 பருத்தித்துறை வீதி,
நல்லூர்,யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0778448045

இல.171, பிரதான வீதி,
நெல்லியடி.
தொ.பே.: 021 226 2992

தைத்திருநாள்
வாழ்த்துக்கள்

வாசகர்கள்,
விளம்பரதாரர்கள்,
விநியோகஸ்தர்கள்,
ஆதரவாளர்கள்
அனைவருக்கும்



'காலைக்கதிர்'
குடும்பத்தின்
இனிய தைத்திருநாள்
நல்வாழ்த்துக்கள்!

# பயங்கரவாத நோக்கிலேயே வடக்கு பார்க்கப்படுகின்றது

## முதல்வர் விக்கி கனடாவில் விசனம்

கனடா, ஜனவரி 14

**வடக்கு மாகாணம் தொடர்ந்தும் பயங்கரவாதக் கண்ணோட்டத்திலேயே நோக்கப்பட்டு வருகின்றது என வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கனடாவில் தெரிவித்துள்ளார்.**

அங்கு இப்போதும் சுமார் ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் படையினர் நிலை நிறுத்தப்பட்டுள்ளனர் என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

கனடாவின் பிரம்டன் நகருக்கும் வவுனியாவுக்கும் இடையே இரட்டை நகர் உடன்படிக் கையை கைச்சாத்திடும் நிகழ்வொன்றுக்காக கனடா சென்றுள்ள முதலமைச்சர் அங்கு இடம்பெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றில்சிறப்புரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

வடக்கில் அத்துமீறிய கைதுகளும், படையினரின் சட்டத்திற்கு புறம்பான கெடுபிடிகளும் தொடர்ந்து வருகின்றன. அங்கு நீதியை சமமாகப் பெற்றுக் கொள்வதில் பாரிய தடைகள் காணப்படுவதுடன், வடக்கு மீதான பயங்கரவாதக் கண்ணோட்டம் தொடர்ந்தும் நீடிக்கிறது.

மாகாண சபைகள் தொடர்ந்

பக்கம் 19 >>>

## சம்பந்தனுக்கு அரச இல்லம்

கொழும்பு,ஜன.14

எதிர்க்கட்சித் தலைவராக இரா.சம்பந்தன் தெரிவு செய்யப்பட்டு ஒன்றரை வருடங்களுக்குப் பின்னர் தற்போது தான் அவருக்கு உரிய உத்தியோகபூர்வ இல்லம் ஒதுக்கப் பட்டிருப்பதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

முன்னாள்பிரதமர்ரட்ணசிறி விக்கிரமநாயக்காவுக்கு அரசு வழங்கியிருந்த உத்தியோக பூர்வ இல்லமே அவர் மரணமடைந்தமையை அடுத்து சம்பந்தனுக்கு வழங்கபட்டிருக்கிறது. (உ)

## 'சனல் -4' ஆவணப் படத்தை வெளியிட்டால் அரசிடமிருந்து தமிழர்கள் அந்நியப்படுவர்

### லண்டனில் அமைச்சர் மங்கள கருத்துரை

இறுதியுத்தத்தில் இடம்பெற்ற போர்க்குற்றங்களை சர்வதேச மட்டத்தில் அம்பலப்படுத்துவதற்கும், ஐ.நா விசாரணையை ஏற்படுத்துவதற்கும் முக்கிய காரணிகளில் ஒன்றாக அமைந்தது எனக் கருதப்படும் சனல் 4 இன் ஆவணப்படத்தைத் தற்போது இலங்கையில் திரையிட்டால் அரசிடமிருந்து தமிழர்கள் அந்

பக்கம் 19 >>>

## சுவீடனிலிருந்து அறுவர் நாடு கடத்தப்பட்டனர்

சுவீடன் நாட்டில் அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்ட ஆறு பேர் இலங்கைக்கு நாடு கடத்தப் பட்டுள்ளனர் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன. இந்த அறுவரையும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணை செய்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப் படுகின்றது.

அளப்பு அருணாசலம்



மீற்றருக்கும் கணக்கு விடும் கில்லாடிகள் இங்கை இருக் கினம்...!

## ஓட்டோக்களில் இனி மீற்றர் கட்டாயம்

கொழும்பு, ஜன.14

பயணிகளை ஏற்றிச் செல்லும் முச்சக்கர வண்டிகளில் மீற்றர்பொருத்தியிருப்பது கட்டாயமாக் கப்பட்டுள்ளது. இதற்கான வர்த்தமானி அறிவித்தல் போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவினால் வெளியிடப்பட்டுள்ளது.

## பல்கலைக்கழக மாணவர் கொலை வழக்கை வேறு திசைக்கு மாற்றுவதற்கு முயற்சியா?

### யாழ்.நீதிவான் நேற்றுக் கடும் விசனம்

யாழ்ப்பாணம் ஜன.14

யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் கொலை விசாரணை அறிக்கையைமன்றுக்கு சமர்ப்பிக்க பொலிஸார் தாமதம் காட்டி வருகின்றமை தொடர்பாக விசனம் வெளியிட்ட நீதிவான் எஸ்.சதீஸ்தரன், இந்த வழக்கை வேறு திசைக்கு நகர்த்த முற்படுகின்றீர்களா என்று குற்றப் புலனாய்வுப் பொலிஸாரிடம் கேள்வி எழுப்பினார்.

மேற்படி வழக்கு நேற்று யாழ்.நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன் போதே நீதிவான் மேற்கண்ட வாறு கேள்வி எழுப்பினார்.

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 20 ஆம் திகதி இரவு கொக்குவில் பகுதியில் வைத்து சுட்டுக் கொலை செய்யப்பட்டனர்.

இந்தக் கொலையுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த ஐந்து பொலிஸார் கைது செய்யப்பட்டுதடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தச்சம்பவத்தை முதலில் போக்குவரத்து விதிகளின் கீழ் பதிவு செய்ய உத்தரவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. அவ்

பக்கம் 19 >>>

### பட்டிகளுக்காக பட்டிப்பொங்கலன்று

## சாவகச்சேரி பொலிஸ் முன்பாக மறவன்புலவு சச்சி உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம், ஜன.14

யாழ். மாவட்டத்தில் கிறிஸ்மஸ் தினத்தன்று கள்ளமாக 12 மாடுகள் வெட்டப்பட்டமை தொடர்பாக பட்டிப்பொங்கல் தினமான நாளைக்கு முன்னர் உரிய நடவடிக்கை எடுக்கப் படாவிட்டால் நாளை காலை சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தின் முன்பாக உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப் போகின்றேன் என இலைங்கை சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தன் அறிவித்திருக்கின்றார்.

ஈழத்துஎழுத்தாளரும்ஐக்கிய நாடுகள் உணவு, வேளாண் கழகத்தின் முன்னாள் ஆலோசகருமான மறவன்புலவு சச்சிதானந்தம் இவ்விடயம் தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

பக்கம் 19 >>>

## அடுத்த ஜனாதிபதித் தேர்தலிலும் மைத்திரியே சு.க. வேட்பாளர் என எஸ்.பி. மீண்டும் அறிவிப்பு

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஏகோபித்த இணக்கப்பாட்டுக்கு அமைய அடுத்த ஜனாதிபதித் தேர்தலிலும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே வேட்பாளராகக் களமிறங்குவார் என்று சமூக சேவைகள் மற்றும் நலன்புரி அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்க மீண்டும் தெரிவித்துள்ளார்.

கண்டி மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் நேற்று சமூக சேவைகள் மற்றும் நலன்புரி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க மற்றும் மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க ஆகியோர் தலைமையில் கண்டி மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தைத் தொடர்ந்து ஊடகவியலாளர்கள் மத்தியில் கருத்துத் தெரிவிகத்கும் போதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அங்கு அமைச்சர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நல்லாட்சிஅரசைக்கவிழ்த்து புதிய ஆட்சியை அமைப்பது என்ற முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கனவு, தற்போது ஒன்றிணைந்த எதிர்க் கட்சியினருக்கு மத்தியில் தொற்றுநோயாகப் பரவிவருகின்றது. இது எப்போதுமே நிறைவேறாத ஒரு கனவாகும்.

பக்கம் 19 >>>

## கண்டி இன்புளுவன்சா காய்ச்சல் பறவைகளால் பரவவில்லையாம்!

யாழ்ப்பாணம். ஜன. 14

கண்டி பொதுவைத்தியசாலையில் உயிரிழப்பை ஏற்படுத்திய இன்புளுவன்சா நோய் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டிருப்பதாக கண்டி பொது வைத்தியசாலை தெரிவித்துள்ளது.

பொதுவாக 'எச்1 என்1' இன்புளுவன்சா பறவைகள் அல்லது பன்றிகளில் இருந்து பரவத் தொடங்கினாலும் இலங் கையில் அது அவ்வாறு விலங்குகளில் இருந்து தொற்றியமைக்கான சான்றுகள் இல்லை

விவரமான செய்தி
7ஆம் பக்கத்தில்

பக்கம் 19 >>>

## பொங்கல் வாழ்த்துக்கள்

# தமிழரின் நன்றி மறவாப் பண்பை எடுத்துக் காட்டும் திருநாள் இது!

### வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி



"உலக வாழ் தமிழ் மக்கள் தொன்றுதொட்டுமேற்கொண்டு வரும் சூரிய வழிபாட்டின் மிகச் சிறந்த வழிபாடாகவே, தைப் பொங்கல் இருந்து வருகின்றது. மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையிலான உணர்வுபூர்வமான உறவுக்கு நன்றி தெரிவிக்கும் நிகழ்வான இத்திருநாளானது, அம்மக்களின் ஆன்மீக வாழ்க்கைக்கான நற்சிந்தனைகளை ஒன்றுசேர்க்கும் நாளாகவும் அமைகின்றது" என, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.


அவர் விடுத்துள்ள பொங்கல் வாழ்த்துச் செய்தியில் –

உழவுத் தொழிலும் உலகமும், உயிர் வாழ மழையைத் தரும் சூரியன் உள்ளிட்ட இயற்கைச் சூழல் மீதும், கமத்துக்குக் கை கொடுத்து, பசிக்குப் பால் கொடுக்கும் கால்நடைகள் மீதும் கௌரவத்தையும் வெளிப்படுத்தும் வகையில், தமிழ் மக்கள் தைத் திருநாளைக் கொண்டாடுவதன் மூலம் அம்மக்களின் செய்நன்றி மறவாப் பண்பே எடுத்துக்காட்டப்படுகின்றது.

மனிதனுக்கும், இயற்கை யின் கொடைகளுக்கும் இடை யிலான பரஸ்பர உடன்படிக் கையைப் புதுப்பிக்கும் இவ்வா றான கலாசார பண்டிகைகள் மூலம், மானிடசமூகத்தின் பரந்த உள்ளத்தின் உயர்ந்த பண்புகள் வெளிப்படுத்தப்படுகின்றன. – எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# உலகத் தமிழர் அனைவரினதும் பொது விழாவே பொங்கல்!

### வாழ்த்துச் செய்தியில் பிரதமர்



கொழும்பு, ஜன.14

"சமத்துவம் மற்றும் நன்றியுணர்வு என்பவற்றின் பெறுமதியை எடுத்துக் கூறும் தைத்திருநாள், கலாசார, சமய பல்வகைமை யை மதித்து, மனித சமூகத்தின் மத்தியிலும், சுற்றுச் சூழலுடனும் நல்லிணக்கத்துடன் வாழ்வதன் முக்கியத்துவத்தை எமக்கு நினைவூட்டுகிறது" – என்று, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது பொங்கல் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:–

புது விளைச்சலைக் கொண்டாடும் நோக்கில், சோழ அரசர் காலத்தில் ஆரம்பமான தைப் பொங்கல் திருவிழா, தென்னிந்தியாவின் தமிழ் மக்களுக்குரிய ஒரு திருவிழாவாகக் காணப்பட்டாலும், தற்போது அது உலகம் முழுவதும் வாழும் தமிழ் மக்கள் தம்மால் இயன்ற முறையில் கொண்டாடும் சிறப்பு மிக்க சமய, கலாசாரத் திருவிழாவாக மாறியுள்ளது.

இன, மத, கலாசார பேதங்களைத் தாண்டிய, அமைதியான, சுதந்திரம் மிக்க நாடொன்றைக் கட்டியெழுப்புவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவது நம் அனைவரினதும் பொறுப்பு என்பதை நினைவுபடுத்தி, தைத் திருநாளைக் கொண்டாடும் தமிழ் மக்களுக்குச் சமாதானம் மகிழ்ச்சி மிகுந்த சுபீட்சமான எதிர் காலம் அமைய வேண்டும் எனப் பிரர்த்திக்கிறேன்." – என்றுள்ளது.

# களியாட்டங்களைத் தவிர்த்து ஒற்றுமையாகக் கொண்டாடுவோம்

### அமைச்சர் டெனீஸ்வரன் கோரிக்கை



வடக்கு மாகாண அமைச்சர் பா.டெனீஸ்வரன் தமது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்திருப்பவை வருமாறு:–

தை பிறந்தால் வழிபிறக்கும், விழி திறந்தால் வழிகிடைக்கும், பொங்கல் பொங்கினால் இன்பம் பொங்கும் என்பது சான்றோர் வாக்கு. தமிழர் பண்பாடு, கலாசாரம் என்பவற்றைக் கட்டிகாக்க வேண்டியது தமிழர்களாகிய நம் அனைவரினதும் கடமை. விழாக்கள், பண்டிகைகள் என்பன நம் அடையாளங்கள். அந்தவகையில் தைப்பொங்கல் எமது கலாசாரத்தில் முக்கியமான ஒரு விழாவாகும்.

உழவர்கள் தமக்கு நன்மை பயத்த சூரியபகவானுக்கு நன்றி செலுத்தும் இவ்விழா தமிழர் களாகிய எமது நற்பண்பை உலகிற்கு எடுத்துக் காட்டுகின்றது.

துரதிஷ்டவசமாக இவ்வருடம் பருவமழை பொய்த்ததன்னால் எமது விவசாயிகள் பல துன்பங்களை அனுபவித்து வருவது மிகவும் வேதனையளிக்கும் நிகழ்வாகும். இருப்பினும் எமது கலாசாரத்தைக் கட்டிக்காக்க வேண்டியது எமது தலையாய கடமையாகும்.

எனவே இன, மத வேறுபாடுகள் மறந்து, தேவையற்ற களியாட்டங்களைத் தவிர்த்து, அயலவர்களுடன் ஒற்றுமையாக எமது அடையாளங்களில் ஒன்றான இவ்விழாவினை கொண்டாடு மாறு கேட்டுக்கொள்ளுவதோடு, அனைத்து உறவுகளுக்கும் எனது தைப் பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன்.

# தமிழருக்கு வழிகாட்டும் தைத்திங்கள் திருநாள்!

### அமைச்சர் சுவாமிநாதனின் வாழ்த்து



சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, மீள் குடியேற்றம், புனர்நிர்மாணம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் தனது தைப்பொங்கல் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்தவை வருமாறு :–

உலகம் முழுவதுமுள்ள தமிழ் மக்கள் தைமாதத்தில் கொண்டாடும் தைத்திருநாள் மத, கலாசார மற்றும் சமூகரீதியாக மிகவும் முக்கியமான மகிமைபொருந்திய நாளாகும். தமிழர்களினால்கொண்டாடப்படும் பண்டிகைகளில் தலை சிறந்ததாகவும் உயர்வானதாகவும் தைப்பொங்கல் பண்டிகை போற்றப்படுகின்றது. தமிழர்களின் நாட்காட்டியின் படிதை மாதம் முதல் நாள் தமிழர்களால் தைப்பொங்கல் பண்டிகை கொண்டாடப் படுகின்றது. தைமாதம் தமிழ் மக்களுக்கு வழிகாட்டும் மாதமாகவும் அமைகின்றது. தமது உழைப்புக்கு உதவிய இயற்கைக்கு அவர்கள் நன்றியுணர்வைத் தெரிவிக்கும் திருநாளாக தைப்பொங்கல்விளங்குகின்றது. இந்த தைப்பொங்கல் திருநாளில் உழவர்கள் தமது வேளாண்மைக்கு உதவி செய்த சூரிய பகவானுக்கு நன்றி செலுத்துகின்றனர். உழவர்கள் மாத்திரமல்லாமல் ஒவ்வொரு மனிதப்பிறவியும் சூரியனுக்கு நன்றி கூறும் நாளாக இன்றைய நாள் போற்றப்படுகிறது.

இலங்கையர்களாகிய நாம் அனைவரும் இனம், மதம், மொழி ஆகியவற்றினால் வேறுபட்டிருந்தாலும் கூடஎங்கள் அனைவரினதும் எண்ணங்களும் எதிர்பார்ப்புக்களும் ஒன்றாகும். இவ்வாறானமுக்கியமான தினத்தில் நாம் அனைவரும் இன, மத, மொழி வேறு பாடுகளின்றி பேதங்களை மறந்து ஒற்றுமையாகக் கைகோத்து சேர்ந்து வாழ்வதன் மூலம் இலங்கை வாசிகளான நாம் நிரந்தர சமாதானத்தை உருவாக்க முடியும். இதற்காக நாம் அனைவரும் இந்தத் தினத்தில் பிரார்த்தனை செய்வோம். – எனத் தெரிவித்துள்ளார்.

# உழவுத் தொழில் மேம்படுவதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்

### பொங்கல் வாழ்த்துச் செய்தியில் விந்தன்



விவசாயிகளின் வாழ்வு வளமடையவும் எமது உணவுப் பாதுகாப்பு மேம்படவும் சகலரும் விவசாய மேம்பாட்டு முயற்சிகளுக்கு ஒத்துழைக்க வேண்டும் என வடக்கு மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் தெரிவித்தார்.

தைத்திருநாளை முன்னிட்டு அவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியிலேயே கூறியுள்ளார். தமது வாழ்த்துச் செய்தியில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

காலநிலை மாற்றத்தால் மழை வீழ்ச்சி போதாமை விவசாய முயற்சிகளை வீணடித்துள்ளது. இதனால் விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இது பற்றி சரியான வகையில் விவரங்கள் திரட்டப்பட்டு விவசாயிகளின் வாழ்வாதாரம் காப்பாற்றப்பட சகலரும் ஒத்துழைக்க வேண்டும்.

போருக்குப் பின்னர் எட்டு ஆண்டுகளாகியும் போரினால் விவசாயிகளுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கள் குறித்து அரசாங்கத்தினால் இழப்பீடுகள் வழங்கப்படவில்லை.

யாழ்ப்பாணத்திலும் பிற மாவட்டங்களிலும் பயிர்ச்செய்கைக்கு ஏற்ற ஏராளமான ஏக்கர் நிலம் உயர்பாதுகாப்பு வலயங்களாக, மிதிவெடி வயல்களாகவுள்ளன.

எமது மக்கள் பொருளாதார ரீதியிலும் உணவுப்பாதுகாப்பு ரீதியிலும் நிமிர வேண்டுமாயின் முதலில் உழவுத் தொழில் சிறக்க வேண்டும். அதற்காக நாம் அனைவரும் ஒத்துழைத்துப் பய ணிக்க வேண்டும். – எனத் தெரிவித்தார்.

# யாழ். நகர் வைரவர் ஆலயத்தில் நாளை பட்டிப் பொங்கல் விழா

யாழ்ப்பாணம் ஜன.14

யாழ்ப்பாணம் நகரில் சத்திரத்துச் சந்தியில் உள்ள ஞான வைரவர் ஆலயத்தில் பட்டிப் பொங்கல் விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறவுள்ளது.

பசுக்களைப் பாதுகாக்கும் அமைப்புக்களின் இணையத் தலைவர் வ.பேரின்பநாயகம் தலைமையில் இந்த விழா இடம் பெறும்.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினர்களாக வட மாகாண சபை உறுப்பினர்களான கேசவன் சயந்தன், விந்தன் கனகரத்தினம் மற்றும் பா.கஜதீபன் ஆகியோர் கலந்து கொள்வர்.

நிகழ்வில் கோமாத பவனி இடம்பெறும். அலங்கரிக்கப்பட்ட கோமாதாக்களின் ஊர்வலம் கே.கே.எஸ். வீதியில் ஆரம்பமாகி யாழ். நகரின் பிரதான வீதிகளினூடாகச் சென்று மீண்டும் ஞானவைரவர் ஆலயத்தைச் சென்றடையும். (ம-21)

# இன்று யாழில் காளைகளின் ஊர்வலம்

யாழ்ப்பாணம் ,ஜன.14

தமிழர்களின் பாரம்பரியத் திருநாளான தைத்திருநாள் பொங்கல் தினமான இன்று காளைகளைப் போற்றும் ஊர்வலம் ஒன்றை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் 2007 உயர்தரப் பிரிவைச் சேர்ந்த பழைய மாணவர்கள் நடத்தவுள்ளனர்.

அலங்கரித்த காளைகளோடு இன்று காலை 8.30 மணியளவில் மல்லாகத்தில் இருந்து ஆரம்பமாகும் இந்த ஊர்வலம் காங்கேசந்துறை வீதி வழியாக யாழ். நகரை அடையும்.பின்னர் அங்கிருந்து கஸ்தூரியார் வீதி வழியாக யாழ். இந்துக் கல்லூரியை வந்தடைந்து அங்கு தைத்திருநாள் விஷேட பூசையுடன் அது முடிவுறும்.

தமிழர்களின் பாரம்பரியம், கலாசாரத்தனித்துவம், பட்டியை மதிக்கும் பண்பியல்பு ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் விதத்தில் இந்தக் காளைகளின் ஊர்வலம் நடத்தப்படுகின்றது என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (உ)

# யாழ்கோவில் பைக்கற் பால்

யாழ்ப்பாணம்,ஜன.14

தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு பைக்கற்றில் அடைக்கப்பட்ட பசுப்பால், நெய் என்பவற்றை 'யாழ்கோ' பால் விற்பனைக்கிளைகளில் காலை 5 மணியிலிருந்து பெற்றுக் கொள்ள முடியும் என்று பொது முகாமையாளர் அறிவித்துள்ளார். (இ

# கலாசாரப் பேரவையின் பொங்கல் விழா

சுன்னாகம் ஜன.14

யாழ்.மாவட்ட கலை கலாசாரப் பேரவையின் தைப் பொங்கல் விழா நாளை ஞாயிற் றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்திற்கு அருகாமையில் உள்ள யாழ். மாவட்டச் செயலக உத்தியோகத்தர்களுக்கான முகாமைத்துவத் திறன் அபிவிருத்திப் பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட அரச அதிபரும் கலாசாரப் பேரவைத் தலைவருமான நா.வேதநாயகன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் உத்தியோகத்தர்கள் கலந்துகொள்வர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-54)

# மின் தடை அறிவித்தல்

யாழ்ப்பாணம், ஜன.14

யாழ்.பிரதேசத்தில் குறிப்பிட்ட சில இடங்களில் நாளை ஞாயிற்றுக்கிழமை மின் தடை ஏற்படும் என மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

அதன்படி, நாளை காலை 8.30மணியில் இருந்து மாலை 5.30 மணி வரை யாழ். பிரதேசத்தில் இராமலிங்கம் வீதி, ஜி.பி.எஸ். வீதி, பாற்பண்ணை, திருநெல்வேலி சந்தை, முடமாவடி, கலாசாலை வீதி, ஆடியபாதம் வீதி, அரசடி அம்மன் வீதி, டொக்டர் சுப்பிரமணியம் வீதி, கந்தரோடை ஆகிய இடங்களில் மின்சாரம் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ

# தமிழ் அரசியல் கைதிகளின் வழக்கு விசாரணை ஹோமாகமவுக்கு மாற்றியமைக்குக் கண்டனம்

## சாள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. அறிக்கை

யாழ்ப்பாணம், ஜன.14

தமிழ் அரசியல் கைதிகளின் வழக்கு சிங்கள பிரதேசத்துக்கு மாற்றப்பட்டமைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கண்டனம் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக வன்னிமாவட்டநாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள் ளவை வருமாறு:-

கொழும்பு சிறப்பு நீதிமன்ற விசாரணையில் உள்ள 38 தமிழ் அரசியல் கைதிகளின் விசாரணை சிங்களப் பிரதேசமான ஹோமாகமவுக்குத் திட்டமிட்ட முறையில் மாற்றப்பட்டுள்ளது.

நீண்ட காலமாக இழுத்தடிக்கப்பட்டு வந்த தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை இதன்மூலம்நீண்டகாலத்துக்கு மேலும் இழுத் தடிப்புச் செய்வதற்கும், அவர்களது விடுதலையை இல்லாமல் செய்யும் நடவடிக்கையாகவுமே உள்ளது.

இந்தச் செயற்பாட்டால் அரசியல் கைதிகள் மன ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் சார்பில் ஆஜராகும் சட்டத்தரணிகளும் தங்களால் ஹோமாகம நீதிமன்றுக்கு போக்குவரத்துச் செய்ய முடியாது என்று சட்டமா அதிபர் திணைக்களத்துக்குக் கடிதம் மூலம் அறிவித்துள்ளனர்.

பொதுபலசேனா உள்ளிட்ட சில சிங்கள இனவாதக் குழுக்கள், தமிழ் அரசியல் கைதிகளை விடுதலைப் புலிகளாகப் பார்க்கின்றன.

இதனால் தமிழ் அரசியல் கைதிகளின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. அவர்களுக்கு ஏதாவது அச்சுறுத்தல் ஏற்படுமாயின் அதற்கு அரசே பொறுப்புக் கூறவேண்டும்.-என்றுள்ளது. (ஐ)

## இருக்கைப் பட்டி அணியாது சென்ற டிப்பர் வாகன சாரதி விபத்தில் பலி!

வவுனியா, செட்டிகுளம் பகுதியில் இருக்கைப் பட்டி அணியாது வேகமாக டிப்பர் வாகனத்தை செலுத்திய சாரதி ஒருவர் வீதி தடுப்பில் வாகனத்தை கட்டுப்படுத்த முடியாமையால் ஏற்பட்ட விபத்தில் மரணமானவர் என்று பறையனாலங்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்றுக் காலை 6.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

முருங்கன் பகுதியில் இருந்து பூனாவ பகுதியை நோக்கி பயணித்த டிப்பர் வாகனம் வவுனியா, செட்டிகுளம், பெரிய கட்டுப் பகுதியில் வேகமாகப் பயணித்துள்ளது.


இதன்போது வீதியில் போடப்பட்டிருந்த வேகத்தடையில் வாகனத்தைகட்டுப்படுத்த முடியாமையால் டிப்பர் வாகனம் வேகத்தடையை மேவிப் பாய்ந்துள்ளது. இதில் சாரதி டிப்பர் வாகனத்தில் முன் கண்ணாடி வழியாக தூக்கி வீசப்பட்டு சம்பவ இடத்திலேயே மரணமடைந்துள்ளார்.

வாகனத்தைச் செலுத்திய சாரதி இருக்கைப் பட்டி அணியவில்லை. இதன் காரணமாகவே அவர் தூக்கி வீசப்பட்டிருக்கிறார் என்று விசாரணைகளை மேற்கொண்டுவரும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்தில் முருங்கனைச் சேர்ந்த பிலிப்பு ஜேசுராஜா (வயது 55) என்பவரே மரணமடைந்தவராவார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பறையனாலங்குளம்பொலிஸார்மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-100)

## காணிகளை இழந்து நிற்கும் தமிழர்களது உணர்வுகள் ஏன் எவருக்கும் புரியவில்லை?

### கேள்வி எழுப்புகிறார் டக்ளஸ் தேவானந்தா



கொழும்பு, ஜன.14

அம்பாந்தோட்டையில் சீன நிறுவனத்துக்குக் காணிகளை வழங்குவதற்காகக் எதிர்ப்புக் குரல் எழுப்புபவர்கள், யுத்தத்தில் பாதிக்கப்பட்ட, குடியிருப்பு நிலங்களை இழந்துள்ள தமிழ் மக்களின் உணர்வுகளை ஏன் புரிந்துகொள்ளவில்லை.

இவ்வாறு ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-றுகுணு பொருளாதார மையம் என்ற பெயரில் அம்பாந்தோட்டையில் ஆயிரக் கணக்கான ஏக்கர் காணிகள் சீன நிறுவனங்களுக்கு வழங்கப்படுகின்றன.

இந்த நிலையில், குடியிருப்பு நிலங்களை அபகரிக்க வேண்டாம் என்றும், வளமான நிலங்களைவெளிநாடுகளுக்கு தாரை வார்க்க வேண்டாம் என்றும், பௌத்த மதத்தின் தொன்மையை பாதிக்கும் வகையில் காணிகளை ஆக்கிரமிக்க வேண்டாம் என்றும் தென்னிலங்கை மக்கள் கூறுகின்றனர்.

இதற்கு ஆதரவாக அரசியல் வாதிகளும், பொது அமைப்புக்களும் வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்கின்றார்கள்.

ஆனால், வடக்கில் விவசாய நிலங்கள் மற்றும் குடியிருப்பு நிலங்கள் உட்பட்ட பல ஏக்கர் நிலங்கள் இது வரையில் விடுவிக்கப்படாமல் உள்ளன.

மண் மீதான பற்றுதல் காரணமாக வார்த்தைகளாலும், கற்களாலும் தாக்கிக் கொள்கின்றனர்.

ஆனால், தமிழ் மக்களின் உணர்வுகளையும், கோரிக்கைகளையும் இவர்களால் ஏன் புரிந்து கொள்ளமுடியவில்லை.- என்றுள்ளது.(ஐ)



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, editor@kalaikkathir.lk
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## தை பிறந்தது; வழி பிறக்குமா?

இயற்கையின் சிருஷ்டி மனிதன். இயற்கைத் தாயின் குழந்தை அவன். இயற்கையின் கருவகத்துடன் மனிதனின் தொப்புள் கொடி பின்னிப்பிணைந்து கிடக்கின்றது. இயற்கையின் மடியில் வேர் பதித்து நிற்கின்றது மானுடம். அந்த இயற்கையைத் துறந்து அவன் வாழ்வது என்பது இயலாதது.

இயற்கையோடு இயைந்து வாழ்வதே இன்றியமையாதது என்பதை உணர்ந்து வாழ்ந்தவன் தமிழன். அந்த உணர்வின் வெளிப்பாடே நாம் இன்று கொண்டாடும் பொங்கல் திருநாள்.

அகில நாயகன் ஆதவன். அவனே உலக காரணன். அணுவில் இருந்து அண்டம் வரை அனைத்துக்கும் உயிரூட்டும் உத்தமனும் அவனே. அவனின்றி அசையாது அவனி எனக் கண்டோம்.

காலங்கள் மாறுவதும், பருவநிலை வேறுபடுவதும்கூட அவனது காலகதி பிசகாத இயக்கத்தால்தான்.

பூமிப்பந்தில் நம் அனைவரினதும் இயக்கத்துக்கான சக்தியைப் பதிப்பவன் சூரியனே. உலகத்தினதும், உயிரினங்களினதும் அசைவியக்கத்துக்கு மூலகாரணமான அந்த சூரியனை, நன்றியுடன் நினைவுகூர்ந்து, ஏற்றிப் போற்றும் திருநாளே பொங்கல்.

உயிரின் மூலமும், உயிர்ப்பின் இயக்கமும் அவனது சக்தியிலிருந்து தான் உற்பவமாகின்றன.

இந்த உண்மையை உணர்ந்துகொண்டதால் உழவுத் திருநாளாகப் பொங்கலைப் படைத்தான் தமிழன்.

கதிரவனின் கதிர்கள் வழியாகக் கிடைக்கும் சக்தியைப் பூமிப்பந்தில் பதிப்பவை தாவரங்கள். உலக உணவுச் சங்கிலியின் தோற்றுவாய் அங்குதான் ஆரம்பிக்கின்றது.

அந்தக் கதிரவனின் சக்தியை நெற்கதிர்கள் ஊடாக உலகுக்கு வழங்கும் உத்தமன் உழவனே.

'அதனால்தான் உலகமெனும் தேருக்கு உழவனே அச்சாணி' என்றார் திருநாப்போதகர், திருமறை தந்த திருவள்ளுவர்.

'செங்கோலை நடத்துவது உழவனின் ஏரடிக்கும் சிறுகோலே' - என்று கம்பன் சொன்னதும்கூட, உழவன்மூலம் உதயனை உயர்த்தும் தன்மையதே.

'வரப்புயர..... ' என்று ஆரம்பித்து '.......கோன் உயர்வான்' என்ற முடிப்பின் ஊடு உழவுத் தொழிலை மேன்மைப்படுத்துகின்றார் ஔவையார். அரசின் உயர்வு செங்கோலில் அல்ல, உழவனின் ஏர்கோலில்தான் தங்கியுள்ளது என்பதை உணர்த்துகின்றார் அந்தத் தமிழ் மூதாட்டி.

அந்த உழவுத் தொழிலுக்கு மூலகாரணனாக விளங்கும் கதிரவனுக்கு உழவர்கள் எடுக்கும் நன்றித் திருவிழாதான் இன்றைய தைப்பொங்கல்.

சூரியனின் அசைவியக்கத்தால் காலநிலைகள் மாறுகின்றன; பருவமாற்றங்கள் நேருகின்றன.

பூமி தன்னைத் தானே சுற்றியபடி சூரியனையும் சுற்றி வருகின்றது. அந்தச் சுற்றுதலில் ஒரு புதிய அத்தியாயம் மீளப் பிறப்பதைச் சுட்டுவதே தைப்பொங்கல். தனு ராசியில் இருந்து மகர ராசிக்கு பிரவேசிக்கும் இத்தினத்தைத்தான் மகரசங்கிராந்தி என்று அழைக்கின்றோம். மகரத் திருநாளாகவும் தமிழர் பண்டிகையாகவும் கொண்டாடுகின்றோம். உத்தராயண ஆரம்பம் என்பதும் இதனைத்தான்.

வழமையாக, அறுவடைக்கு உதவிய ஆதவனுக்குப் பொங்கலிட்டு நன்றிகூறும் இந்த நாள், தமிழ் மக்களுக்கு நம்பிக்கையையும் மகிழ்ச்சியையும் தரும் திருநாளே.

ஆனால், இலங்கைத் தமிழர்களைப் பொறுத்தவரை மகிழ்வுடன் கொண்டாடும் இனிய பொங்கல் திருநாள் இன்னும் வரவே இல்லை என்பதுதான் நிதர்சனம். அதற்காக வழிமேல் விழி வைத்துக் காத்திருக்கின்றார்கள் அவர்கள்.

நீதி கேட்டு, கௌரவ வாழ்வு வேண்டி, சமத்துவ நிலைதேடி, முதல் மூன்று தசாப்த காலம் அஹிம்சை வழியிலும் அடுத்த மூன்று தசாப்த காலம் ஆயுத வழியிலும் சொல்லொணாத் துன்ப துயரங்களைச் சுமந்தபடி, வார்த்தைகளில் வர்ணிக்க முடியாத ஈகங்கள், தியாகங்களைப் புரிந்தபடி, தமிழர்களின் பல்லாயிரம் உயிர்களை ஆகுதியாக்கிய வண்ணம், இலங்கை தமிழர்கள் நடத்திய போராட்டங்கள் அவமாகிப் போய்விட்டன.


எனினும், அவர்கள் மனம் தளர்ந்து போய்விடவில்லை. தன் சாம்பல் மேட்டிலிருந்து மீள உயிர்க்கும் பீனிக்ஸ் பறவைபோல நம்பிக்கையுடன் எழுந்து நிற்கின்றார்கள் இலங்கைத் தமிழர்கள்.

தோல்விகளிலும், பின்னடைவுகளிலும், அழிவுகளிலும், ஏமாற்றங்களிலும் சிக்குண்ட நிலையில் அல்லற்படும் அவர்களுக்கு 'தை பிறந்தால் வழிபிறக்கும்' என்ற பொய்யாமொழி ஊக்கத்தைத் தருவதாக உள்ளது; நம்பிக்கை ஊட்டுவதாக உள்ளது.

அந்தத் தைரியத்துடனேயே இன்றைய பொங்கல் திருநாளை எதிர்கொள்கின்றார்கள் அவர்கள்.

தைத் திங்கள் தையல் தரும் தைரியம், பிறந்த புத்தாண்டிலாவது தமக்குப் புது வாழ்வைத் தேடித்தரும் என அவர்கள் நம்புகின்றார்கள், எதிர்பார்க்கிறார்கள்.

தமிழர்களின் நம்பிக்கையை நனவாக்கும் விதத்தில் தைமகள் வருகையோடு இந்த நாட்டில் நல்லிணக்கமும், புரிந்துணர்வும், அதன் அடிப்படையில் நீதி, நியாயமான தீர்வும் கிட்டும் என்று எதிர்பார்ப்போமாக!




# எல்லைநிர்ணய அறிக்கையின் வர்த்தமானி அறிவிப்பில் தாமதம்

### உள்ளூராட்சிமன்ற அமைச்சின் உள்ளகத் தகவல்கள் தெரிவிப்பு

கொழும்பு, ஜன.14

எல்லை நிர்ணய அறிக்கையை வர்த்தமானியில் அறிவிக்கும் நடவடிக்கை காலதாமதமாகும் என்று உள்ளூராட்சி மன்ற மற்றும் மாகாணசபைகள் அமைச்சின் உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் எல்லை நிர்ணய அறிக்கை அமைச்சர் பைசர் முஸ்தபாவிடம் ஒப்படைக்கப்பட்டாலும் அதனை வர்த்தமானியில் அறிவிப்பதற்கு காலம் தாழ்த்தப்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

எல்லை நிர்ண ஆணைக் குழுவின் தலைவர் அசோக பீரிஸ் மற்றும் அதன் உறுப்பினர்கள் ஐந்து பேரும் கையொப்பங்களுடன் இந்த அறிக்கையை எதிர்வரும் 17 ஆம் திகதி துறைசார் அமைச்சரிடம் ஒப்படைக்க இணங்கியுள்ளனர்.

எனினும் ஆணைக் குழுவின் தலைவர் அறிக் கையை சமர்ப்பித்ததன் பின்னர் ஏதேனும் குறைபாடுகள் காணப்பட்டால் அதனைத் திருத்திக் கொள்ளச் சட்டமா அதிபர் திணைக் களத்தின் உதவியை நாட அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதனால் எல்லை நிர்ணய அறிக்கையை வர்த்தமானியில் பிரசுரிக்கும் நடவடிக்கையில் காலம் தாழ்த்தப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எல்லை நிர்ணய அறிக்கையில் அதன் தலைவர் அசோக பீரிஸ், உறுப்பினர்களான சட்டத்தரணி சாலிய மெத்யூ, பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை, சட்டத்தரணி உபுல் குமாரப்பெரும ஆகியோர் கையொப்பமிட்டுள்ளனர். (எ)

# பொலிஸ் நிதி மோசடி விசாரணை பிரிவில் எந்த நம்பிக்கையும் இல்லை

### அரச கரும மொழிகள் அமைச்சர் மனோகணேசன் கூறுகிறார்

கொழும்பு, ஜன.14

பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவு மீது எனக்கு எந்த நம்பிக்கையும் இல்லை என்று தேசிய நல்லிணக்க கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சர் மனோகணேசன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பேரம் போதே அவர் இதனைக் கூறியுள்ளார். அங்கு அவர் இதுதொடர்பில் மேலும் தெரிவித்தவை வருமாறு;

''உண்மையில் நிதி மோசடி விசாரணைப் பிரிவின் மீது எனக்கு எந்த நம்பிக்கையும் இல்லை. அரசாங்கத்தின் அமைச்சர் என்ற வகையில் நிதி மோசடி விசாரணைப் பிரிவு மற்றும், அதன் அதிகாரிகள் மீது எனக்கு நம்பிக்கையில்லை.

அந்த அதிகாரிகள் அரசியல் பணிகளைச் செய்கின்றனர். இது அரசாங்கத்தின் அரசியல் அல்ல. அதிகாரிகள் அவர்களின் அரசியலை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும், விமல் வீரவன்சவைக் கைது செய்தனர். எந்தக் குற்றத்துக்காகக் கைது செய்தனர்?. வாகனங்களை தவறாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஆனால் வீரவன்ச அடுத் தவாரம் வெளியில் வந்துவிடுவார். அவருக்கு எதிராக வேறு வழக்குகள் இருக்கின்றன. இந்த நிலையில் சிறிய குற்றத்துக்காக அவரைக் கைது செய்துள்ளனனர்.

இதனால் எனக்கு பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவின்மீது எந்த நம்பிக்கையும் இல்லை.'' - என்றார். (எ)

# நீர்ப்பற்றாக்குறையை எதிர்கொள்ளத் தயார்

### அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் யாப்பா தெரிவிப்பு

கொழும்பு, ஜன.14

மழை வீழ்ச்சியை எதிர்வரும் 3 மாதங்களுக்கு தொடர்ந்து பெற்றுக்கொள்ள முடியாதநிலை காணப்படுவதால் அதனை எதிர்கொள்ளத் தயாராகி வருவதாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா தெரிவித் துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகச் சந்திப் பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

''சீரற்ற காலநிலை காரணமாக வரும் மூன்று மாதங்களில் ஏற்படப் போகும் நீர் தட்டுப்பாட்டைப் போக்கும் வகையில் நீர் விநியோகம் செய்வதற்கும் அதேபோன்று நீர்த் தாங்கிகள் மற்றும் குழாய்க் கிணற்று வசதிகளைப் பெற்றுக் கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய பாதிக்கப்படும் மக்களுக்கான நிவாரணங்களைப் பெற்றுக் கொடுக்க அமைச்சின் கீழான நிர்வாகக் குழுக்கள் செயற்படவுள்ளன.''- என்றார். (எ)

### நாளை

15.01.2017
ஞாயிற்றுக்கிழமை
நட்சத்திரம்: அவிட்டம் பி.ப 04.14 வரை
திதி: சதுர்த்தி பி.ப 02.57 வரை
சுபநேரம் : 09.34 – 11.04 வரை
இராகுகாலம் : 05.04 – 06.34 வரை

# வறுமைக்குள் தள்ளப்பட்டுள்ள வடக்கின் மூன்று மாவட்டங்கள்

## வட மாகாண பிரதம செயலாளர் பத்திநாதன் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜன.14

''இலங்கையின் 25 மாவட்டங்களில் 5 மாவட்டங்கள் வறுமையான மாவட்டங்களாக இனங்காணப்பட்டுள்ளன. இவற்றில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த 3 மாவட்டங்கள் உள்ளன. இந்த நிலையில் மந்த போசனை மாகாணமாக வடக்கு மாறியுள்ளது.

''தனிக் குடும்ப தன்னிறைவே கிராமங்களின் தன்னிறைவாகவும், கிராமங்களின் தன்னிறைவே மாவட்டத்தின் ஊடான நாட்டின் தன்னிறைவாகவும் விளங்க முடியும்.''

- இவ்வாறு வட மாகாண பிரதம செயலாளர் அ.பத்திநாதன் தெரிவித்தார்.

2017 ஆம் ஆண்டு வறுமையில் இருந்து விடுபடும் ஆண்டு என்னும் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் வட மாகாணத்துக்கான நிகழ்வு நேற்று முன்தினம் யாழ். பிரதம நூலகத்தில் பிரதம செயலாளர் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது தலைமையுரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு உரையாற்றினார்.

இங்கு பிரதம செயலாளர் தொடர்ந்தும் உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு:-

2015 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் ஐக்கிய நாடுகள் சபையில் நிலையான அபிவிருத்திக் குறிகாட்டிகளாக 17 விடயங்களை இனங்கண்டுள்ளனர்.

அவ்வாறு இனங்கண்டு கொண்ட 17 விடயங்களையும் ஐ.நா.வில் அங்கம் வகிக்கும் 193 நாடுகளும் ஏக மனதாக அங்கீகரித்துள்ளன. இவ்வாறு இனங்காணப் பட்ட 17 விடயங்களிலும் குறிப்பிட்டளவு வீதத்தை 2030 ஆம் ஆண்டுக்குள் எட்ட முடியாது விட்டால் உலகம் அழிவையே எதிர்கொள்ளும்.

அதில் மிக முக்கிய இரு விடயங்களாக, உலகில் உள்ள எல்லா விதமான வறுமைகளையும் 2030 இற்குள் ஒழித்தல் மற்றையது விவசாயத்தை ஊக்குவித்து மந்த போசனத்தை நீக்கி , ஆரோக்கியமான சமுதாயத்தைக் கட்டியெழுப்ப ஊக்குவித்தல். இந்த இரண்டும் முக்கிய இடத்திலும் சுகாதாரம், நீர் மற்றும் விடயங்கள் அடுத்த கட்டமாகவும் இனம் காணப்பட்டுள்ளன.

இலங்கையும் இவற்றை ஏற்றுள்ளதால் இந்த ஆண்டை வறுமையில் இருந்து விடுபடும் ஆண்டாகப் பிரகடனம் செய்துள்ளது.

இதற்காக சரத் அமுனுகம தலைமையில் ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழு இலங்கை மக்களை எவ்வாறு வறுமையில் இருந்து விடுவிக்க முடியும் என்று ஆராய்கிறது.


தற்போது இலங்கையின் 25 மாவட்டங்களில் 5 மாவட்டங்கள் வறுமையான மாவட்டங்களாக இனங்காணப்பட்டுள்ளன. இவற்றில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த 3 மாவட்டங்கள் உள்ளன.

யுனிசெப் நிறுவனம் 2013 ஆம் ஆண்டில் மேற்கொண்ட மந்த போசன மாகாணங்கள் ஆய்விலும் வடமாகாணமே அதிக பாதிப்பான மாகாணமாக இனம் காணப்பட்டிருந்தது.

இவ்வாறான நிலைமைகளுக்குப் பல காரணங்கள் இருப்பினும் 35 ஆண்டுகளுக்கு மேலாக இடம்பெற்ற யுத்தம், இதனால் வாழ்வாதாரப் பாதிப்பு, உட்கட்டுமான பாதிப்பு, வேலை செய்யும் வயதினரிடையே பாதிப்பு , குடும்பத் தலைவர்கள் இழப்பு, தங்கி வாழ்வோர் எண்ணிக்கை உயர்வு போன்றவை தன்னிறைவுப் பொருளாதாரத்தைப் பாதிப்படையச் செய்து வறுமை நிலைக்குத் தள்ளியுள்ளது.

# நிபந்தனையின்றியே ஜி.எஸ்.பி. வரிச்சலுகை

## நிதி அமைச்சர் பெருமிதம்



கொழும்பு, ஜன.14

ஐரோப்பிய ஒன்றியத்தின், ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகை எந்த நிபந்தனைகளும் இன்றியே வழங்கப்பட்டுள்ளது. நிபந்தனையுடன்தான் அது வழங்கப்படுகின்றது என்று கூறப்படுவதில் எந்த விதமான உண்மையும் இல்லை.

இவ்வாறு நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை, இலங்கை இன்னும் ஒன்றரை மாதங்களுக்குள் பெற்றுக் கொள்ளும்.

இதன் மூலம், இலங்கையில் இருந்து ஐரோப்பிய ஒன்றியத்துக்கு ஏற்றுமதியாகும் பொருள்களுக்கு 11 வீத வரிச் சலுகை கிடைக்கும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, கடுமையான நிபந்தனைகள் மற்றும் கண்காணிப்புடனேயே இலங்கைகக்கு ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகை வழங்கப்படுகிறது என்று ஐரோப்பிய ஆணையம் வெளியிட்டிருந்த அறிக்கையில் கூறப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# விளக்கமறியல்கள் நீடிப்பு

கொழும்பு, ஜன.14

அமெரிக்காவுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவர் ஜாலிய விக்ரமசூரியவின் விளக்க மறியல் எதிர்வரும் 27 ஆம் திகதி வரையில் நீடிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே கொழும்பு கோட்டை நீதிவான் லங்க ஜயரத்ன இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். விக்ரமசூரிய, நிதி மோசடி விசாரணை பிரிவினரால் கடந்த வருடம் நவம்பர் மாதம் 18 ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

ஜாலிய அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவராக கடமையாற்றிய காலத்தில் மேற்கொண்ட நிதி மோசடிகள் தொடர்பில் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை,

முன்னாள் பிரதி அமைச்சர் சரத் குமார குணரத்னவை எதிர்வரும் 20 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே கொழும்பு பிரதான நீதிவான் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

முன்னாள் பிரதி அமைச்சர், குற்றப் புலனாய்வுப் பிரிவால் கடந்த 2 ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

நீர்கொழும்பு கடல் நீரேரி வளர்ச்சி யோசனை நடவடிக்கைக்கு வழங்கிய 112 லட்சம் ரூபாவை மோசடி செய்த குற்றச்சாட்டு தொடர்பிலேயே அவர் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கஞ்சா வைத்திருந்த நபருக்கு மறியல்

பருத்தித்துறை, ஜன.14

கரவெட்டி அத்துளு அம்மன் கோவிலடிப் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் உடைமையில் கஞ்சா வைத்திருந்தமையின் அடிப்படையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கடந்த புதன்கிழமை இந்தப் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் உடைமையில் ஆறு கிராம் கஞ்சாவை வைத்திருந்த நிலையில் நெல்லியடிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு அன்றைய தினமும் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் நீதிவான் நளினி கந்தசாமி முன்னிலையில் முற்படுத்தப்பட்டார். அவரை எதிர்வரும் 25 ஆம் திகதி விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ஐ-40)


## வட மாகாண முதலமைச்சரின் அமைச்சின் அறிவித்தல்

**தைப்பொங்கல் திருநாளுக்கு அடுத்த நாளான பட்டிப் பொங்கல் தினத்தன்று வட மாகாணத்தில் உள்ள இறைச்சிக் கடைகள் அனைத்தையும் மூடுதல்**

தமிழர் திருநாளாக விளங்கும் தைப்பொங்கல் தினத்துக்கு மறுநாள் உழவுக்குக் கைகொடுத்த இடபங்கள் மற்றும் பசுக்களுக்கு விழா எடுக்கும் நிகழ்வாகப் பட்டிப் பொங்கல் விழா தொன்று தொட்டு கொண்டாடப்பட்டு வருகின்றது. பூரண நிறை உணவாகிய தூய பசும் பாலையும், இரசாயனத் தீங்கில்லாத இயற்கைப் பசளையையும், உழவுத் தொழிலுக்கு உதவிகளையும் நல்கும் கால்நடைச் செல்வங்களுக்கு விழா எடுக்கும் அதே நாளில் அவற்றை இறைச்சிக்காகக் கொல்வது முரணான செயற்பாடாக உள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு வட மாகாணத்தில் உள்ள அனைத்து இறைச்சிக் கடைகளும் ஆண்டு தோறும் பட்டிப் பொங்கல் தினத்தன்று மூடியிருத்தல் வேண்டும் என வட மாகாண சபையின் 10.01.2017 ஆம் திகதியன்று நடைபெற்ற 82 ஆவது அமர்வில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இத் தீர்மானத்துக்கு அமைவாக நாளை 15.01.2017 ஆம் திகதி பட்டிப்பொங்கல் தினத்தன்று வட மாகாணத்தில் உள்ள அனைத்து இறைச்சிக் கடைகளும் மூடப்பட வேண்டும் என அறிவிக்கப்படுகின்றது.

முதலமைச்சரின் அமைச்சு,
வட மாகாணம்.

**திருமதி வி.கேதீஸ்வரன்**
செயலாளர்.


# அம்பாந்தோட்டைத் திட்டத்தை தோற்கடிக்க வெளிநாட்டுச் சதி

## சந்தேகம் வெளியிட்டார் அமைச்சர் ரணதுங்க



கொழும்பு, ஜன.14

அம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்தித் திட்டத்தை தோற்கடிக்க வெளிநாட்டுச் சதி ஒன்று உள்ளது என்று துறைமுகங்கள், கப்பல் துறை அமைச்சர் அர்ஜுண ரணதுங்க சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

பதுரகொடவில் மத நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற அவர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

தாய்லாந்தில் சீனாவின் நிதியுதவியுடன் கால்வாய் அமைக்கும் பணி நிறைவடைந்தால், தெற்காசியாவின் முக்கியமான நாடு ஒன்று இலங்கைக்கான வர்த்தகத்தை இழக்கும். அந்த நாடுதான் அம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்தித் திட்டத்தை எதிர்க்கும் பின்னணியில் இருக்கிறது என்று எண்ணத் தோன்றுகிறது.

அந்தமான் கடல் வழியாகத் தாய்லாந்து வளைகுடாவையும், தெற்கு தாய்லாந்தையும், இணைக்கும் செயற்கைக் கால்வாய் ஒன்றை சீனாவின் நிதியுதவியுடன் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

21 ஆவது நூற்றாண்டுத் திட்டத்தின் ஒரு பகுதியாகவே இது அமைக்கப்படவுள்ளது.

கராகால்வாய் என்று அழைக்கப்படும் தாய் கால்வாய் பணிகள் முடிந்ததும், தென்சீனக் கடல் பகுதியில் இருந்து இந்தியப் பெருங்கடலுக்குள் செல்வதற்கான பயண நேரம் கணிசமாக குறையும்.

அவ்வாறு நடந்தால், குறிப்பிட்ட நாடு வழியாக இடம்பெறும் கப்பல்களின் பயணங்கள் குறையும். அம்பாந்தோட்டைக்கு வருவதற்கான பயண நேரம் ஐந்து நாள்களால் குறைவடையும்.

இந்தக் கால்வாயால், அம்பாந்தோட்டை மற்றும் கொழும்புத் துறைமுகங்கள் மேலும் பலமடையும்.

அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு எதிர்ப்புகள் எழுவதற்கு, அடையாளம் தெரியாத அந்த நாட்டின் சதியே காரணமாக இருக்கலாம்.- என்றார். (ஐ)

# வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்குமாறு அரசிடம் கோரிக்கை

## பிரதமருக்கு கடிதம் அனுப்பினார் செல்வம் எம்.பி.

மன்னார், ஜன.14

வடக்கு, கிழக்கு உட்பட நாட்டில் மழை இன்மையால் ஏற்பட்டுள்ள கடும் வறட்சியால் விவசாயிகள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு உடனடியாக நிவாரணம் மற்றும் நஷ்டஈட்டை வழங்க அரசு துரித நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாகப் பிரதமருக்குக் கடிதம் ஒன்றை நேற்று வெள்ளிக்கிழமை அவர் அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

வடக்கு, கிழக்கு உட்பட நாட்டில் மழை இல்லாமையால் குளங்களில் உள்ள நீர் வற்றிய நிலையில் காணப்படுகிறது. இதனால் விவசாயிகள் தமது விவசாயச் செய்கையைத் தொடர்ந்து மேற்கொள்ள முடியாத நிலையில் உள்ளனர்.

தமது விவசாய நடவடிக்கைகளுக்காக விவசாயிகள் வங்கியில் கடனைப் பெற்றுள்ளனர். தமது உடைமைகளை அடகு வைத்து , காணிப் பத்திரங்களை அடகு வைத்தும் பணம் பெற்று தமது விவசாய நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

நெற்பயிர்கள் வளர்ந்து வரும் நிலையில் மழை முற்றாக இல்லாத காரணத்தால் அவை கருகும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதனால் பல்வேறு துயரத்தை எமது விவசாயிகள் சந்தித்துக்கொண்டிருக்கின்றனர். தற்போது இலங்கை அரசு விவசாயிகள் பக்கம் தங்களுடைய பார்வையைத் திருப்பவேண்டும்.

விவசாயிகளுக்கு நிவாரணங்களை வழங்கி, அவர்களுக்கு நட்டஈட்டை வழங்கும் ஒரு திட்டத்தை இலங்கை அரசு உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.


விரைந்து நடவடிக்கை எடுக்கத் தவறும் பட்சத்தில் விவசாயிகள் தமது பயிர்ச்செய்கையின் அழிவு மற்றும்



தமது உடைமைகளை மீட்டெடுக்காத நிலை மற்றும் வங்கிக் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலை போன்ற வற்றால் துயரங்களை எதிர்கொள்ள நேரிடும்.

எனவே, இதனைத் தடுத்து நிறுத்துவதற்கான முயற்சிகளைப் புதிய அரசு செய்யும் என்று நம்புகிறோம்.- என்றுள்ளது. (ஐ)

# இளைஞர் சேவை அதிகாரிகள் கௌரவிப்பு



முல்லைத்தீவு, ஜன.14

2016 ஆம் ஆண்டில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் நடத்தப்பட்ட இளைஞர் அபிவிருத்தி வேலைத் திட்டங்களை முல்லைத்தீவு மாவட்டத்தில் சிறப்பாக மேற்கொண்டு மாவட்டத்துக்கும், வட மாகாணத்துக்கும் பெருமை ஈட்டிய இளைஞர் சேவை அதிகாரிகளுக்கான பாராட்டு விழா அண்மையில் மாங்குளத்தில் அமைந்துள்ள தேசிய இளைஞர் சேவைகள் மன்ற மாவட்ட அலுவலகத்தில் இடம்பெற்றது.

அந்தவகையில் இளைஞர் முகாமை சிறப்புற நடத்தியமைக்காக செ.சுஜிதரன், இளைஞர் நாடாளுமன்றத்துக்கு அதிக வாக்களிப்பு வீதத்ததை உருவாக்கியமைக்காக ஜெ.சுகந்தன், க.சிந்துஜன், அ.ஜெயாளன் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வடமாகாண பணிப்பாளர் சரத் சந்திரபால, தேசிய இளை ஞர் சேவைகள் மன்ற முல்லைத்தீவு மாவட்ட உதவிப்பணிப் பாளர் திருமதி கே. சறோஜா, சேவைகள் மன்றத்தின் முல்லைத்தீவு மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி மா.சசிக்குமார் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

இதேவேளை, வவுனியா மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வவுனியா பிரதேச செயலகப் பிரிவுக்கு புதிய இளைஞர் சேவை அதிகாரி பதவியேற்றுள்ளார். இராமலிங்கம் சசிகரனே இவ்வாறு பதவியேற்று நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் 2012 ஆம் வருடம் தொடக்கம் கடந்த 2016 ஆம் ஆண்டுவரை செட்டிக்குளம் பிரதேச செயலகப் பிரிவின் இளைஞர் சேவை அதிகாரியாகக் கடமை புரிந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-81)

கோவில்குளம்இந்துக் கல்லூரி

# மரதன் ஓட்டத்தின் போது மயங்கி விழுந்த மாணவன்

## போட்டி நிறைவின்போது சம்பவம்

வவுனியா, ஜன.14

வவுனியா கோவில்குளம் இந்துக் கல்லூரியின் 2017 ஆம் ஆண்டுக்கான இல்ல விளையாட்டு போட்டியின் முதல் நிகழ்வாக ஆண் மற்றும் பெண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டியில் பங்குபற்றிய மாணவன் ஓட்டத்தை நிறைவு செய்த போது மயங்கி விழுந்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

நேற்று நடைபெற்ற மரதன் ஓட்டப் போட்டியின் போதே இந்தச் சம்பவம் இடம்பெற் றுள்ளது.

வவுனியா கோவில்குளம் இந்துக் கல்லூரி முன்பாக ஆரம்பித்த மரதன் ஓட்டம் மடுகந்தைவரை சென்று மீண்டும் பாடசாலை முன்பாக வந்து நிறைவடைந்தது.

இதன்போதே போட்டியில் பங்குபற்றிய மாணவன் ஒருவன் முடிவிடத்தை அடைந்த போது மயங்கி விழுந்தார். உடனடியாக அந்த மாணவனுக்கு முதலுதவிச் சிகிச்சையளிக்கப்பட்டது.

இதேவேளை, நிகழ்வை பழைய மாணவர் சங்கத்தின் முன்னாள் செயலாளரும் ஆசிரியருமான கே.நிரஞ்சன் மற்றும் பழைய மாணவர் சங்கத்தின் முன்னாள் பொருளாளரான எஸ்.தவச்செல்வன் ஆகியோர் ஆரம்பித்து வைத்தனர்.

கல்லூரியின் மரதன் ஓட்டத்தில் வெற்றிபெற்ற மாணவர்களான கே.நிசாந்தன், கே. நிசோபன் மற்றும் இ.கிரிதரன் ஆகியோருக்கான வெற்றி கேடயங்களை கல்லூரியின் அதிபர் ரீ.பூலோகசிங்கம் வழங்கினார்.

மரதன் ஓட்டத்தில் வெற்றி பெற்ற பெண்களுக்கான பிரிவில் எஸ்.தினோதியா, சா.சானுஜா மற்றும் எஸ்.சரணியா ஆகியோருக்கான வெற்றி கேடயத்தை கல்லூரி யின் பிரதி அதிபர் திருமதி. பி.உதயசேகரம் வழங்கினார். ஆண்கள் பிரிவில் முதலாம் மற்றும் இரண்டாம் இடங்களை வெற்றி பெற்ற மாணவர்கள் இருவரும் இரட்டையர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-100)

# தண்ணிமுறிப்புக் குளத்தில் மீனவர் உடைமைகள் அழிப்பு

முல்லைத்தீவு, ஜன.13

முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைத்துறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட தண்ணி முறிப்புக் குளத்தில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடும் மீனவர்களின் மீன்பிடிப் படகு ஒன்று இனந்தெரியாதவர்களால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மோட்டார் சைக்கிள் ஒன்றும் சேதமாக்கப்பட்டு குளக்கட்டில் இருந்து தூக்கி வீசப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெலிஓயாப் பகுதியில் இருந்து வந்தவர்களாளேயே இவ்வாறான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று பிரதேச மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

தமது உடைமைகளைப் பாதுகாக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாதிக்கப்பட்ட மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ-81)

# மாணவர்களின் கல்வி வளர்ச்சி என்பது ஆசிரியர்களிடம் மட்டும் தங்கவில்லை

## வடக்கு மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம்

யாழ்ப்பாணம், ஜன.13

ஒரு மாணவனின் கல்வி வளர்ச்சி என்பது வெறுமனே ஆசிரியர்களில் மாத்திரம் தங்கியிருப்பதில்லை என்பதைப் பெற்றோர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், தற்போதைய வடக்கு மாகாண சபை உறுப்பினருமான எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

யாழ். கோண்டாவில் சி.சி. த.க. பாடசாலையில் தரம்-01 மாணவர்களை வரவேற்கும் கால்கோள் விழாவும், தளபாடங்கள் கையளிப்பும், நேற்று முன்தினம் புதன்கிழமை அதிபர் சி.நந்தகுமார் தலைமையில் இடம்பெற்றது.

இதன் போது பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவித்தவை வருமாறு:-

பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவச் செல்வங்கள் ஆகிய மூன்று தரப்பினரும் ஒருங்கிணைந்து செயற்படும் போது தான் பாடசாலைக் கல்வியில் மாத்திரமல்லாமல் ஏனைய விளையாட்டு போன்ற இணைப்பாட விதானச் செயற்பாடுகளிலும், போட்டிகளிலும் மாணவர்களால் சிறந்து விளங்க முடியும். சிறிய பாடசாலைகள் பல தற்போது 20 அல்லது 25 மாணவர்களுடன் மூடப்படுகின்ற நிலைமையில் காணப்படுகின்றன.

இவ்வாறானதொரு சூழலில் இந்த பாடசாலையில் அதிகளவு மாணவர்கள் சிறப்பான பெறுபேறுகளைப் பெற்று கல்வி கற்று வருவது மகிழ்ச்சிக்குரிய விடயம்.

வடக்கு மாகாண சபை பாடசாலைகளின் அபிவிருத்திக்கு உதவி புரிந்து வருகிறது. வடக்கு மாகாண சபை உறுப்பினர்களாகிய நாம் எமக்கென ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் பாடசாலைகளுக்கு எம்மால் இயன்ற பங்களிப்பை வழங்கி வருகிறோம். இந்தப் பங்களிப்பு தொடர்ச்சியாக இடம்பெறும்.- என்றார். (ஐ)

## பிணை முறி மோசடிகள் தொடர்பாக நாடாளுமன்றில் தகவல் கூறப்படும்

### அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவிப்பு

கொழும்பு, ஜன.14

மத்திய வங்கியின் பிணை முறி மோசடிகள் தொடர்பான தகவல்களைவெளியிடவுள்ளார் என்று கோப் குழுவின் பிரதிநிதியான அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 24 ஆம் திகதி நாடாளுமன்றத்தில்இடம்பெறவுள்ள விவாதத்தின் போது இந்தத் தகவல்களை வெளிப்படுத்த உள்ளார் என்று அவர் கூறியுள்ளார்.பிணை முறி மோசடியின் காரணமாக நாட்டுமக்களின்பணமே வீணாக்கப்பட்டுள்ளது.

இதனால், இந்த விடயத்துடன் தொடர்புடையவர்களுக்குத் தண்டனை கிடைக்கும்வரை ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி என்ற அடிப்படையில் தொடர்ந்து போராடவுள்ளோம் என்றும் பிணை முறி விவகாரத்தில் எவரும் தப்பிச் செல்ல முடியாது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

## இன்புளுவன்சா நோய் தொடர்பில் வீணாகப் பீதி கொள்ள வேண்டாம்

### கண்டி பொது வைத்தியசாலையின் விசேட வைத்தியர் தெரிவிப்பு

இன்புளுவன்சா ஏ எச்1 என்1 நோய் தொடர் பில் வீணாக பீதி ஏற்ப டுத்திக் கொள்ளத் தேவையில்லை என்று கண்டி பொது வைத்தியசாலை தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாகக் கண்டி பொது வைத்தியசாலையின் விசேட வைத்தியர் துஷ்மந்த மெதகெதர தெரிவித்துள்ளவை வருமாறு:-

சிறுவர்கள், கர்ப்பிணிப் பெண்கள், முதியவர்கள், நீண்ட கால நோய்களால் பாதிக்கப் பட்டுள்ளவர்கள் போன்றவர்களுக்கு இந்த நோய்த் தாக்கம் அபாயத்தை ஏற்படுத்தும்.

கண்டி பொது வைத்தியசாலையில் சிறுநீரகப் பிரிவில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்த 3 நோயாளர்கள் அண்மையில் உயிரிழந்திருந்தமை தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் அவர்களுக்கு இன்புளுவன்சா ஏ எச்1 என்1 நோய் ஏற்பட்டிருந்தமை பரிசோதனைகளை அடுத்துத் தெரியவந்துள்ளது.

எனினும், இந்த நோய் தொடர்பாக வீண் பீதி தேவையில்லை என்று கூறியுள்ளார்.

தற்போது அந்த நோய்த் தொற்றைத் தடுப்பதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று கண்டி பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் சமன் ரத்நாயக்க கூறியுள்ளார்.

இன்புளுவன்சா ஏ எச்1 என்1 நோய் மற்றும் பறவைக் காய்ச்சல் நோய் ஆகியவற்றுக்கு இடையில் எந்தவித தொடர்புகளும் இல்லை என்று மிருக வைத்திய பிரிவின் கால்நடை வைத்திய அதிகாரி டிகிரி விஜேதிலக கூறியுள்ளார்.

இதுவரை இலங்கையில் பறவைக் காய்ச்சல் நோய் தொடர்பில் எந்த விதமாக பதிவுகளும் இடம் பெறவில்லை என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

## மஹா கணபதி ஹோமம்

தென்மராட்சி, ஜன.14

உசன் கஜகேணி விநாயகர் ஆலயத்தில் மஹா கணபதி ஹோமம் நாளை ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

மஹா கணபதி ஹோமமானது நாட்டில் சாந்தி, சமாதானமும், சுபீட்சம் நிலவ வருடந்தோறும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மஹா கணபதி ஹோம யாகம் உசன் கந்தசுவாமி ஆலய பிரதம குரு சிவஸ்ரீ இ.கேதீஸ்வர குருக்கள் தலைமையில் இடம்பெறவுள்ளது.

காலை 8 மணிக்கு அபிஷேகம், ஆராதனைகளுடன் ஆரம்பமாகி ஹோமம் இடம்பெற்று விநாயகர் வீதியுலா வருவார். நிறைவாக அன்னதானம் இடம்பெறவுள்ளது. (ஐ-23)

## நல்லூர் சந்திரசேகரப் பிள்ளையார் அறநெறிப் பாடசாலை ஆரம்பம்





நல்லூர், ஜன.14

நல்லூர் வடக்கு சந்திரசேகரப் பிள்ளையார் கோயில் அறநெறிப் பாடசாலை ஆரம்ப நிகழ்வும் திருவெம்பாவை பஜனைகுழுவில் பங்குபற்றிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வும் நேற்று முன்தினம் சந்திரசேகர பிள்ளையார் கோயில் மண்டபத்தில் இடம்பெற்றன.

ஆலய பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ சதா யோகீஸ்வரக் குருக்களின் அருளாசியோடும் ஆலய குருக்கள் சிவஸ்ரீ முத்து ஸ்ரீநிவாசகக் குருக்களின் ஆசியுரையுடனும் ஆரம்பமான நிகழ்வில், ஆலய அறங்காவற் குழுத் தலை வரும் வடக்கு மாகாணசபையின் அவைத் தலைவருமான சி.வீ.கே.சிவஞானம், இந்து கலாசாரத் திணைக்கள யாழ். மாவட்ட செயலக உத்தியோகத்தர் ந.உதயபாலன் ஆகியோர் அறநெறிப் பாடசாலையை அங்குரார்ப்பணம் செய்து வைத்தனர்.

இந்தநிகழ்வில் திருவெம்பாவை பஜனை குழுவில் பங்குபற்றிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன.

இதன் போது உரையாற்றிய வடக்கு மாகாணசபையின் அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம், ஆலயங்கள் வழிபாடுகளோடு மட்டும் நின்று விடா. சமய சமூகப் பணிகளில் ஈடுபடுவது காலத்தின் தேவையாகும். சமய அறிவுடன் ஒழுக்க நெறியையும் கற்பித்து நல்ல சமூகத்தை உருவாக்க வேண்டும்- என்றார்.

இந்து கலாசாரத் திணைக்கள யாழ். மாவட்ட செயலக உத்தியோகத்தர் ந. உதயபாலன் உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு:-

ஆலயங்கள் ஒவ்வொன்றினதும் பிரச்சினைகளைக் கேட்டு பார்த்து எமது சமயம் எங்கு செல்கின்றது என சைவமக்களாகிய நாம் கவலைப்படும் வேளையில் இவ்வாறான நிகழ்வுகள் வரவேற்கப்பட வேண்டியவை- என்றார்.

இந்த நிகழ்வில் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஐ)

## மாதகல் கரையோரத்தில் 28 கிலோ கஞ்சா மீட்பு!

யாழ்ப்பாணம், ஜன.14

மாதகல் கடல் பிரதேசத்தில் இருந்து நேற்று முன்தினம் அதிகாலை கடற்படையினரால் 28 கிலோ கிராம் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

அந்தக் கஞ்சாவைக் கடற்படையினர் காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

மாதகல் குஸ்மாந்துரைப் பகுதியில் ஆழமற்ற கடல் பகுதியில் மிதந்த ஒரு பொதியில் சந்தேகம் கொண்ட கடற்படையினர் அதனை மீட்டு சோதனை மேற்கொண்டுள்ளனர்.

அவ்வாறு சோதனையிட்ட பொதியினுள் கேரளாக் கஞ்சா இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இவ்வாறு ஒரு கஞ்சாப் பொதி மீட்கப்பட்டதை அடுத்துக் கரையோரத்தில் கடற்படையினர் சோதனை மேற்கொண்டனர். அதன் போது மேலும் 5 பொதிகள் மீட்கப்பட்டுள்ளன.

இவ்வாறு மொத்தமாக மீட்கப்பட்ட கஞ்சாவின் நிறை 28 கிலோ என்று கடற்படை அதிகாரி தெரிவித்துள்ளார்.

கைப்பற்றப்பட்ட 28 கிலோ கிராம் கஞ்சாவும் காங்கேசன்துறை பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டுள்ளது என்று மேலும் தெரிவிக்கப் பட்டது. (ஐ)

## கலைஞர்கள் நன்மை பெறும் வகையில் மாவட்ட, பிராந்திய கலாசார சபைகள்!

### யாழ். அரச அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.14

சகல கலைஞர்களும் நன்மை பெறும் வண்ணம் பாகுபாடு இன்றி மாவட்ட, பிராந்திய கலாசார சபைகள் உருவாக்கப்பட்டுள்ளன என்று யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

மாவட்ட கலாசார அதிகார சபை அங்குரார்ப்பண நிகழ்வும், 2017 ஆம் ஆண்டுக்கான கலாசார அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடலும் நேற்றுமுன்தினம் யாழ். மாவட்ட செயலகத்தில் அரச அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தலைமையுரையை நிகழ்த்தும் போது இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பாகுபாடு இன்றி சகல கலைஞர்களும் நன்மை பெறும் வண்ணம் மாவட்ட, பிராந்திய, கலாசார சபைகள் உருவாக்கப் பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்திலுள்ள கலைஞர்களுக்கு ஒரு குறை இதுவரைக்கும் இருந்து வந்துள்ளது. அதாவது கலாபூஷணம் விருதுக்காகப் பெரும்பாலும் நகரை அண்டிய கலைஞர்களே தெரிவு செய்யப்படுகின்றனர். கிராமிய மட்டத்திலுள்ள கலைஞர்கள் நிராகரிக்கப்படுகின்றனர் என்று அவர்கள் எண்ணுகின்றனர்.

இவற்றுக்கு முற்றுப்புள்ளி வைக்கவே மாவட்ட, பிராந்திய கலாசார சபைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

இதன் மூலம் திரை மறைவிலுள்ள கலைஞர்களும் வெளிச்சத்துக்குக் கொண்டு வரப்படுவார்கள். இந்தச் சபைகள் மூலமாகத் தெரிவு செய்யப்படும் கலைஞர்களின் பெயர்கள் அந்தப் பிரதேச செயலகத்தால் கலாசார அலுவல்கள் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

மேலும் இவ்வருடம் கலைஞர்களை ஊக்குவிக்கும் வண்ணம் உதவித் திட்டங்களையும் முன்னெடுக்க உள்ளோம். ஓய்வூதியம், வறிய கலைஞர்களுக்கு உதவித் தொகைகள் , அடையாள அட்டை வழங்குதல் போன்ற திட்டங்களையும் முன்னெடுக்கவுள்ளோம்.

இதன் முதல் கட்டமாகக் கலைஞர்களை இனம் காண இந்த அங்குரார்ப்பண வைபவம் நடைபெறுகின்றது. இவற்றைத் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளால் கலைஞர்கள் நன்மை பெற முடியும்.-என்றார்(ஐ-54)

# ரின் மீன் இறக்குமதி கடந்த வருடம் வீழ்ச்சி!

கொழும்பு, ஜன.14

இலங்கைக்கான ரின் மீன் இறக்குமதி 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது கடந்த வருடம் வீழ்ச்சி கண்டுள்ளது. அதாவது 16.2 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது.

இந்தநிலையில் 2015 இல் 49 ஆயிரத்து 16 மெற்றிக் தொன் ரின் மீன் மாத்திரமே இறக்குமதி செய்யப்பட்டிருந்தது.


தாய்லாந்து, சிலி, தாய்வான், ஜப்பான், சீஷெல்ஸ், யெமன், மாலைதீவு போன்ற நாடுகளிலிருந்தும் சீனாவிலிருந்து கூடுதலான ரின்மீன் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை ரின்மீன் இறக்குமதிக்காகக் கடந்த ஆண்டில் அரசு 788 கோடி ரூபாவைச் செலவிட்டிருந்தது. 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது இது 8.5 சதவீத வீழ்ச்சியாகும். (எ)

# வறட்சியால் காட்சி தரும் பழைய மஸ்கெலியா நகர்!

நுவரெலியா, ஜன.14

மத்திய மலைநாட்டில் கடுமையான வறட்சி காரணமாக மஸ்கெலியா, மவுஸாகலையின் நீர் மட்டம் மிகவும் விரைவாகக் குறைவடைந்துள்ளது என தெரிவிக்கப்படுகின்றது.



இந்தநிலையில், தொடர்ந்து நீரில் மூழ்கியிருந்த பழைய மஸ்கெலிய நகரில் பௌத்த விகாரையின் புத்தர் சிலை, ஸ்ரீ கதிரேஷன் இந்துக் கோயில், கற்பாலம், முஸ்லிம் பள்ளிவாசல் மற்றும் தேவி கோயில்கள் என்பன வெளியே தெரிகின்றன. வறட்சியான காலத்தில் பழைய நகரம் காட்சி தருவது வழமையாகும்.

இதேவேளை, மவுஸாகலை மற்றும் காஸல்ட்ரீ ஆகியவைகளின் நீர் மட்டம் நேற்று முன்தினம் 35 அடியில் இருந்து 18.05 அடிவரை குறை வடைந்துள்ளன எனவும் லக்ஷபான நீர் மின்சாரத் தொகுதியின் உயர் அதிகாரி தெரிவித்துள்ளார்.

தேசிய நீர்மின்கட்டடத்துக்கு சொந்தமான, லக்ஷபான நீர் மின் உற்பத்தி நிலையம் லக்ஷபான, பொல்பிட்டி, விமலசுரேந்திர மற்றும் கெனியோன் ஆகிய நீர் மின்சார நிலையங்கள் ஐந்துக்கும் பிரதான நீர் வழங்கு நீர்த் தேக்கங்களாக மவுஸாகலை மற்றும் காஸல்ட்ரீ நீர்த்தேக்கங்கள் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ)

## தினசரி ராசி பலன் 14.01.2017

**துர்முகி வருஷம் தைமாதம் 1 ஆம் திகதி சனிக்கிழமை துவிதீயை பகல் 12.49 வரை பின்னர் திரிதியை ஆயிலியம் இரவு 10.55 வரை பின் மகம். மரணயோகம் இரவு 10.55 வரை. சுபநேரம் மாலை 3.36 முதல் 5.06 வரை தைப் பொங்கல் பண்டிகை கரிநாள்.திவசம் செய்ய வேண்டிய திதி : தைமாத தேய்பிறை திரிதியை**

"ஜோதிடமனி" பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி

**மேஷம்:** இன்று சஞ்சலம் நிறைந்த நாள். மனம் குழப்பமடையும். பொருளாதாரம் நலிவடையும். உறவினர், நண்பர்கள் பகைமை உண்டாகும். எண்ணிய கருமம் தடைப்படும். செலவுகள் அதிகரிக்கும்.

**ரிஷபம்:** இன்று விருத்தியான் நாள். செய்யும் தொழில், வியாபாரம் விருத்தி அடையும். நினைத்த காரியம் நிறைவேறும். உறவினர், நண்பர்கள் சகாயம் கிடைக்கும்.

**மிதுனம்:** இன்று ஆக்கபூர்வமான நாள்.உடலாரோக்கியம் சிறப்பாக இருக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி, ஒற்றுமை மேலோங்கும். சுயதொழில் ஆதாயம் கிடைக்கும். நண்பர்கள் ஒத்துழைப்பார்கள்.

**கடகம்** : இன்று அனுகூலமான நாள். வியாபாரம் பல்கிப் பெருகும். உத்தியோகத்தில் விரும்பிய உயர்வுகள் கிடைக்கும். நினைத்த காரியம் இலகுவில் நடக்கும்.

**சிம்மம்** : இன்று அலைச்சல் மிகுந்த நாள். கொடுத்த பணத்தை மீளப் பெறுவதற்கு அலைந்து திரிவார்கள். சிலர் வெளிநாடு செல்வதற்கு முகவர்களின் உதவியை நாடுவார்கள்.

**கன்னி:** இன்று கீர்த்தியான நாள் ஆகும். குடும்பத்தில் இனிய சூழல் நிலவும். வியாபாரத்தைப் புதிய நுணுக்கமுறைகளைக் கையாண்டு விரிவுபடுத்துவார்கள்.

**துலாம்:** இன்று சமபலன்கள் காணப்படுகின்றன. செலவீனங்கள் அதிகரிக்கும். புதிய முயற்சிகளைத் தள்ளிப் போடவும். வியாபாரத்தில் மத்திம முன்னேற்றம் காணப்படும்.

**விருச்சிகம்:** இன்று இனிமையான நாள். பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். சிலருக்குத் திருமண வாய்ப்புகள் கனிந்துவரும். பெண்களுக்கு ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டாகும்.

**தனுசு:** இன்று யோசனை மிகுந்த நாள் ஆகும். உறவினர், நண்பர்களுடன் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். எண்ணிய கருமம் தோல்வியில் முடியும். உத்தியோகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும்.

**மகரம்:** இன்று மத்திம பலன்கள் காணப்படுகின்றன. ஆடம்பரச் செலவுகளைக் குறைப்பது நன்று. நண்பர்கள், உறவினர்களின் ஒத்துழைப்பு ஓரளவு கிடைக்கும். எடுக்கும் முயற்சிகள் தடை, தாமதமாகும்.

**கும்பம்:** இன்று அதிஷ்டமான நாள். வியாபாரம் நன்கு செழிப்படையும். உத்தியோகத்தில் விரும்பிய இடமாற்றம், பதவி உயர்வு கிடைக்கும். பூர்வீகச் சொத்துகள் கைக்கு வந்து சேரும் வெளிநாட்டுப் பயணம் அனுகூலமாகும்.

**மீனம்:** இன்று மேன்மையான நாள் ஆகும். குடும்ப உறவு மேம்படும். உத்தியோக மேன்மை உண்டாகும். சுயதொழிலில் மேன்மை உண்டாகும். வியாபாரம் அபரிமிதமான வளர்ச்சி அடையும். சகோதர உறவு வலுவடையும்.

சந்திராட்டம நாள் : மூலம், பூராடம், உத்தராடம் முதலாம் பாதம் இவர்கள். நற்கருமங்கள் பிரயாணம் என்பவற்றை இந்நாளில் தவிர்க்கவும்.

# நாட்டின் பொருளாதாரத்தை பலி கொடுத்துவருகிறது அரசு

### சோசலிசக் கட்சி உறுப்பினர் புபுது ஜாகொட சாடல்

கொழும்பு, ஜன.14

தற்போதைய அரசு வெளிநாட்டு முதலீடுகளை இலங்கைக்குக் கொண்டு வருவதற்காக நாட்டின் பொருளாதாரத்தில் உள்ள அனைத்தையும் பலிகொடுத்து வருகிறது என்றும் இது அம்பாந்தோட்டையில் தற்போது உறுதியாகி இருப்பதாகவும் முன்னிலை சோசலிசக் கட்சியின் அரசியல் சபை உறுப்பினர் புபுது ஜாகொட தெரிவித்துள்ளார்.

கொழும்பு மருதானையில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை கூறியுள்ளார்.

இதுதொடர்பில் அவர்மேலும் கூறியவை வருமாறு:

''சீனாவின் முதலீட் டுக்காக அம்பாந்தோட்டை துறைமுகத்தை மாத்திரமல்ல, மக்களின் காணிகளையும் அரசு பலி கொடுத்து வருகிறது.

''நாட்டில் தற்போது பொருளாதார அபிவிருத்தி என்ற பெயரில் பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

''அரசு அண்மையில் அபிவிருத்தித் திட்டம் என்று கூறி பல்வேறு திட்டங்களை ஆரம்பித்தது. இவற்றின் உண்மை சரியாக வெளிவரவில்லை. வெளிப்படையான நிலைமை இல்லை.

''கடந்த அரசுகளைப் போல் பொய்க்கு மேல் பொய் கூறும் செயற்பாடுகளே இங்கு நடைபெறுகின்றன.''-என்றார்.(எ)

# குளிர் காலநிலை தொடரும்!

கொழும்பு, ஜன.14

நாட்டின் பல பாகங்களிலும் காலை மற்றும் இரவு வேளைகளில் குளிருடனான காலநிலை தொடர்ந்து நீடிக்கும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

மேலும், அதிகாலை நேரங்களில், நுவரெலியா மாவட்டத்தின் சில இடங்களில் உறைபனி காணப்படும் என்று திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேற்கு, சப்ரகமுவ மாகாணம், தெற்கு மற்றும் மத்திய மாகாணங்களில், குறிப்பாக காலை வேளைகளில் பனி மூட்டம் காணப்படும் என்று திணைக்களம் அதன் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. (எ)

# முஸ்லிம் பேரவை பிரதிநிதிகள் அமெ.தூதுவருடன் சந்திப்பு

கொழும்பு, ஜன.14

இலங்கை முஸ்லிம் பேரவையின் பிரதிநிதிகள், இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அதுல் கேசப்பை சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர்.

இலங்கை வாழ் முஸ்லிம்கள் அண்மைக் காலமாக எதிர்கொள்ளும் நெருக்கடிகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பில் இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டுள்ளன.

குறிப்பாகச்சிங்கள-பௌத்த கடும்போக்கு வாதிகள் சிலரால் சிறுபான்மை மக்களுக்கு எதிராக நடத்தப்படுகின்ற வன்முறைகள் மற்றும் அழுத்தங்கள் தொடர்பில் அமெரிக்கத் தூதுவருக்கு விளக்கமளிக்கப் பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போரின் பின்னரான மீளமைப்புச் செயற்பாடுகள் தொடர்பில் அரசுடன் இணைந்து அமெரிக்கா பல வேலைத்திட்டங்களை முன்னெடுக்க உள்ளது என அமெரிக்கத் தூதுவர் இதன் போது குறிப்பிட்டுள்ளார். (எ)

# குவைத் 'வடனியா' விமானசேவை இலங்கைக்கு!



கொழும்பு, ஜன.14

குவைத் நாட்டின் தேசிய விமான சேவைகள் மூன்றில் ஒன்றான வடனியா விமான சேவை, இலங்கைக்கான விமானப் பயணங்களை ஆரம்பிக்கவுள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

குவைத் விமான சேவையும் இலங்கைக்கான விமானப் பயணங்களைத் தொடர்ந்து முன்னெடுத்துவரும். என்றாலும் பிரயாணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் புதிய விமான சேவை ஒன்றை இணைக்கும் தேவைப்பாடு காணப்படுகிறது எனவும் தெரி விக்கப்படுகிறது.

இதன் காரணமாகவே புதிய விமான சேவை ஒன்றை இணைக்கும் தேவைப்பாடு காணப்படுகிறது எனத் தகவல்கள் வெளியாகி உள்ளன. (எ)

# இருதய நோயால் தினமும் இறக்கின்றனர் 150 பேர்!

கொழும்பு, ஜன.14

இலங்கையில் இருதய நோயால் நாளாந்தம் 120 முதல் 150 பேர் வரையில் மரணிக்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் இருதய சிகிச்சைப் பிரிவின் நிபுணர் வைத்தியர் நாமல் கமகே இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும்தெரிவித்தவை வருமாறு:


''அதிக இரத்த அழுத்தம் மற்றும் மன உளைச்சல் போன்ற காரணங்களால் இருதய நோயாளர்கள் அதிகரிக்கின்றனர்.

''இதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். சீரான வாழ்க்கை முறையின் ஊடாகவே இதனைச் சரிப்படுத்த முடியும்.''-என்றார். (எ)

காலைக்கதிர்
Kalaikkathir



# நல்லிணக்கம் பொங்கட்டும்!



இலங்கைத் திருநாட்டில் வாழும் தமிழ் மக்களுக்கு மட்டுமன்றி புலம்பெயர்ந்து வாழும் எம் மக்களுக்கும் தைப்பொங்கல் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்வெய்துகின்றேன்.

உழவர்திருநாள், தமிழர்பெருநாள் என்றெல்லாம் பெருமைப்படும் தைத்திருநாளான இன்று தமிழ்கூறும் நல்லுலகம் எங்கும் இத் தைப்பொங்கல் விழா மகிழ்வுடன் கொண்டாடப்படுகின்றது.

இப்பூவுலகில் சூரியபகவானால் பருவகாலங்கள் உண்டாகின்றன. அவற்றுள் மாரிகாலம் வழங்கும் மழையினால் பயிர்கள் விளைகின்றன. மாரிகால ஆரம்பத்தில் விதைக்கின்ற பயிர் வகைகள் யாவும் மழை வீழ்ச்சிக் காலத்தில் வளர்ந்து, முற்றி தை மாதத்தில் அறுவடை செய்யப்படுகின்றன.

அந்தவகையில் எமக்குத் தேவையான உணவுப் பொருள்களை விளைவிக்க உதவிடும் சூரிய பகவானை வரவேற்று தை முதல் நாளில் பூரணகும்பம் வைத்து புதிய அடுப்பில் புதுப் பானை வைத்து புதிதாகஅறுவடைசெய்தஅரிசியில் பாற்பொங்கல் பொங்கிப் படைத்து நன்றிக் கடன் செலுத்தும் திருநாளே, தைப்பொங்கல் திருநாளாகும்.


தைமாதம் பிறக்கும் ஆண்டு தொடக்கம் மக்களுக்குப் பல எதிர்பார்ப்புக்களை உருவாக்கும். அந்தவகையில் தமிழரின் எதிர்பார்ப்பாக முன் வைக்கப்படவுள்ள அரசமைப்பானது நீண்ட காலமாகத் தீர்க்கப்படாதுள்ள தேசிய இனப் பிரச்சினைக்கு நியாயமானதும் நீடித்து நிலைத்திருக்கக் கூடியதுமான தீர்வைக் காண வழிகாட்ட வேண்டுமெனவும், அது இலங்கை வரலாற்றில் ஒருதிருப்புமுனையாக அமைந்திட வேண்டுமெனவும், இதயசுத்தியுடனான இன நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டுமெனவும் இந் நன்னாளில் நாம் நம்பிக்கை கொள்வோம்.

எதிர்பார்ப்புக்களும் சவால்களும் நிறைந்த ஆண்டொன்றினுள் காலடி வைத்துள்ள இத்தருணத்தில் இலங்கை வாழ் மக்களிடையே புரிந்துணர்வு, நல்லிணக்கம் ஏற்பட்டு சாந்தி, சமாதானத்துடன் கூடிய சௌபாக்கியமிக்க நாடாக இந்நாடு சிறப்புற, பிறக்கும் தைத்திங்கள் வழி சமைத்திட வேண்டுமென எனது உளம் நிறைந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதோடு எல்லாம் வல்ல இறைவனையும் பிரார்த்திக்கின்றேன்.

**இரா.சம்பந்தன்,**
**எதிர்க்கட்சித் தலைவர்,**
**தலைவர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு**



# நல்லை ஆதீனத்தின் பொங்கல் அருளாசி



இன்று தமிழர் திருநாளாம் இனிய தைப்பொங்கல் நன்னாள். இது எல்லோருக்கும் இன்பத்தையும் மகிழ்ச்சியையும் அள்ளி அள்ளிக் கொடுக்கின்ற அற்புதத் திருநாள். ஆனந்தமான, அற்புதமான, நல்ல மகிழ்ச்சியான, மகோன்னதமான, நல்ல உயர்வைத் தருகின்ற, இனிப்பான பொங்கல் திருநாள்.

இதுநாள் வரைபட்ட துன்பங்களையும் துயரங்களையும் களைந்து, நல்ல மங்கலகரமான தைப்பொங்கல் பொங்கி சூரியனுக்குப் படைத்து வணங்கி மகிழும் மங்கல நாள்.

தமிழர்கள் வாழ்வில் ஒரு நல்ல விடிவைத் தருகின்ற இன்றைய தைப்பொங்கலை வரவேற்று, நல்ல புதுப்பானையிலே புத்தரிசி போட்டு சர்க்கரை, பால், தேன், நெய், கஜு, முந்திரிவற்றல் எல்லாம் சேர்த்து இனிப்பாய்ப் பொங்கிப் படைத்து, நம் இதயம் மகிழச்செய்யும் மங்கல வாழ்வில் நல்ல முன்னேற்றம் வர வேண்டும் என்று அருளாசிகள் நல்கி வாழ்த்துகின்றோம்.

இலங்கை மண்ணில் வாழ்கின்ற தமிழ் மக்கள் அனைவருமே ஆனந்தமயமான வாழ்வில் உயர்வைக்கண்டு, உள்ளம் பூரித்து, உன்னதமான நிலையில் உள்ளம் உண்மையாய் உழைத்த உழவர்களும் எருதுகளும் பசுக்களும், நன்கு வாழ அருளாசிகள் வழங்கி வாழ்த்தி மகிழ்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த**
**பரமாச்சாரிய சுவாமிகள்.**
**குருமகா சந்நிதானம்,**
**நல்லை ஆதீனம்.**

# செஞ்சொற்செல்வரின் ஆசிச்செய்தி




இறைவனின் இனிய படைப்பு இவ்வுலகம். இயற்கையை இனிய தெய்வங்களாக வழிபட்டவர்கள் தமிழர்கள். இயற்கை எமக்குத் தந்த வாழ்வுக்கு நன்றி கூறும் நன்னாளாக தைத்திங்கள் நாளைப் போற்றி வழிபடும் மரபு தொடர்கிறது. பொங்கல் படைத்து வழிபாடு செய்யும் மரபு சைவத்தமிழ் மக்களின் மரபு என்பதை அனைவரும் அறிவர். தினம் கண்களால் கண்டு வழிபடும் இயற்கைத் தெய்வமாகிய பகலவனுக்கு தைப்பொங்கல் நாளில் பொங்கலைப் படைத்து மன்றாடுவதுடன் உறவை வலிமைப்படுத்தும் நாளாகவும் பேணி வருவது எம் பண்பாகும், பாடுபட்டு உழைக்கும் உழவர், தம் பெருமையை உணர்வுபூர்வமாக போற்றும் நாளாக இத்திருநாள் கொண்டாடப்படுகிறது.

இத்திருநாளில், தாம் வாழும் இல்லங்களின் முற்றத்தில் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றாக நின்று பொங்கிப் படைப்பதும், உறவினர்களுக்கு பகிர்ந்து கொடுத்துப் பரிமாறி உண்பதும், அன்பைப் பெருக்கி அயலை நேசித்தலும் வழக்கமாகும். எம் மூதாதையர்கள் தினமும் மண்ணைத் தொட்டுக் கும்பிட்டு வந்தார்கள். எம்மைத் தாங்கும் நிலத்தைப் பூமாதேவியாகக் கருதினார்கள். விளையும் நிலங்களில் நடமாடும் போது செருப்பு அணிவதில்லை. நிலத்தை நேசித்தல் என்பது முதன்மை பெற்றது. மண்ணைத் தொட்டும் விண்ணைப் பார்த்தும், நித்திலம் வழிபாடு செய்யும் நெறிமுறைகளின் அர்த்தம் மிகவும் ஆழமானது. எனவே தைத்திங்கள் நன்னாளில் அனைவரும் இயற்கைக்கு நன்றி கூறும் திருநாளாகப் பேணி வழிபாடு செய்தல் வேண்டும். எம் மண்ணில் நல்லவண்ணம் அனைவரும் வாழ வேண்டி, அனைவருக்கும் இதயபூர்வமான பொங்கல் வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் தெரிவித்து அமைகிறேன்.

**கலாநிதி ஆறு. திருமுருகன்,**
**தலைவர் - ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்**
**தெல்லிப்பழை.**
**தலைவர் - சிவபூமி அறக்கட்டளை,**
**உப தலைவர் - அகில இலங்கை இந்துமாமன்றம்.**

# யாழ். ஆயரின் பொங்கல் செய்தி



2017 ஆவது ஆண்டு பொங்கல் திருநாள் தமிழ் மக்கள் அனைவருக்கும் நன்றி உணர்வைத் தரும் பொங்கல் விழா ஆகட்டும்.

2017 ஆவது ஆண்டு பொங்கல் விழா தமிழ் கூறும் நல்லுலகு முழுவதும் கொண்டாடப்படும் வேளை இலங்கையிலும் புலம்பெயர்ந்து உலகின் பல பாகங்களிலும் பொங்கல் விழாவை நன்றியோடு கொண்டாடும் தமிழ் மக்கள் அனைவருக்கும் இனிய பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்வடைகிறோம்.

பொங்கல் விழா நன்றியின் விழா. நம்மைத் தாங்கும் நிலம் நமக்குத் தருகின்ற அனைத்து பயன்களுக்கும் நன்றி சொல்லும் விழா. முதல் விளைச்சலை இறைவனுக்கும் இயற்கைக்கும் காணிக்கையாக்கும் விழா.

நன்றி கூறும் பண்பு அனைத்து மனிதருக்கும் மிகவும் தேவையான ஒன்று. நம்மைப் படைத்த இறைவன், நம்மோடு வாழும் அயலவர், நம்மை காக்கும் இயற்கை ஆகிய மூவர்க்கும் நாம் என்றுமே நன்றியுடையவர்களாக இருக்க வேண்டும். இறைவன் நம்மைப் படைத்துப் பாதுகாத்து வருகிறார். அன்றாடம் வழிநடத்தி வருகிறார். அயலவர்கள் நம்மோடு அன்பையும் நட்பையும் பேணி வருகிறார்கள். இணைந்து வாழத் துணை புரிகிறார்கள். இயற்கை நமக்குத் தேவையானவற்றைத் தந்து உதவுகிறது. என்ன செய்தாலும் நம்மைத் தாங்கி வருகிறது. இந்த மூன்று நிலையினரை நோக்கியும் நம் உள்ளம் என்றுமே நன்றியால் பொங்கிக் கொண்டிருக்க வேண்டும்.

அநேகமான வேளைகளில் நாம் நன்றி கூறவும் நன்றியாக இருக்கவும் மறந்து விடுகிறோம். இது அவர்கள் பணி, இது அவர்கள் கடமை, இதற்காக பணம் செலுத்தப்படுகின்றமையால் அவர்கள் இதைச் செய்யவேண்டுமென கருதுகின்ற மனப்பாங்கே நம்மில் மேலோங்கி இருக்கிறது. நன்றி என்ற வார்த்தையை இனி வருங்காலத்தில் அதிகம் பாவிக்கத் தொடங்குவோம். இதனால் இன்னும் அதிக உதவியையும் மதிப்பையும் பெறுவோம்.

புத்தாண்டுச் செய்தியில் தெரிவித்த முக்கிய விடயத்தை இங்கு திரும்பவும் வலியுறுத்த விரும்புகிறோம். இலங்கை மண்ணில் தமிழ் மக்கள் நீதியோடு கூடிய ஒரு சுதந்திர வாழ்வை வாழ அரசமைப்பில் உறுதிப்படுத்தப்பட்ட ஒரு நிரந்தரத் தீர்வு எட்டப்பட வேண்டும். என்றுமில்லாதவாறு இலங்கை மண்ணில் நல்லெண்ண அரசு ஒன்று தோன்றி இன, மத அரசியல் நல்லிணக்கம் உருவாகியிருக்கின்ற இவ்வேளை, நீதியோடு கூடிய ஒரு நிரந்தரத் தீர்வை அரசமைப்பின் வழி அமைத்துக் கொள்ள மிகச் சிறந்த நேரமாகும்.

இந்த நேரத்தை சிறந்த விதமாக இராஜதந்திர ரீதியாகப் பயன்படுத்தி வெற்றியடைய வேண்டியது இலங்கை வாழ் தமிழ் மக்கள், புலம்பெயர்ந்து வாழ்வோர், தமிழ் அரசியற் தலைவர்கள், புத்திஜீவிகள் மற்றும் சம்பந்தப்பட்ட அனைவரின் கடமையாகும் . அரசியற் தலைவர்கள் தமது சொந்த விருப்பு வெறுப்புக்களைத் துறந்து, அரசியல் மற்றும் கட்சி எண்ணங்களைக் கடந்து, ஒட்டுமொத்தமாக இணைந்து, அரும் பாடுபட்டு உழைக்க வேண்டுமென மீண்டும் தமிழ் மக்கள் பெயரால் வேண்டுகிறோம்.

மலர்ந்துள்ள 2017ஆவது புதிய ஆண்டில் கொண்டாடப்படும் பொங்கல் விழா தமிழ் மக்கள் அனைவருக்கும் இறையாசீர் நிறைந்த மகிழ்வான ஆண்டாக, நீதியோடு கூடிய நிரந்தரத் தீர்வைப் பெற்றுத் தரும் ஆண்டாகட்டும். இறையாசீர் என்றும் உங்களோடு இருப்பதாக.

**மேதகு கலாநிதி**
**யஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை**
**யாழ். ஆயர்**

# உண்மையான இந்து, தமிழர்களாக பொங்கலைக் கொண்டாடுவோம்!

தை மகள் வந்துவிட்டால் எல்லாவிதமான செல்வங்களும் நம்மை தேடி வரும் இந்த தைத் திருநாளில் நாம் உண்ண உணவு அளிக்கும் இயற்கை அன்னைக்கும் உழவர்களுக்கும் என்றும் என் மனமார்ந்த நன்றிகள்.

மலருகின்ற தைமாத முதலாம் நாளில் எம்நாட்டில் நீண்ட காலமாக துன்பத்தில் துவண்டு கொண்டிருக்கும் எம் தமிழ் உறவுகளின் வாழ்வில் இன்ப நல்லொளி வீசும் நாளாக இந்நாள் அமையட்டும்.

தைப்பொங்கலுக்கு முதல்நாள் போகிப் பண்டிகை என்றவகையில் பழையவற்றை நீக்கிவிடும் நாள் பண்டிகையாகக் கொண்டாடுகின்றனர். தைப்பொங்கலுக்கு மறுநாள் பட்டிப் பொங்கல் என்ற வகையில் செல்வம் என்னும் பொருளைக் கொண்டு விளங்கும் மாடு எனப்படும் கால்நடைகளுக்கு பூசை புரிந்து நன்றி உணர்வை வெளிப்படுத்துகின்றனர்.

இப்பண்டிகை நாளில் உண்மையான இந்து தமிழர்கள் சைவ உணவு உண்பதுடன் பிற உயிர்களை வதைத்து அவற்றின் ஊனை உண்பதை நிறுத்த வேண்டும். இந்து என்னும்போது ஹிம்சை செய்யாதவர், பிற உயிர்களை நேசிப்பவர் என்ற வகையில் இந்துதர்மத்துடன் பகலவனை போற்றல் அவசியமாகும்.



எமது வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் உரிமை பயணத்துக்காக என்றும் எம்முடன் இருக்கும் எம் தமிழ் உறவுகளுக்கு நாங்கள் என்றும் நன்றியுடையவர்களாக இருப்போம் என்பதையும் தெரிவிக்கின்றோம். இனிய தைத்திருநாள் வாழ்த்துக்கள் .

**சீ.யோகேஸ்வரன்**
**(நாடாளுமன்ற உறுப்பினர்-மட்டக்களப்பு மாவட்டம்)**



# காலைக்கதிரின் கவிதைப் பொங்கல்

## பொங்கியே வரவேற்கின்றோம்



வாழை தோரணம் நாலுபக்கம் கட்டி
வாசலிலே வண்ணக் கோலமும் இட்டு
காலைக் கதிரோன் எழும் திசையில்
கரும்பு பலகாரம் இனிப்பு வகையுடன்
பாலும் சர்க்கரை பயற்றுடன் அரசியை
புதுப்பானை தனிலிட்டு அடுப்பில் வைத்து
சூழும் தீமைகள் பொங்கி வழிந்து
நாளும் இனிமை தங்கிடப் பொங்குவோம்!

அநீதி அழிந்து நீதியும் தழைத்திட
அராஜகம் ஒழிந்து அன்பும் பெருகிட
சாதியம் மறைந்து சமத்துவம் உயர்ந்திட
நாதி இல்லார்க்கு நல்லமைதி கிடைத்திட
மேதினி வாழ்விலே மனிதம் சிறந்திட
சூதுபோல் ஏமாற்றும் ஆட்சிகள் அழிந்திட
யாதுமாய் நின்றெம் மக்களைக் காத்திட
தூதுபோ தைமகளே பொங்கியே வரவேற்கின்றோம்.

யாழ்.ஜெயம் தாசன்



## தமிழரின் பண்பாட்டு விழா!



பழையன கழிதலும்
புதியன புகுதலும் நலமேயாம்
வாழையடி வாழையாய் வந்த
நல்லதோர் முதுமொழியாம்
தை மாதமதில் தைதிருநாள் பொங்கலதில்
விடியும் வேளை நாமெழுந்து நீராடி
நற்காலைப் பொழுதினிலே
பொங்கல் விழா பூணுகிறது...
தைப்பொங்கல் திருவிழா என்பது
ஒரு சமய விழா அல்ல!
தமிழரின் பண்பாட்டு விழா!
தமிழரின் தமிழ்ப் புத்தாண்டு
கொண்டாடும் நாள்!

செ.சுருதிகா, திருநெல்வேலி.

## பொங்கலோ பொங்கல்

பொங்கலோ பொங்கல்! இனிய
தைப்பொங்கல்!!
மங்கலமாய் எல்லோரும்
மகிழ்ந்து பொங்கும் பொங்கல்!
திங்களணி சேகரரும் உமா
தேவியம்மையும்
உவந்து ஏற்கும் பொங்கல்!
உன்னதமான பொங்கல்!!
எங்கும் எதிலும் எப்போதும்
இதயங் குளிரச் செய்யும்
இனிமையான பொங்கல்!
சங்கடங்கள் சஞ்சலங்கள்
நீக்கி வைக்கும் பொங்கல்!
சர்க்கரையும் பாலும் சேர்ந்த
பொங்கல்!
இங்கிதமாய் எல்லோரையும்
சேர்த்து வைக்கும் பொங்கல்!
இன்பமுடன் நன்றி கூறும்
இனிய தைப் பொங்கல்.

"கலாபூஷணம்"
இராசையா ஸ்ரீதரன்



## நன்றித் திருநாள் பொங்கற் பெருநாள்



தமிழர் திருநாள் தையே வருக
தமிழின் சுவை போற் தனிச்சுவை தருக
தமிழர் இம்மண்ணிற் தலை நிமிர்ந்திடவே
தாள் பணிகின்றோம் தரணி சிறந்திடவே

உலகைக் காக்கும் உழவன் வாழ்வு
நலமும் வளமும் நன்மையும் பெறவே
நிலவும் இருளை நீக்கி என்றும்
நித்திலம் செழிக்க அருள்க பரிதியே!

உயர்வின் வித்து உழைப்பேயாகும்
நயமாய்க் காட்டும் நன் சுவைப் பொங்கல்
நன்றியுடனே நாம் இதை உணர்ந்து
நாளும் பணிவோம் நலம் செய்வோரையே!

நீர்வை மணி

## தைமகளின் வருகையோடு இத்தரை வாழுமினி இனிதே!

நூபுரம் அனுங்க நுதல் திலகம்
இலங்க மெட்டிகள் சேர்ந்தொலிப்ப
சே இழையாள் பட்டுடுத்து
பார் மிசைநடந்தாள் வந்தே!
கதிரது வரவோடு தைமகளும்
உதித்தனள் யாகத்தீ இருந்தெழுந்தே!
நோற்றவர் செய் புண்ணியம் உயிர்
பெற்றெழுந்து உவகையில்
மலர்ந்தது!

மலர் தலை உலகம் மாசற
மகிழ்ந்து பிறந்தனள் தையாள்
மலர் பொய்கை வாழ் அன்னம்
இவள் நடை அஞ்சி ஒதுங்குமே!
வளர் பிறையென வள மோங்கும்
தளர் வறியா பெண்கள் வாழ
இளம் தளிர் மகவும் சிரிக்கும்!
இனி பயமிலை என நினைந்தே!

பொங்கும் மகிழ்ச்சி பிரவாகத்தில்
தங்கும் இனி இந்த உலகம்
எங்கள் தமிழ் இனிபிரவகிக்கும்
பொங்கும் புதுமை கண்டே!
மாதரார் தொழுதேத்தி கதிரவனுக் கோர்
படையல் போடுவர் பொங்கி
முத்தங்கள் எங்கும் உயிர் பெறும்
முத்தங்கள்
சிறுவர் சிறுமியராய் கெக்கலிக்கவே!

புத்தாடை பூண்டு பூசைசெய்து
எத்திசையும் வேத மந்திரமொலிக்க
சித்திரை நிலவெனபத்தரை தங்கம்
பாரினில் கோலோச்ச வந்தாள்
புதுவாழ்வு தந்திடுவாள் பேதம்போம்
வாதப் பிரதிவாதங்கள் ஒழியும்
மாரி பொழியும் மும்மாதமும்!
மும் மொழியும் சமமாகும் இனிதே!

மண்மீட்கச் சென்ற மாவீரர்
துயிலும் இல்லங்கள் மீண்டெழும்
தடைகளும் இடைஞ்சலும் பொடிபடும்
இனங்களிடையே நல்லிணக்கம்
ஏற்படும்
இனவாதம் பேசும் மதவாதிகள்
குனிவர் தலை வெட்கித்து!
இந்த சிறுதீவு இனி உலகிற் கோர்
எடுத்துக் காட்டாக சனநாயகமும்
பிறக்கும்!

"மண்டைதீவு மகிழ்நன்"
கை. பேரின்பநாயகம்.

## "ஈவிரக்கம் பாராதே"

தமிழர்க்குத் தீர்வளிக்கும் தைப்பொங்க லிதுவென
அமிழ்தாகும் புதிரெடுத்துப் பொங்குவோம் – உமியாகும்
பாவிகள் உரிமைதர மறுத்தாலும் பகலவனே
ஈவிரக்கம் பாரதே இனி !

கே.எஸ்.சிவஞானராஜா

## உரிமைதரும் பொங்கலாய் பொங்கிடவா !

பொய்மைகளும் புரட்டுகளும் மறைந் தொழிய
புதுவரவாய் பிறந்துள்ள தமிழர் புத்தாண்டே !
மெய்மைகள் நிலைபெற்று நல்வாழ்வு சிறந்திட
மேதினியில் தைமகளாய் வழிபிறக்க வந்தவளே !
ஐயமில்லா அமைதிவாழ்வு எம்மண்ணில் மலர்ந்திட
ஐக்கியத்தில் உரிமையுடன் அனைத்தினமும் ஒன்றுபட
வையமெலாம் வாழ்கின்ற தமிழ்மனங்கள் மகிழ்ந்திட
தைமகளே தமிழர்க்கு விடிவு கொண்டு வா !

ஆண்டாண்டு காலமாய் பொங்கல் வைத்தோம்
ஆயிரமாயிரம் உறுதிமொழி பொய்யாகி மறைந்தன
நீண்டவெம் உரிமை யுத்தம் நீண்டதேயன்றி
நிம்மதியாய் எம்மினம் தலைநிமிர்ந்து வாழ்ந்ததில்லை
கூண்டுகளில் அடைத்துக் கொடுமை செய்தார்
மாண்டாலும் மீண்டும் உயிர் பெறுவோம்
வேண்டாம் வன்முறைகள் அனைவரும் அனைத்தும் பெறும்
உரிமை தரும் பொங்கலாய் பொங்கிடவா !

அன்ரனி பீற்றர்
ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகர்



# உழைக்கும் மக்களின் உன்னத நன்னாள்!



இன்று தைத்திருநாள். இது தமிழர்களின் பெருநாள். உண் மையாய் உழைக்கும் மக்களின் உன்னதமான நன்னாள். ஆம் இன்று இனிப்பான பொங்கல் பொங்கி சூரியனுக்குப் படைத்து நன்றி செலுத்துகின்ற நல்லதொரு திருநாள்.

தினமும் நெல்வயலில் பாடுபட்ட உழவர் களும் அவர்களுடனே சேர்ந்து கஷ்டப்பட்டு உழைத்த பெண்களும் மற்றும் காளை மாடுகளும் பெருமிதம் கொள்ளும் இன்றைய பொங்கல் ஓர் இனிய நன்னாளாகும்.

'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய் வோம்' என்று கூறும் தமிழர்களுக்கு ஒரு நல்ல விடிவைத் தரவேண்டுமென்று எல்லாம் வல்ல யாழ்.வண்ணை ஸ்ரீ வெங்கடேஸ்வர வரதராஜப் பெருமாளின் மலர்த் திருவடிகளைச் சிந் தித்து வாழ்த்துச் சேவித்து நின்று உளமாரப் பிரார்த்தித்து ஆசி நல்கி வாழ்த்து கின்றோம்.

இதுகாறும் பட்ட துன்ப துயரங்கள் அனைத்துமே இனி விலகி, இன்று உதயமாகும் தைத்திருநாளின் இனிய காலைப் பொழுது அனை வருக்குமே ஆனந்த நல்வாழ் வுக்குக் கட்டி யங்கூறியபடியே விடிய வேண்டு மென்பதே எனது வேணவா!



நாம் மாத்திரம் வாழ்ந்தால் போதும் என்று எண்ணாமல், இந்த மண்ணில் வாழும் அனைத்து மக்களும் ஆனந்தம் கலந்த இனிய மாருதமாய் உயர்ந்து வீசி மணம் பரப்பி, பல வழிகளிலும் நன்மைகளையே அடைந்து எல்லோரும் சிறப் புற வாழ அந்த ஈரடியால் மூவுல களந்த மாயவனின் பொற்கமல பாதம் பணிந்து ஆசி கூறி வாழ்த்து கின்றோம்

இன்று முதலாக எல்லோரும் தைப்பொங்கல் நாளில் பொங் கும் புதுப்பானைப் பொங்க லிலே சர்க்கரை, நெய்,தேன் சேர்த்து இனிப்பாக உண்ணுமாப்போல வாழ்க்கை யிலும் உண்மை ,நேர்மை, பொறுமை,அன்பு,பாசம் என்ப வற்றைக் கடைப்பிடித்து இல்லறத்தை நல்லறமாய் இனிதே நடத்திட எமது நல்வாழ்த்து கள் உரித்தாகட்டும். வாழ்க வளமுடன்!

இராசையா ஸ்ரீதரன்

## 'பொங்கலோ பொங்கல்! பொங்கலோ பொங்கல்!'

பொங்கலன்று அதிகாலை எழுந்து தலைக்குளித்து விட்டு முற்றத்தில் சாணத்தினால் வட்ட மிடுவார். அதன் பின்னர் மஞ்சள் நீர் தெளித்து அவ்விடத்தை சுத்த மாக்குவர். பின்னர் கோலம் இட்டு அதன் நடுவில் புதிய பானையை வைப்பார். புதுப்பானையில் புது அரிசி இட்டு முற்றத்தில் பொங்க வைப்பார்கள். புதிய பானைக்கு புதிய மஞ்சளைக் காப்பாக அணிவர். புதிய மஞ்சள் கொத்தையும் புதிய கரும்பையும் புதிய காய்கறிகளையும் அன்று பயன்படுத்துவர்.

புதிய பானைக்கு புதிய மஞ்சளைக் காப்பாக அணிவர். புதிய மஞ்சள் கொத்தையும் புதிய கரும்பையும் புதிய காய்கறிகளையும் அன்று பயன்படுத்துவர்.



முற்றத்தில் கோலமிட்டு தலை வாழையிலையில் நிறைகுடம் வைத்து விளக்கேற்றி கதிரவனை வணங்கி பொங்கலிடத் தொடங் குவர். இந்துத் தமிழர்கள், சாணத்தில் பிள்ளையார் பிடித்தும் வைப்பார்கள். பொங்கல் பொங்கி வரும் வேளை யில் குடும்பத் தலைவன், மனைவி மக்களுடன் கூடி நின்று ''பொங்கலோ பொங்கல்! பொங்கலோ பொங்கல்!'' என்று உரக்கக் கூவி அரிசியை இரு கைகளாலும் அள்ளிப் பானையில் இடுவர்.

தனது முதற் பயனை கதிரவ னுக்குப் படைத்துப் பின் குடும் பத்தாருக்கும் சுற்றத்தாருக்கும் கொடுத்த பின்பே தான் தாம் நுகர்வது வழமை. இது தமிழரின் பண்பாடாகத் தொன்று தொட்டு உள்ளமை குறிப்பிடத்தக்கது.



பாமரன்

## பாரம்பரியத்தை மறவாது பொங்கிடுவோம்!

இப்போதெல்லாம் சூழ்நிலைகளின் காரணமாக, வீட்டுக்குள் காஸில் பொங்கல் வைக்கிறார்கள்.

ஆனால், சூழ்நிலைகளைக் காரணம் காட்டி, எமது பாரம்பரியத்தை மறந்து போவது முறையானதல்ல.

இளைய தலைமுறை யினர், அந்தக் காலத்தில் நாம் எப்படி பொங்கலிட் டோம் என்பதையும் தெரிந்து கொண்டு எதிர் காலத்திலும் கடைபிடிக்க வேண்டும்.



வீட்டு வாசலில் பொங் கல் வைக்க வசதியில்லா விட்டால், தெருமக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து, நல்ல நேரத்தை தேர்ந்தெடுத்து ஒரு குறிப்பிட்ட இடத்தில் இணைந்து பொங்கல் வைக்க வேண்டும்.

கோயில்களையும் தேர்ந்தெடுக்கலாம். பால் பொங்கும் போது, சூரிய நமஸ்காரம் செய்து, ''பொங்கலோ பொங்கல்'' என்று ஒரு சேர முழக்கமிட வேண்டும். ஏனெ னில், இது ஓர் ஒற்றுமைத் திருவிழா.

தேரோட்டம் என்ற நிகழ்ச்சியை ஊர் ஒற்றுமை கருதி எப்படி நம் முன்னோர்கள் நமக்கு அறிவுறுத்திச் சென்றார்களோ, அதுபோல பொங்கலும் மக்களிடையே ஒருமைப்பாட்டை வளர்க்கும் விழா என் பதை நினைவில் கொள்ள வேண்டும்.

நகரங்களாக இருந்தாலும் கூடக் கிராமப்புற மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில், அங்கிருந்து பனை ஓலை அல்லது தென்னை ஓலை தரு வித்து பொங்கலிட வேண்டும்.

பொங்கலன்று காலையில் நல்ல நேரம் பார்த்து, வீட்டு முற்றத்தில் பெரிய அளவிலான குத்துவிளக்கேற்றி, அதன் முன் ஒரு வாழை இலையைப் போட வேண்டும். அதன் இடது ஓரத்தில் நாழி நிறைய பச்சை நெல் வைக்க வேண்டும். இலையில் பச்சரிசியை பரப்பி, அதன் மேல் கத்தரிக்காய், கருணைக்கிழங்கு, சிறுகிழங்கு, வள்ளிக்கிழங்கு, அவரைக் காய், சீனி அவரை, பூசணித் துண்டு, பிடிகிழங்கு, காப்பரிசி (வெல்லம், பச்ச ரிசி கலவை) வெற்றிலை, பாக்கு, பழம்,மஞ்சள் கிழங்கு ஆகியவற்றை வைக்க வேண்டும்.

கரும்பின் ஓலையை வெட்டாமல் நீள கரும்பாக சுவரில் சாய்த்து வைக்க வேண்டும். ஒற்றைக் கரும்பாக வைப் பதைத் தவிர்த்து இரண்டு கரும்புகள் வைக்க வேண்டும்.

பொங்கல் பானையை மண் அடுப்பு அல்லது பொங்கல் கட்டி எனப்படும் கற்கள் மீது வைக்க வேண்டும்.

திருவிளக்குக்குப் பத்தி, கற்பூர ஆரத்தி காட்டிய பிறகு, உங்கள் குல தெய்வம் இருக்கும் கோயிலின் திசையை நோக்கி காட்ட வேண்டும். பின்னர் சூரிய பகவானுக்கு ஆரத்தி காட்டியதும், ஒரு தேங்காயை உடைத்து, அதன் நீரை பானை யில் விட வேண்டும். சுத்தப் படுத்திய பச்சரிசியை நன்றாகக் களைந்து, அந்த தண்ணீரை பானை யில் விட வேண்டும்.

அடுப்புக்கும், பொங்கல் பானைக் கும் தூபம் காட்டி, பற்ற வைக்க வேண்டும். தண்ணீர் கொதித்து பால் பொங்கும் போது, பொங்கலோ பொங்கல் என முழங்க வேண்டும்.

பின்னர் பானையிலுள்ள சுடும் நீரை, அரிசி வேகும் அளவுக்கு மட் டும் வைத்துக் கொண்டு, மீதியை அகப்பையால் அள்ளி எடுக்க வேண் டும். அரிசியை போட்டு, வெந்ததும் அவ்வப்போது அகப்பையால் கிண்டி கொடுக்க வேண்டும். இல்லா விட் டால், பாத்திரத்தின் அடியில் பிடித்து விட வாய்ப்புண்டு. பொங்கலை இறக்கிய பிறகு, சர்க்கரைப் பொங் கல் வைக்க வேண்டும்.

இலையின் முன்னால் இந்த பானைகளை இறக்கி வைத்து, திருவிளக்குக்கும், சூரியனுக்கும் பூஜை செய்ய வேண்டும்.

பின்னர் காகத்துக்குப் பொங்கல் வைக்க வேண்டும். காகம் உணவை எடுத்த பிறகு, குழந்தைகளுக்குச் சர்க்கரைப் பொங்கல் கொடுக்க வேண்டும். அதன் பிறகே பெரியவர் கள் சாப்பிட வேண்டும்.

பின், காய்கறி வகைகள் சமைத்து வெண் பொங்கலை மதிய வேளை யில் சாப்பிட வேண்டும். இரவில் முன்னோரை நினைத்து, இனிப்பு வகைகள், புத்தாடை வைத்து வணங்க வேண்டும். புத்தாடையை தானமாகக் கொடுப்பதும் இந்த நாளில் சிறந்தது.

# நன்றியுணர்வை பறைசாற்றும் பொங்கல்

நன்றியைப் போற்றும் தைப்பொங்கல் திருநாள் இன்று மலர்ந்திருக்கிறது. தமிழர்களினால் கொண்டாடப்படும் பண்டிகைகளில் தலைசிறந்ததாகவும் உயர்வானதாகவும் தைப்பொங்கல் பண்டிகை போற்றப்படுகின்றது. தமிழர்களின் நாட்காட்டியின்படி தை மாதம் முதல் நாள் தமிழர்களால் தைப் பொங்கல் பண்டிகை கொண்டாடப் படுகின்றது. தை மாதம் தமிழ் மக்களுக்கு வழிகாட்டும் மாதமாகவும் அமைகின்றது. தமது உழைப்புக்கு உதவிய இயற்கைக்கு நன்றியுணர்வைத் தெரிவிக்கும் திருநாளாக தைப் பொங்கல் விளங்குகின்றது. இந்தத் தைப்பொங்கல் திருநாளில் உழவர்கள் தமது வேளாண்மைக்கு உதவி செய்த சூரிய பகவானுக்கு நன்றி செலுத்துகின்றனர். இதற்காக அவர்கள் சூரியன் உதிக்கும் வேளையில் அவனுக்காக பொங்கலிட்டு தமது நன்றியை வெளிக்காட்டுகின்றனர். உழவர்கள் மாத்திரமல்லாமல் ஒவ்வொரு மனிதப் பிறவியும் சூரியனுக்கு நன்றி கூறும் நாளாக இன்றைய நாள் போற்றப் படுகிறது.

தைத்திருநாள் உழவர்களின் நன்றிக் கடன் தீர்க்கும் நாளாக அமைக்கின்றது. உணவு உற்பத்திக்கும் உயிரினங்களின் வளர்ச்சிக்கும் தேவையான வெப்பம், வெளிச்சம், மழை என்பவற்றை சூரியன் வழங்குகின்றான். ஆதலினால் சூரியனுக்கு நன்றிக் கடனை உழவர்கள் செலுத்துகின்றார்கள். தை பிறந்தால் வழிபிறக்கும் என்பது ஆன்றோர்களின் வாக்காகும். தை பிறந்து விட்டால் எல்லோர் மனதிலும் மகிழ்வு ஏற்படும். நல்ல விடயங்கள் நடக்கும் என்ற நம்பிக்கை ஏற்படும். தைத்திருமகள் தங்களது வாழ்வை புத்தொளி வீசச் செய்வாள் என்ற நம்பிக்கையுடன் தமிழர்கள் தைப் பொங்கல் பண்டிகையை கொண்டாடுகின்றார்கள்.

தை மாத காலப்பகுதியில் சூரிய பகவான் தனு இராசியிலிருந்து மகர இராசிக்கு பிரவேசிக்கின்றான். இக்காலம் உத்தராயணகாலம் எனப் படும். இது மகர சங்கிராந்தி எனப்படுகின்றது. இத்தினத்தையே நாம் தைத்திரு நாளாகக் கொள்கின்றோம்.

உழவன் தனது முதற்பயனை கதிரவனுக்குப் படைத்து பின் குடும்பத்தாருக்கும் சுற்றத்தாருக்கும் கொடுத்த பின்பே தான் நுகர்வான். இச் செயற்பாடு தமிழர்கள் மத்தியில் தொன்று தொட்டு வழங்கி வந்துள்ளது.

தைப்பொங்கல் பண்டிகையானது கடவுள் வழிபாட்டையும் சைவத்தமிழ் மக்களின் மரபு வழி விழுமியங்களான நன்றி மறவாமை, பகிர்ந்துண்ணல், அன்பு, அறம், அகிம்சை, புனிதம் பேணுதல் முதலான பண்புகளை வளர்க்கும் நிகழ்வாக அமைகின்றது. இத்தகு சிறப்பு மிக்க தைப்பொங்கல் பண்டிகை மனித வாழ்வின் முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாக அமைகின்றது. இந்நாளில் தம்மையும் தம்முடைய சூழலையும் புனிதப்படுத்தி நன்றியுணர்வோடு இறைவனை வழிபட்டு பெற்றோர், பெரியோருடைய ஆசியைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.



நன்றி மறவாமைப் பண்பின் உயர் பேணுகையாக விளங்கும் தைப் பொங்கல் பண்டிகை தமிழர்களின் மனங்களில் குதூகலம், நம்பிக்கை, புத்துணர்வை வழங்கும் திருநாளாக விளங்குகின்றது. இந்நாளில் நாம் அனைவரும் நன்றியுணர்வு உள்ளவர்களாகவும் பகிர்ந்துண்ணும் பண்புள்ளவர்களாகவும் வாழப்பழகிக் கொள்ள வேண்டும். பொங்கல் விழா உழைக்கும் மக்கள் இயற்கைக்கும் மற்ற உயிர்களுக்கும் சொல்லும் ஒரு நன்றியறிதலாகக் கொண்டாடப்படுகிறது. நன்றி கூறும் திருவிழாவாக தைப்பொங்கல் அமைவதனால் அனைத்து மக்களிடத்திலும் மிகவும் சிறப்பு வாய்ந்த நாளாக தைப் பொங்கல் அமைந்துள்ளது.

**சைவப்புலவர் சித்தாந்தபண்டிதர்**
**எஸ்.ரி.குமரன்**



# NORTH LANKA IIT

இலங்கையின் தலைசிறந்த தனியார் உயர்கல்வி நிறுவனம்

Address:
Top Floor,
People's Bank Building,
Stanley Road, Jaffna.
Ph: 0767504535 / 0214927088.

How To Earn Money Online ???
இணையதளம் மூலம் சம்பாதிப்பது எப்படி???


## e-Mon€y

படிக்கும் போதே உழைக்கவும்
உழைக்கும் போதே படிக்கவும்
ஓர் அரிய வாய்ப்பு.

- Batches - வார நாட்கள் / வார இறுதி நாட்கள்
- Laptop வழங்கப்படும்* (*Conditions Apply)
- UGC அங்கீகாரம் பெற்ற 3 ஆண்டு B.Sc. in Computer Science கற்கைநெறி இலவசம்* (*Conditions Apply)

**பொங்கல் முதல் வகுப்புக்கள் ஆரம்பம்**

OL / AL
தகுதி உடைய
மாணவர்கள்
விண்ணப்பபடிவத்தை
பூர்த்திசெய்து
உடனடியாக நேரில்
சமூகமளிக்கவும்.



வடக்கு கிழக்கு மாணவர்களுக்கு
வெளிநாடு சென்று பகுதிநேர வேலையுடன்
உயர்கல்வி பயில ஓர் அரிய வாய்ப்பு

## STUDY ABROAD

SEVANAN BUSINESS SCHOOL
ZURICH-SWITZERLAND/PRAGUE-CZECH REPUBLIC

SEVANAN
SEVANAN BUSINESS SCHOOL

## Study
## BA / MA / MCA

With Part Time Job From The Date Of Arrival
மிகக் குறைந்த செலவில்
Switzerland / Czech Republic
சென்று BA / MA / MCA போன்ற
பட்டப்படிப்புக்களை கற்க
உடனே தொடர்பு கொள்ளவும்.

UGC அங்கீகாரம் பெற்று பல ஆண்டு காலம் தொடர்ந்து வெற்றிகரமாக பல உயர்கல்வி கற்கைநெறிப் பட்டதாரிகளை உருவாக்கிக்கொண்டிருக்கும் பெருமைக்குரிய கல்வி நிறுவனம்

**B.Sc. in Physical Education & Sports**
Entry Qualification: 2 Years Diploma in Physical Education
Duration: 1 Year

**PG. Diploma in Education Management**
Entry Qualification: Any Degree
Duration: 1 Year
(அதிபர்களுக்கும் உபஅதிபர்களுக்கும் பதவி உயர்வுக்கு உகந்த கற்கைநெறி)


**B.Sc. in Civil Engineering ( Top Up)**
Entry Qualification: HND in Civil Engineering
Duration: 1 Year
IESL Syllabus

**B.Sc. in Computer Science**
Entry Qualification: OL / AL
Duration: 2 to 3 Years

**B.Sc. in Computer Science ( Top Up )**
Entry Qualification: 2 Years Diploma / HND
Duration: 1 Year

மேலும் பல கற்கைநெறிப் பாடத்திட்டங்களின்
முழு விவரங்களை பெற
கீழ்கண்ட முகவரியை தொடர்பு கொள்ளவும்..

தங்கள் கல்வித்தகுதியை மேலும் உயர்த்துவதன் மூலம்
பதவி உயர்வும், சம்பள உயர்வும் கிட்டும்...




**Wish You All A Happy Pongal**

200 மணித்தியாலங்களில் நீங்களும் ஒரு
Microsoft Engineer ஆவதற்கு ஓர் அரிய வாய்ப்பு..

## தகமை: O/L

## MCP.....MCSA.....MCSE

Microsoft CERTIFIED Professional
Microsoft CERTIFIED Systems Administrator

Microsoft Certified Professional Systems Engineer

முதல் batch மாணவர்களுக்கு
மிகச் சிறந்த சலுகைகள்
வழங்கப்படும்.



பொன்.வேணு கிருஷ்ணா




Source:www.theguardian.com

**Edward Snowden down plays Trump victory: he's 'just the president'**

NSA whistleblower says he does not fear a renewed push to arrest him or calls to put dissidents to death: 'I believe in the decisions that I've already made'



**Edward Snowden speaks via video link during a conference at University of Buenos Aires law school, Argentina.** Photograph: Marcos Brindicci/Reuters Agence France - Presse

Monday 21 November 2016 21.30 GMTLast modified on Tuesday 22 November 2016 08.42 GMT

Former US National Security Agency contractor Edward Snowden on Monday down played the importance of President-elect Donald Trump and again defended his decision to leak documents showing widespread surveillance of US citizens' communications.


*Edward Snowden not worried about Putin turning him over to Trump*

"Donald Trump is just the president. It's an important position. But it's one of many," Snowden told an internet conference in Stockholm, speaking via a video link from Russia, where he has been living as a fugitive.


The 33-year-old is wanted in the United States to face trial on charges brought under the tough Espionage Act after he leaked thousands of classified documents in 2013 revealing the vast US surveillance of private data put in place after the September 11 attacks.

அமெரிக்கா உட்பட உலகின் நூறு மில்லியன் கணக்கானவர்களால் வெறுக்கப்படும் சி.ஐ.ஏ, இரத்தத்தில் ஊறிய ஓர் அமைப்பாகும்

வரையில் மற்றும் டசின் கணக்கான நாடுகளில் டிரோன் போர்முறை வரையில், சி.ஐ.ஏ. குற்றத்தின் மறுபெயராக உள்ளது.




40 ஆண்டுகளுக்கு முன்னால்... சி.ஐ.ஏ. மீது ஒரு மட்டுப்படுத்தப்பட்ட 'சீர்திருத்தத்தை' நடத்த முடிந்திருந்தது



(Oliver F. Atkins' photo of Nixon leaving the White House shortly before his resignation became effective, August 9, 1974)




(From left to right: minority counsel Fred Thompson, ran king member Howard Baker, and chair Sam Ervin of the Senate Watergate Committee in 1973.)

அந்த விசாரணை, ஜனாதிபதி ரிச்சார்ட் நிக்சனை பதவி விலகுவதற்கு நிர்ப்பந்தித்த வாட்டர்கேட் நெருக்கடியின் ஒரு துணைவிளைவாக இருந்தது. அச்சமயத்தில், சி.ஐ.ஏ. அதிகாரிகள் நிக்சனின் ஜனாதிபதி மறுதேர்வு கமிட்டியில், அல்லது CREEP இல், நியமிக்கப்பட்டிருந்தனர்



(The Watergate complex is a group of five buildings next to the John F. Kennedy Center for the Performing Arts in the Foggy Bottom neighborhood of Washington, D.C., in the United States.)



NIXON RESIGNS

HE URGES A TIME OF 'HEALING'; FORD WILL TAKE OFFICE TODAY

'Sacrifice' Is Praised; Kissinger to Remain

The 37th President Is First to Quit Post

Rise and Fall

'உளவுத்துறை சமூகத்தை' ஆதரிப்பதில் இந்தப் பொதுவான - கட்சி - பேதமற்ற காட்சிப்படுத்தல், அமெரிக்க மக்கள் உட்பட உலக மக்களுக்கு எதிராக அமெரிக்க இராணுவ - உளவுத்துறை எந்திரம் அன்றாடம் நடத்திய எண்ணற்ற குற்றங்களுக்கு எந்தவித எதிர்ப்பையும் சட்டபூர்வமற்றதாகச் செய்வதையே நோக்கமாகக் கொண்டுள்ளது.

எண்ணற்ற ஆட்சிக்கவிழ்ப்புகள், படுகொலைகள், சதியாலோசனைக் கொலைகள் மற்றும் போர்களைத் தூண்டியமைக்காக, அமெரிக்கா உட்பட உலகின் நூறு மில்லியன் கணக்கானவர்களால் வெறுக்கப்படும் சி.ஐ.ஏ, இரத்தத்தில் ஊறிய ஓர் அமைப்பாகும். 1953 இல் ஈரான் மற்றும் 1954 இல் குவான்டமாலாவில் இருந்து, 1973 சிலி வரையில், 1980 களில் மத்திய அமெரிக்காவின் இரத்த ஆறுகள் வரையில், எகிப்தில் இன்றைய பாரிய ஒடுக்குமுறை

வியாழனன்று, டசின் கணக்கான அமெரிக்க செனட்டர்கள் உளவுத்துறை சேவைகளின் முன்னால் சரணாகதி அடைந்தார்கள். சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்னால், இதே போன்றவொரு கமிட்டி அறையில், செனட்டர்கள் இலத்தீன் அமெரிக்கா, ஆபிரிக்கா மற்றும் ஆசியாவில் சி.ஐ.ஏ. எவ்வாறு ஓர் 'ஒருங்கிணைக்கப்பட்ட படுகொலை அமைப்பை' செயற்படுத்தி வருகிறது என்பது குறித்து சாட்சியளிக்க சபதம் ஏற்றார்கள்.


என்பதும், வாட்டர்கேட் விடுதியின் கொள்ளையை ஒழுங்கமைப்பதில் சம்பந்தப்பட்டிருந்தார் என்பதும் அம்பலமானது. அந்த காங்கிரஸ் விசாரணையானது, அமெரிக்க மக்கள் மீதான சட்டவிரோத உளவுபார்ப்பையும், போர் எதிர்ப்பு, உள்நாட்டு மக்கள் உரிமைகள், தொழிலாளர் மற்றும் சோசலிச அமைப்புகளுக்குள் அரசு முகவர்களை ஊடுருவச் செய்தமையையும் அம்பலப்படுவதற்கு இட்டுச் சென்றது.

நான்கு தசாப்தங்களுக்கு முன்னர், அமெரிக்க ஆளும் உயரடுக்கால் சி.ஐ.ஏ .மீது ஒரு மட்டுப்படுத்தப்பட்ட 'சீர்திருத்தத்தை' நடத்த முடிந்திருந்தது, அது ஒருசில மதிப்பிழந்த அதிகாரிகளை நீக்குவதற்கும் மற்றும் அந்த முகாமையின் செயற்பாடுகளில் சில வரம்புகளை அமைப்பதற்கும் இட்டுச் சென்றது. என்றாலும் இந்த வரம்புகள் விரைவிலேயே நடைமுறையளவில் மீறப்பட்டன. இன்றோ, பெருமளவில் அதுபோன்ற கண்துடைப்பு நடைமுறைகள் கூட சாத்தியமில்லாமல் உள்ளது. அதற்கு மாறாக, உளவுத்துறை முகாமைகள் கேள்விகிடமற்ற விசுவாசத்தை தங்கள் மீது காட்டுமாறு கோருகின்றன என்பதுடன், ஜனநாயகக் கட்சியினரும் அமெரிக்க ஊடகங்களும் அதற்கு சலாம் போடுகின்றன.

(கேள்வி தொடரும்...)




# தமிழ்த் தேசிய எழுச்சி



ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றி சிந்தனைப் புரட்சியை முன்னெடுத்தவர்களுள் விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியரான அன்ரன் பாலசிங்கம் மிக முக்கிய மானவர். அரசியல் ஞானம்மிக்க தத்துவ ஆசிரியர்.

ஈழத் தமிழினத்தின் உயரிய வரலாற்றுப் பதிவு ஏடான 'போரும் சமாதானமும்' என்ற நூலை அவர் படைத்திருக்கின்றார். இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய எழுச்சி பற்றி அந்நூலில் அவர் குறிப்பிடும் நுட்பமான – நுண்ணியமான – விடயங்களை இக்கட்டுரைத் தொடரில் நாம் அறிந்து கொள்ளலாம்.



26

## விடுதலைப் புலிகளுக்கு இந்திய இராணுவப் பயிற்சி

1983 ஒக்ரோபர் மாதம் பிரபாகரனும் அவரோடு சில மூத்த தளபதி களும் இந்தியா வந்தனர். பாண்டிச்சேரியில் ஒரு வீட்டை வாடகைக்கு அமர்த்தி அங்கு தங்கியிருந்தனர். சந்திரசேகரனும் மற்றும் சில 'றோ' புலனாய்வுத் துறைஉயர்அதிகாரிகளும்பிரபாகரனைப் பாண்டிச்சேரியில் சந்திப்பதற்கான ஒழுங்குகளைச் செய்தேன். சந்திப்பு நிகழும் நாளன்று நானும், அடேலும், இரு போராளிகளுமாகச் சென்னையிலிருந்து பாண்டிச்சேரிக்குப் பயணமாகினோம். பாண்டிச்சேரியில் பிரபாகரனைச் சந்தித்துச் சென்னையில் நாம் வந்திறங்கியதிலிருந்து நடைபெற்ற சம்பவங்களை அவரிடம் விவரமாகக் கூறினேன். அன்று நள்ளிரவு சந்திரசேகரனும் மற்றும் சில இந்தியப் புலனாய்வு அதிகாரிகளும் பாண்டிச்சேரியிலுள்ள எமது வீட்டுக்கு வந்தார்கள். பிரபாகரனும் நானும் சந்திரசேகரனும் தனி அறை ஒன்றில் மந்திராலோசனை நடத்தினோம். முதற் சந்திப்பின் போதே சந்திரசேகரனுக்குப் பிரபாகரனை நன்கு பிடித்துக் கொண்டது.

இருநூறு விடுதலைப் புலிப் போராளிகளுக்கு இராணுவப் பயிற்சி அளிப்பதற்கு உடனடியாக ஏற்பாடுகளைச் செய்வதாக சந்திரசேகரன் உறுதியளித்தார். நூறு பேர் கொண்ட இரு அணிகளாகப் பயிற்சி நடைபெறும் என்றும், முதல் அணியின் பயிற்சி நவம்பர் மாதத் தொடக்கத்தில் ஆரம்பமாகும் என்றும் சொன்னார். புலிப் போராளிகள் சென்னையிலிருந்து டில்லி வரை புகையிரத வண்டியில் பயணம் செய்து, பின்பு டில்லியிலிருந்து இராணுவ 'டிரக்' வண்டியில் உத்திரப் பிரதேச மலைப் பிராந்தியத்திலுள்ள டெக்ராடன் என்னுமிடத்தில் அமைந்திருக்கும் இந்திய இராணுவப் பயிற்சிப் பாசறைக்குக் கொண்டு செல்லப்படுபவர் என்றும் சந்திரசேகரன் விளக்கினார். முதல் அணியில் பயிற்சி பெறுவோரின் பெயர் விவரப் பட்டியலைத் தமக்குச் சீக்கிரமாக அனுப்பி வைக்கும்படியும் அவர் பிரபாகரனிடம் கேட்டுக்கொண்டார். தமது போராளிகளுக்கு எத்தகைய போரியற் பயிற்சி வழங்கப்படுமென்றும் எத்தகைய ஆயுதங்களைக் கையாள்வதற்கான பயிற்சி கொடுக்கப்படும் என்றும் பிரபாகரன் வினவினார். சகலவிதமான நவீன போரியல் உத்திகள், தந்திரோபாயங்கள் பற்றிய தேர்ச்சியும் அனுபவமும் பெற்ற இந்திய இராணுவ அதிகாரிகள் பயிற்சி வழங்குவார்கள் என்றும், சிறுரக ஆயுதங்களிலிருந்து கனரக ஆயுதங்கள் வரைப் பலவிதமான ஆயுதங்களைக் கையாள்வது பற்றியும் பயிற்சி கொடுக்கப்படுமென்றும் சந்திரசேகரன் விளக்கினார். நிலப்படங்கள் வரைதல், கண்ணிவெடிகளைப் புதைத்தல், வெடிபொருள்களைப் பாவித்தல், டாங்கி எதிர்ப்பு, விமான எதிர்ப்பு ஆயுதங்களைக் கையாளுதல் போன்றவற்றிலும் பயிற்சி வழங்கப்படும் என்றார். ஆயுத உதவி சம்பந்தமாகச் சந்திரசேகரன் எந்த உறுதிமொழியும் அளிக்கவில்லை. இந்த விவகாரம் குறித்துப் பின்பு பேசலாம் என்று மட்டும் சொன்னார். உத்தரப்பிரதேசத்திலுள்ள டெக்ராடன் இராணுவப் பயிற்சித் தளத்துக்கு வருகை தந்து விடுதலைப் புலிப் போராளிகளுக்கு அளிக்கப்படும் பயிற்சியை நேரடியாக மேற்பார்வை செய்யுமாறு அவர் பிரபாகரனுக்கு அழைப்பு விடுத்தார்.



## இந்தியத் தலையீட்டின் உள்நோக்கம்

சந்திரசேகரனுடன் நிகழ்ந்த சந்திப்பு பிரபாகரனுக்குத் திருப்தியைக் கொடுத்தது. எத்தகைய குறிக்கோளுடன் இராணுவப் பயிற்சித் திட்டத்தை இந்தியா வழங்குகிறது என்ற சர்ச்சைக்குரிய கேள்வியை நாம் சந்திரசேகரனிடம் எழுப்பவில்லை. 'றோ' புலனாய்வு அதிகார பீடத்துடன் நல்லுறவு பேணுவதையே நாம் விரும்பினோம். தமிழீழத் தாயகக் களத்தில் விடுதலைப் புலிகள் இயக்கமே ஆயுதப் போராட்டத்தைத் தீவிரமாக முன்னெடுத்து வருகிறது என்பதை உணர்ந்துகொண்ட சந்திரசேகரன், பிரபாகரன் ஊடாகக் கள யதார்த்த நிலைமையைக் கேட்டறிந்து கொண்டார். சீக்கிரமே தமது போராளிகள் பயிற்சிக்குத் தயாராகி விடுவார்கள் என உறுதியளித்த பிரபாகரன், டெக்ராடன் பயிற்சிப் பாசறைக்குத் தானும் வர விரும்புகின்றார் எனவும் கூறினார். நவம்பர் மாதத் தொடக்கத்தில் முதலாவது பயிற்சி அணிப் போராளிகள்டெக்ராடன்னுக்குப்பயணமாகினர். 1984 ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் அவர்களின் பயிற்சி முடியும் போது பிரபாகரன் டெக்ராடன்னுக்குச் சென்றார்.

இப்படியாக இந்தியாவின் இராஜதந்திர சதுரங்க ஆட்டத்தில் விடுதலைப்புலிகள் இயக்கமும் ஒரு பங்காளியாக மாறியது. இது நாமாகவே சிந்தித்து எடுத்த முடிவு. எவராலுமே தவிர்த்துவிட முடியாத வரலாற்று நீரோட்டத்தில் நாமும் இறங்கி நீந்துவதைத் தவிர எமக்கு வேறுவழி இருக்கவில்லை. இலங்கையில் இந்தியத் தலையீடு தவிர்க்க முடியாததொன்று. ஈவிரக்கமற்ற சிங்கள இனவாத அரசு, நாசகார நோக்குடைய அந்நியச் சக்திகளுடன் கைகோத்து நின்று சிறுபான்மைத் தேசிய இனமான தமிழ் மக்களைப் பூண்டோடு அழிக்க முனைந்த வேளையில், அதைத் தடுத்து நிறுத்துவது இந்தியாவின் தார்மீக அறிநெறிக் கடப்பாடாகியது. இந்தியத் தலையீட்டின் உள்நோக்கம் என்னவென்பது எமக்கு ஆரம்பத்திலிருந்தே தெரிந்த விடயம். இராஜதந்திர - இராணுவ பரிமாணங்களைக் கொண்ட இந்தியத் தலையீட்டுத் திட்டத்தில் தமிழ்ப் போராளி அமைப்புக்களின் பங்கு மிகவும் குறுகியது; மட்டுப்படுத்தப்பட்டது; போரியல் ரீதியானது.

> தமிழர்களுக்கு ஒரு தனியரசை உருவாக்கிக் கொடுக்கும் நோக்கம் இந்திராகாந்தி அம்மையாருக்கு இருக்கவில்லை என்பதை இந்தியத் தலையீடு தொடங்கிய காலத்திலிருந்தே விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் அறிந்திருந்தது. இந்தியப் படையெடுப்புக்கான புறநிலையை உருவாக்கிக் கொடுத்த கிழக்கு வங்காளப் புரட்சிவாதிகளான 'முக்தி பகானிகள்' வகித்த பங்கு தமிழ்ப் போராளிகளுக்கு வழங்கப்படவில்லை.

ஜெயவர்த்தனா அரசுக்கு இராணுவ அழுத்தம் கொடுத்து, அதனை ஆட்டம் காணச் செய்து, சமாதானப் பேச்சுக்கள் வாயிலாகத் தமிழர் பிரச்சினைக்குச் சமரசத் தீர்வு காண வைப்பதே இந்தியத் தலையீட்டின் உள்நோக்கமாகும். வங்காள தேசத்தில் தலையிட்டமை போன்று இலங்கையிலும் தலையிட்டு, தமிழர்களுக்கு ஒரு தனியரசை உருவாக்கிக் கொடுக்கும் நோக்கம் இந்திராகாந்தி அம்மையாருக்கு இருக்கவில்லை என்பதை இந்தியத் தலையீடு தொடங்கிய காலத்திலிருந்தே விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடம் அறிந்திருந்தது. இந்தியப் படையெடுப்புக்கான புறநிலையை உருவாக்கிக் கொடுத்த கிழக்கு வங்காளப் புரட்சிவாதிகளான 'முக்தி பகானிகள்' வகித்த பங்கு தமிழ்ப் போராளிகளுக்கு வழங்கப்படவில்லை. ஜனாதிபதி ஜெயவர்த்தனா தனது இராணுவ அணுகுமுறைக் கடும்போக்கைக் கைவிட்டு, சமரச வழியை நாடும் வரை ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு, ஒரு குறிப்பிட்ட மட்டத்துக்கு சிங்கள ஆயுதப் படைகளுக்கு அழுத்தம் கொடுப்பதே தமிழ்க் கெரில்லா வீரர்களுக்கு வகுக்கப்பட்ட பணியாகும். தீவின் இறையாட்சிக்கும் பிரதேச ஒருமைப்பாட்டுக்கும் பங்கம் ஏற்படாதவாறு ஒன்று பட்ட இலங்கைக்குள் ஒரு நியாயமான அரசியல் தீர்வைப் பெற்றுக் கொடுப்தே இந்திராகாந்தியின் தந்திரோபாயத்தைப் புரிந்து கொள்ளத் தவறிய தமிழ்நாட்டு, தமிழீழ அரசியல் தலைவர்கள் சிலர் இந்திய அரசு இலங்கை மீது படையெடுப்பை நடத்த ஆயத்தமாகியது எனக் கருதினர். ஆனால், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் இத்தகைய கற்பனாவாதத்தைக் கொண்டிருக்கவில்லை. மட்டுப்படுத்தப்பட்ட ஓர் அரசியல் குறிக்கோளை அடைவதற்குத் தமிழ்ப் போராளிகளைக் கூலிப் படைகளாகப் பாவிப்பதே இந்திய இராணுவப் பயிற்சித் திட்டத்தின் நோக்கம் என்பதைப் பிரபாகரன் நன்கு அறிவார். ஆயினும், எதற்கும் விட்டுக்கொடுக்காத கடும் போக்கை ஜெயவர்த்தனா ஆட்சிப்பீடம் கடைப்பிடிக்கும் என்பதால், இந்தியாவின் தந்திரோபாயம் இறுதியில் தோல்வி காணும் என்பதையும் பிரபாகரன் உணர்ந்திருந்தார். இந்தியத் தலையீட்டு முயற்சி ஈற்றில் தோல்வியைத் தழுவும் என்பதையும், அதில் எமது பங்கு மட்டுப்படுத்தப்பட்டது என்பதையும், நாம் உணர்ந்து கொண்ட போதும், எமது படைவலுவைக் கட்டி எழுப்பும் நோக்குடன் நாம் அந்த முயற்சியில் தீவிர பங்காளி ஆனோம். இந்தியாவின் திட்டத்தில் நாம் பங்கு பற்றாது விடுவோமானால் அரசியல், இராணுவ ரீதியாக எமது இயக்கம் ஓரம் கட்டப்படுவதுடன் ஏனைய அமைப்புகளின் எழுச்சிக்கும் வளர்ச்சிக்கும் நாம் வழி சமைத்துக் கொடுப்பதாக முடியும்.

இந்தியத் தலையீட்டின் ஆக்க பூர்வமான அம்சம் என்னவென்றால், அது தமிழரின் தேசியப் போராட்டத்துக்கு ஒரு தார்மீக வலுவைக் கொடுத்ததேயாகும். கொழும்பு அரசுடன் இந்தியா இராஜதந்திர ரீதியில் தலையிட்டமை தமிழரின் இனப் பிரச்சினையைச் சர்வதேச மயப்படுத்தியது. அத்துடன், தமிழ்ப் போராளிகளுக்கு இராணுவப் பயிற்சி வழங்க இந்திய அரசு முன்வந்தமை பல்லாயிரக்கணக்கான தமிழ் இளைஞர்களை ஆயுதப் போராட்டத்தில் கவர்ந்து இழுத்ததுடன், தமிழீழத் தாயகத்தில் தேசிய எழுச்சியையும் விடுதலைப் போராட்டத்தில் நம்பிக்கையையும் பிறக்கச் செய்தது.

(தொடரும்...)

## சர்வதேச கல்வி நிறுவனங்களுடன் கிழக்குப் பல்கலைக்கழகம் இணைப்பு

மட்டக்களப்பு, ஜன.14

கிழக்குப் பல்கலைக் கழகத்தில் சர்வதேச உயர் கல்வி நிறுவனங்களுடனான கல்விசார் இணைப்புக்கள் முன்னெடுக்கப் படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

துணைவேந்தர் பேராசிரியர் த.ஜெயசிங்கம் அண்மையில் கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகம், சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் ஆகிய பல்கலைக்கழகங்களுக்குப் பயணம் செய்தமையை அடுத்து கல்விசார் ஒத்துழைப்புத் தொடர்பாக 3 புரிந்துணர்வு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

இதன்படி கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக் கழகத்தின் இணைப்பாளராக பி.பிரதீஸ் (சிரேஷ்ட விரிவுரையாளர் - திருகோணமலை வளாகம்), தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழகத்தின் இணைப்பாளராகக் கலாநிதி ஞா.தில்லைநாதன் (சிரேஷ்ட விரிவுரையாளர் - சமூகவியல்), அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இணைப்பாளராக த.பிரபாகரன் (சிரேஷ்ட விரிவுரையாளர் - முகாமைத்துவம்) ஆகியோர் செயற்படுவர்.

மேலும் தாய்லாந்திலுள்ள ஐக்கிய நாடுகள் நிறுவனத்தால் பட்ட மேற்படிப்பு நிறுவனமாக நிறுவப்பட்ட ஆசிய தொழில்நுட்ப நிறுவனத்துடன் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றும் துணைவேந்தர் பேராசிரியர் த.ஜெயசிங்கத்தால் கைச்சாதிடப்பட்டுள்ளது.

இதன்படி, இந்தப் புரிந்துணர்வு உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட அம்சங்களான, மாணவர் மற்றும் ஆள்வளப் பரிமாற்றம், பட்ட மேற்படிப்புக்கான உதவிகள், ஆய்வு மற்றும் இணைந்த நிகழ்சித் திட்டங்களில் சர்வதேச மாநாடுகள் மூலம் பரஸ்பரம் பங்கெடுத்தல், அமைய இருக்கின்ற தொழில்நுட்ப பீடத்தை விருத்தி செய்வதற்கான உதவிகள் ஆகியவை இடம்பெற்றுள்ளன. (எ)

# திருமலை மாவட்ட செயலகத்துக்கு முஸ்லிம் அலுவலர்களை நியமிக்குக!

## இம்ரான் மஹ்ரூப் எம்.பி. ஜனாதிபதிக்குக் கடிதம்



திருகோணமலை, ஜன.14

திருகோணமலை மாவட்டச் செயலகத்தில் பொறுப்புவாய்ந்த பதவி எதிலும் முஸ்லிம் உத்தியோகத்தர்கள் இல்லை. எனவே, ஏதாவது பொறுப்பு வாய்ந்த பதவிகளுக்கு முஸ்லிம் உத்தியோகத்தர்களை நியமிக்க ஏற்பாடு செய்யுமாறு திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

''திருகோணமலை மாவட்டத்தில் தற்போது முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழ்ந்து வருகின்றனர். எனினும், மாவட்டச் செயலகத்தில் எந்தவொரு பொறுப்பு வாய்ந்த பதவியிலும் முஸ்லிம் அதிகாரிகள் இல்லை. இதுகுறித்து இந்த மாவட்ட முஸ்லிம் மக்களிடம் பெருங் கவலை உள்ளது.

''கடந்த அரசு காலத்தில் அரச அதிபராகக் கடமையாற்றிய ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரியின் கெடுபிடியால் இந்தச்செயலகத்தின் கீழ் கடமையாற்றிய முஸ்லிம் உத்தியோகத்தர்கள் வெளியேற்றப்பட்டனர்.

''இந்தக் குறைபாடு எமது நல்லாட்சி அரசு காலத்தில் நிவர்த்திக்கப்பட வேண்டும் என்று இம் மாவட்ட முஸ்லிம் மக்கள் விரும்புகின்றனர். இது பற்றிய தொடர் கோரிக்கைகளை அவர்கள் எனக்கு விடுத்து வருகின்றனர்.

''தற்போது இந்தச் செயலகத்தில் திவிநெகும மாவட்டப்பணிப்பாளர் பதவி வெற்றிடமாக உள்ளது.

''எனவே, இந்தப் பதவிக்கு முஸ்லிம் அதிகாரி ஒருவரை நியமிப்பதன் மூலம் போதுமான முஸ்லிம் உத்தியோகத்தர்களை நியமிக்கும் பணியை ஆரம்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.'' - என்றுள்ளது.

இந்தக் கடிதத்தின் பிரதிகள் சமூக வலுவூட்டல் அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க, பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளன. (எ)

## உலகப் பொருளாதார வளர்ச்சி இவ்வருடம் 2.7 ஆல் அதிகரிக்கலாம்

கொழும்பு, ஜன.14

உலகப் பொருளாதார வளர்ச்சி இவ்வாண்டில் 2.7 சதவீதம் வரை அதிகரிக்கக்கூடும் என்று உலக வங்கி எதிர்வுகூறியுள்ளது.

இதன் பிரகாரம் வளர்ச்சி கண்ட நாடுகளின் பொருளாதார வளர்ச்சி 1.8 சதவீதத்தையும், வளர்ச்சி காணும் நாடுகளின் பொருளாதார வளர்ச்சி 4.2 சதவீதத்தையும் அடையும் என்று எதிர்வு கூறப்பட்டுள்ளது. உலக வங்கி விடுத்துள்ள நிதிநிலைமை பற்றிய அறிக்கையில் இந்தப் புள்ளி விவரங்கள் இடம்பெற்றுள்ளன.

இந்தமாற்றம் பொருளாதார வளர்ச்சி குறித்த எதிர்பார்ப்பில் சிறிதளவு நம்பிக்கையைச் சேர்த்துள்ளதாக வங்கியின் தலைவர் ஜிம் யொங் கிங் தெரிவித்தார். (எ)

## வாகரையில் நடைபெற்ற இன ஒற்றுமைப் பொங்கல்



மட்டக்களப்பு, ஜன.14

'இன ஒற்றுமையை வளர்க்க இளையோர் நாம் கொண்டாடும் இனிய தைப்பொங்கல் விழா' எனும் தொனிப் பொருளில் கிராம இளைஞர் தலைமைத்துவ அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மாவட்டப் பொங்கல் விழா மட்டக்களப்பு வாகரை கதிரவெளிப் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் அனுசரணையுடன் ஐரோப்பிய உதவித் திட்டத்தின் கீழ் கிராம மட்ட இளைஞர் தலைமைத்துவ அபிவிருத்தித் திட்டத்தில் பங்கு கொண்ட சுமார் நூறு இளைஞர், யுவதிகளை மையப்படுத்தி இந்த இளைஞர் இன ஒற்றுமைப் பொங்கல் விழா இடம்பெற்றது என வாகரைப் பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

இந்தநிகழ்வில் வாகரைப் பிரதேச செயலாளர், எஸ.ஆர். ராகுலநாயகி, உதவித் திட்டமிடல் பணிப்பாளர் கெங்காதரன் உட்பட பிரதேச செயலக அலுவலகர்கள், கிராம பொதுமக்கள், கிராம இளைஞர் தலைமைத்துவ அபிவிருத்தித் திட்டத்தில் பங்கு கொண்ட இளைஞர், யுவதிகளும் கலந்து கொண்டனர். (எ,

## அசௌகரியம் ஏற்படாதவாறு கட்டுநாயக்க புனரமைப்புப் பணி

கொழும்பு, ஜன.14

பயணிகளுக்குஅசௌகரியங்களை ஏற்படுத்தாத வகையில் கட்டுநாயக்க விமான நிலைய ஓடுதளத்தின் புனரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று இலங்கையின் தேசிய விமான சேவையான ஸ்ரீலங்கன் விமானசேவை நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, ஓடுதளத்தின் புனரமைப்பு நடவடிக்கை காரணமாக கடந்த 6ஆம் திகதியில் இருந்து ஏப்ரல் மாதம் 6ஆம் திகதி வரை காலை 8.30 மணியில் இருந்து மாலை 4.30 மணி வரை கட்டுநாயக்க விமான நிலையம் மூடப்பட்டுள்ளது.

இதன் காரணமாக 5 மணித்தியாலத்துக்கு முன்னர் விமான நிலையத்துக்கு வருகைதருமாறு அனைத்துப் பயணிகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

எப்படியிருப்பினும், ஸ்ரீலங்கன் விமான சேவை, சிவில் விமான சேவை அதிகார சபை மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளின் திறமை காரணமாக விமான நிலையத்தின் நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்ள முடியும் என்று அந்த விமான சேவையால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், முடிந்தவரை திறமையான மற்றும் வலுவானசேவை வழங்குவதற்கு அனைத்துத் தரப்பில் இருந்து கிடைக்கும் ஆதரவை மதிப்பதாக ஸ்ரீலங்கன் விமான சேவையின் பிரதான நிறைவேற்று அதிகாரி சுரேன் ரத்வத்த தெரிவித்துள்ளார். (எ)

## குளிரைப்போக்கச் சென்று பரிதாபமாக உயிரிழந்த சிறுமி

பதுளை, ஜன.14

குளிரைப் போக்குவதற்காக அடுப்புக்கு அருகில் சென்ற 5 வயதுச் சிறுமி ஒருவர் தீப்பிழம்பு பரவி உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்துள்ள சிறுமி பதுளை - கந்த கெட்டிய பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது;


அந்தச் சிறுமி வீட்டின் அடுப்பின் அருகே நேற்று முன்தினம் காலை குளிரைப் போக்கிக் கொண்டிருந்த நிலையில், அவரது தாயார் கழிவறைக்குச் சென்றுள்ளார்.

இதன்போது அந்தச் சிறுமி வெப்பம் வேண்டி அடுப்பில் மண்ணெண்ணெயை ஊற்றியுள்ளார். இதன் போது சிறுமி அணிந்திருந்த உடையில் தீப்பிழம்பு பரவியுள்ளது எனக் கூறப்படுகின்றது.

அதன்பின்னர் கடும் தீக்காயங்களுக்கு உள்ளான சிறுமி, கந்தகெட்டிய மருத்துவனையில் சேர்க்கபட்ட நிலையில், மஹியங்கனை மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

தொடர்ந்தும் கவலைக்கிடமான நிலையில் பேராதனை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

எனினும், சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் மாலை அந்தச் சிறுமி பரிதாபமாக உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் கூறியுள்ளனர். (எ)




நெஸ்லே லங்கா நிறுவனத்தின் பால் மற்றும் தெங்குசார் உற்பத்தியை அதிகரிப்பதற்காகப் பன்னல பிரதேசத்தில் நிர்மாணிக்கப்படவுள்ள புதிய தொழிற்சாலைக்கான அடிக்கல் நேற்று முன்தினம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் நடப்பட்டது. இந்த நிகழ்வின் போது நெஸ்லே லங்கா நிறுவனத்தின் வர்த்தக மட்டத்திலான மிகச் சிறந்த பாற்பண்ணையாளர்களைப் பாராட்டும் திட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட முதல் 3 இடங்களைப் பெற்றவர்களுக்கான பரிசில் மற்றும் சான்றிதழ்களும் ஜனாதிபதியால் வழங்கப்பட்டன.

காலைக்கதிர் Kalaikkathir



## அமெ.துணை ஜனாதிபதி கண்ணீருடன் விருது



அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவிடம் துணை ஜனாதிபதி ஜோ பிடன் கண்ணீருடன் விருது பெற்றார். ஜோபிடன், ஒபாமா ஆட்சியில் 8 ஆண்டுகள் துணை ஜனாதிபதியாகப் பணிபுரிந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க ஜனாதிபதியாக எதிர்வரும் 20 ஆம் திகதி ரொனால்ட் ட்ரம்ப் பதவி ஏற்கிறார். எனவே, தற்போதைய ஜனாதிபதி ஒபாமாவின் பதவிக்காலம் இன்னும் ஒரு வாரத்தில் முடிவடைகிறது.

இந்தநிலையில் அமெரிக்காவின் மிக உயரிய குடிமகனுக்கான 'சுதந்திர ஜனாதிபதி பதக்கம்' என்ற விருது வழங்கும் விழா வொஷிங்டனில் உள்ள வெள்ளை மாளிகையில் நடைபெற்றது.

அதில் ஜனாதிபதி ஒபாமா மற்றும் துணை ஜனாதிபதி ஜோ பிடன் ஆகியோரின் குடும்பத்தினர் உட்பட உயர் அதிகாரிகள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் பங்கேற்றனர்.


இந்த விருது யாருக்கு வழங்கப்படுகிறது என்பது இரகசியமாக வைக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் விருது வழங்கும் முன்பு மேடைக்கு வந்த ஒபாமா அந்த விருதுக்குரியவராக துணை ஜனாதிபதி ஜோபிடன் பெயரை அறிவித்தார்.

இதை சற்றும் எதிர்பாராத ஜோ பிடன் ஆனந்த அதிர்ச்சி அடைந்தார். அவரால் அதை நம்ப முடியவில்லை. அவரை அறியாமல் கண்களில் இருந்து கண்ணீர் வடிந்தது.

# கியூபா குடியேறிகளுக்கான விசா இழுபறி முடிவுக்கு!

வொஷிங்டன், ஜன.14

கியூபா மக்கள் விசா இல்லாமல் குடியேறிகளாக அமெரிக்காவுக்குச் சென்று தங்க அனுமதிக்கும் நீண்டகாலக் கொள்கையை ஜனாதிபதி பராக் ஒபாமா முடிவுக்குக் கொண்டு வந்துள்ளார்.



20 ஆண்டுகளாக இருந்து வருகின்ற இந்த கொள்கைப்படி, அமெரிக்காவுக்கு குடியேறிகளாகச் சென்றடையும் கியூபா மக்கள், அங்கு ஓராண்டு தங்கியிருந்த பின்னர், சட்டப்படி நிரந்தரமாகத் தங்குகின்ற உரிமையைப் பெறுபவர்களாக இருந்து வந்தனர்.

இதற்குப் பதில் நடவடிக்கையாக, அமெரிக்காவிலிருந்து திருப்பி அனுப்பப்படும் அல்லது நாடு கடத்தப்படும் தங்களது மக்களை ஏற்றுக் கொள்ள கியூபா ஒப்புக் கொண்டுள்ளது. அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவியில் இருக்கும் இறுதி நாள்களில் கியூபாவோடு நல்லுறவை ஏற்படுத்துவதற்கு பராக் ஒபாமா மேற்கொண்டு வருகின்ற முயற்சிகளின் தொடர்ச்சியாக இது அமைகிறது.

விசா இல்லாமல் அமெரிக்காவுக்குச் செல்ல அனுமதிக்கிற கொள்கையானது இதுவரை கியூபா மக்களுக்கு மட்டுமே பொருந்துவதாக இருந்து வந்துள்ளது.

இதேவேளை, விசா இல்லாமல் அமெரிக்கா வருகின்ற பிற நாட்டு குடியேறிகள் கைது செய்யப்பட்டு நாடுகடத்தப்பட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

## சிரியாமீது இஸ்ரேல் ரொக்கெட் தாக்குதல்

டமாஸ்கஸ், ஜன.14

டமாஸ்கஸ் நகரில் இராணுவ விமான நிலையம் அருகே ரொக்கெட்டுக்களை ஏவி இஸ்ரேல் தாக்குதல் நடத்தியதாக சிரியா குற்றம் சாட்டியுள்ளது.

இஸ்ரேலில் இருந்து அடுத்தடுத்து ஏவப்பட்ட ரொக்கெட்டுகளும், ஏவுகணைகளும் சிரியத் தலைநகரான டமாஸ்கஸ் நகரின் மேற்குப் பகுதியில் உள்ள மெஸ்ஸே இராணுவ விமான நிலையம் அருகே விழுந்து வெடித்தன என்று சிரியா அரசின் செய்தி நிறுவனமான 'சனா' தெரிவித்துள்ளது.

சிரியாவில் அரசுக்கு எதிராகப் போராடிவரும் கிளர்ச்சிக் குழுக்களுக்கு ஆதரவாக இஸ்ரேல் இவ்வாறு அத்து மீறித்தாக்குதல் நடத்தியுள்ளது எனவும் குற்றம் சாட்டியுள்ள சிரிய அரசு இந்தக் கண்மூடித்தனமான தாக்குதலைப் பொருட்படுத்தாமல் கிளர்ச்சிக் குழுக்களுக்கு எதிரான எங்களது நடவடிக்கை தொடரும் என்றும் அறிவித்துள்ளது.

இந்தநிலையில் இஸ்ரேலின் தாக்குதலால் மெஸ்ஸே இராணுவ விமான நிலையம் அருகேயுள்ள சில பகுதிகள் தீப்பற்றி எரியும் காட்சிகளை சிரியா ஊடகங்கள் தொடர்ந்து ஒளிபரப்பி வருகின்றன. (எ)

## போலந்துக்குள் அமெ.படையினர் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்

### ரஷ்யா கூறுகிறது



மொஸ்அகா, ஜன.14

அமெரிக்காவின் டாங்கிகளுடன் அந்நாட்டுப் படையினர் போலந்துக்கு அதிகளவில் அனுப்பப்பட்டுள்ளனர். இது தேசிய பாதுகாப்புக்கு ஓர் அச்சுறுத்தல் என்று ரஷ்யா தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் இந்த நடவடிக்கை ரஷ்யாவின் நலன்களுக்கு எதிர் நடவடிக்கையாகப் பார்க்கப்படுவதாகவும், அதுமட்டுமின்றி மூன்றாவது நாட்டில் அதுவும் ஐரோப்பிய நாடு அல்லாத ஒன்றில் அமெரிக்கா ஈடுபட்டுள்ளதாகவும் ரஷ்யப் பேச்சாளரான டிமிட்ரி பாஸ்கோப் தெரிவித்துள்ளார்.

நேட்டோவின் கிழக்கு எல்லைப் பகுதியையொட்டி ஆயிரக்கணக்கான அமெரிக்கப் படையினர், டாங்கிகள் மற்றும் கவச வாகனங்கள் சகிதம் அனுப்பப்பட்டுள்ளனர்.

ரஷ்யாவிடமிருந்து உடனடி அச்சுறுத்தல் எதையும் தான் காணவில்லை என்றும், ஆனால், பலத்தைப் பிரயோகிக்க இப்போது மேலும் வீறு கொண்டு வரும் ரஷ்யா, தான் தயாராக இருப்பதாகவே காட்டியிருக்கிறது. உதாரணமாக கிரைமியாவில் இது நடந்திருக்கிறது என்றும் அவர் எச்சரித்துள்ளார். (எ)

## டாடா குழுமத்துக்கு முதன்முதலில் தமிழர் தலைவர்

டாடா சன்ஸ் குழுமத்துக்கு முதன்முறையாக தமிழர் ஒருவர் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தமிழகத்தைச் சேர்ந்த நடராஜன் சந்திரசேகரன் என்பவரே இவ்வாறு தெரிவு செய்யப்பட்டவராவார். மும்பையில் நடைபெற்ற டாடா சன்ஸ் குழும கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இவர் நாமக்கல் அருகே உள்ள மோகனூரில் பிறந்தவர். திருச்சி என்.ஐ.டியில் எம்.சி.ஏ. படித்தவர். ரத்தன் டாடா தலைமையிலான 5 பேர் கொண்ட குழு இவரைத் தெரிவு செய்துள்ளது. கடந்த வருடம் டாடா சன்ஸ் தலைவர் பதவியில் இருந்த சைரஸ் மிஸ்திரியை நீக் கியமைக்குப் பின்னர், டாடா குழும தலைவரை தெரிவு செய்யும் பணி நடை பெற்று வந்தமை குறிப் பிடத்தக்கது. (எ)

## ராஜீவ் கொலைக் குற்றவாளிகளுக்கு அடைக்கலம் கொடுத்தவர் மரணம்

பெங்களூர், ஜன.14

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலைக்கு திட்டமிட்டார் எனக் குற்றஞ்சாட்டப்பட்ட சிவராசன், சுபா உள்ளிட்ட ஐந்து பேருக்கு அடைக்கலம் வழங்கியவர் மரணமானார் என்று தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

ஜே.ரங்கநாத் என்ற 60 வயதுடையவரே இவ்வாறு மரணமடைந்துள்ளார் என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அந்த நபர் நீண்டகாலமாக சிறுநீரகப் பாதிப்புக்கு உள்ளாகி இருந்த நிலையில் நேற்று முன் தினம் உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

> “இந்தக் குற்றச்சாட்டின் அடிப்படையில், ராஜீவ் காந்தி கொலை வழக்கில் 26 ஆவது பிரதிவாதியாக அவர் சேர்க்கப்பட்டிருந்தார்.”

மேலும், பெங்களூரில் உள்ள கொனானா குன்டே என்ற இடத்திலேயே அந்த ஐந்து பேருக்கும் அடைக்கலம் வழங்கினார் என்று ரங்கநாத் மீது குற்றம் சுமத் தப்பட்டுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டின் அடிப்படையில், ராஜீவ் காந்தி கொலை வழக்கில் 26 ஆவது பிரதிவாதியாக அவர் சேர்க்கப்பட்டிருந்தார்.

சந்தேகநபர்களுக்கு அடைக்கலம் வழங்கியதுடன், அவர்கள் தப்பிச் செல்ல உதவினார் என்று இந்திய புலனாய்வுப் பிரிவால் ரங்கநாத் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

அதையடுத்து, 1991 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்ட அவர், 1999 ஆம் ஆண்டு விடுதலை செய்யப்பட்டிருந்தார்.

தமிழகத்தின் அரசியல் வாதிகளான கொளத்தூர் மணி, பி. நெடுமாறன் ஆகியோருடன் ரங்கநாத் தொடர்புகளைக் கொண் டிருந்தார் என்றும் இந்திய செய்திகள் தெரிவித்துள்ளன.

இதேவேளை, ரங்கநாத் விடுதலைப்புலிகளுடன் 1980 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தொடர்புகளைக் கொண்டிருந்தவர் என்றும் சுவிற்ஸர்லாந்தில் சில காலம் தங்கியிருந்த போது விடுதலைப் புலிகளுக்கு அவர் நிதி சேகரித்தவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## விமானத்தில் பெண் பயணிகளுக்கு முதன்முறையாக பிரத்தியேக இருக்கை

### எயார் இந்தியா நிறுவனம் முடிவு

டில்லி, ஜன.14

உலகில் முதல் முறையாக விமானத்தில் பெண் பயணிகளுக்குப் பிரத்தியேக இருக்கை ஒதுக்கீடு செய்ய எயார் இந்தியா நிறுவனம் முடிவு செய்துள்ளது.

அரச நிறுவனமான ஏர் இந்தியா உள்ளூர் மற்றும் சர்வதேச விமான சேவைகளை வழங்கி வருகிறது. அதில் உள்ளூர் விமான சேவையில் பெண் பயணிகளுக்கென பிரத்தியேக இட ஒதுக்கீட்டை எதிர்வரும் 18ஆம் திகதி முதல் அளிக்க எயார் இந்தியா முடிவு செய்துள்ளது. ஒவ்வொரு விமானத்திலும் பெண்களுக்கு 8 இருக்கைகளை எயார் இந்தியா ஒதுக்க இருக்கிறது.

உலக அளவில் விமான நிறுவனம் ஒன்று பெண் பயணிகளுக்கு இருக்கை ஒதுக்கீடு செய்வது இதுவே முதல் முறையாகும். பெண் பயணிகள் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் இந்த முடிவை எடுத்துள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

(ஒ)

# சர்வதேச கிரிக்கெட் மைதானம் யாழ்ப்பாணத்தில் மண்டைதீவில்!



மங்கல விளக்கு ஏற்றுகிறார் சரா.எம்.பி.

யாழ்ப்பாணம், ஜன.14

யாழ்ப்பாணத்துக்கான சர்வதேச கிரிக்கெட் மைதானம் பெரும்பாலும் மண்டைதீவில் அமையும் சாத்தியம் இருப்பதாகத் தெரிய வருகின்றது.

நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த ஸ்ரீலங்கா கிரிக்கெட் அமைப்பின் தலைவரும், உப சபாநாயகருமான திலங்க சுமதிபால தலைமையிலான ஸ்ரீலங்கா கிரிக்கெட் அமைப்பின் உயர்மட்டக் குழு, யாழ்ப்பாணத்தில் சர்வதேச கிரிக்கெட் மைதானம் அமைப்பதற்காக இரண்டு இடங்களைப் பார்வையிட்டது.

யாழ். மாவட்டக் கிரிக்கெட் சங்கத்தின் தலைவர் க.தர்மகுலசிங்கம் சகிதம் மண்டைதீவு மற்றும் கோகிலாக்கண்டிப் பகுதியில் உள்ள இடங்களை இக்குழுவினர் பார்வையிட்டனர்.

கோகிலாக்கண்டியில் பார்வையிட்ட இடம் தனியாருக்கு உரியது என்றும், அதனைப் பெறுவதாயின் அதற்குரிய விலையைக் கொடுக்க வேண்டும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

ஆனால் மண்டைதீவில் இலங்கை வானொலி நிலைய அஞ்சல் நிலையம் இருந்த பிரதேசத்தை ஒட்டி சுமார் நூறு ஏக்கர் அரசகாணி இருப்பதாகக் கூறப்படுகின்றது. அதில் நாற்பது ஏக்கர் வரை வடக்கு மாகாண சபையினரால் சுற்றுலாத்துறை அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்படவுள்ளது என்றும், எஞ்சிய அறுபது ஏக்கரை சர்வதேச கிரிக்கெட் மைதானம் அமைப்பதற்கு வடக்கு மாகாண சபை மூலம் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் கூறப்படுகின்றது.





நேற்றைய கலந்துரையாடலின் போது...



கிரிக்கெட் ஆலோசகர் சைமண்ட் வில்லிஸ் மங்கல விளக்கேற்றியபோது...

வடக்கு மாகாண சபையின் சுற்றுலாத்துறை அபிவிருத்தி நடவடிக்கையுடன் ஸ்ரீலங்கா கிரிக்கெட் அமைப்பும் இணைந்து செயற்படுவதற்கான வாய்ப்புக்கள் குறித்தும் ஆராய்வதற்கு ஸ்ரீலங்கா கிரிக்கெட் அமைப்பு கரிசனை காட்டுவதாக நேற்றுக் கூறப்பட்டது.

இதேவேளை நேற்றுப் பகல் யாழ்ப்பாணம் கிறீன் கிறாஸ் ஹோட்டலில் நடைபெற்ற கலந்துரையாடலில் மாவட்டக் கிரிக்கெட் தரத்தை ஆராய்வதற்கான வழி வகைகள் குறித்து ஆராயப்பட்டது.

'திறமை வாய்ந்த ஒவ்வொரு கிரிக்கெட் வீரனுக்கும் நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கான நீதியான, நியாயமான வாய்ப்பளித்தல்' என்ற தலைப்பில் இக்கலந்துரையாடல் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் ஸ்ரீலங்கா கிரிக்கெட் அமைப்பின் அதிகாரிகள், யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் பிரதிநிதிகள் ஆகியோருடன் யாழ். மாவட்ட நடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனும் கலந்துகொண்டார்.

இந்த நிகழ்வின்போது, யாழ். மாவட்டக் கிரிக்கெட் அபிவிருத்திக்காக ஒரு தொகை விளையாட்டு உபகரணங்களையும் ஸ்ரீலங்கா கிரிக்கெட் அமைப்பினர் யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத் தலைவர் க.தர்மகுலசிங்கம் மற்றும் செயலாளர் சொ.விமலதாசன் ஆகியோரிடம் கையளித்தனர். (உ)



உப சபாநாயகர் திலங்க சுமதிபால உரை...



யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்க தலைவர் தர்மகுலசிங்கம் உரை...



கிரிக்கெட் உபகரணங்கள் கையளிப்பு...

# இலங்கைக்கு எதிரான 3ஆவது டெஸ்ட் வலுவான நிலையில் தென்னாபிரிக்கா

இலங்கை – தென்னாபிரிக்கா அணிகள் மோதும் மூன்றாவது டெஸ்ட் போட்டி ஜோகனஸ்பேர்க்கில் நேற்று முன்தினம் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற முதல்நாள் போட்டியின் ஆட்ட நேர முடிவில் தென்னாபிரிக்கா அணி 3 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 338 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டத்தை தென்னாபிரிக்க அணியின் அம்லா மற்றும் ஒலிவர் ஆகியோர் இணைந்து ஆரம்பித்தனர்.

ஒலிவர் 24 பந்துகளில் 3 ஓட்டங்களை மட்டுமே பெற்று மத்தியூஸின் பந்தில் ஆட்டமிழந்தார்.

பின்பு வந்த டு பிளேஸிஸ் 25 பந்துகளை எதிர்கொண்டு 16 ஓட்டங்களுடன் பிரதீப்பின் பந்தில் மெண்டிஸிடம் பிடிகொடுத்தார்.

அவரைத் தொடர்ந்து களத்துக்கு வந்த பவுமா 2 பந்துகளை மட்டும் சந்தித்து பிரதீப் வீசிய பந்தை எதிர்கொண்டு ஓட்டங்கள் எவற்றையும் பெறாமல் வந்த வேகத்திலேயே வெளியேறினார்.

பின்னர் அம்லாவுக்கு சோடியாக டி கொக் களமிறங்கினார்.

மிக நீண்ட நேரம் களத்தில் இருந்து நிதானமாக ஆடி வந்த அம்லா 265 பந்துகளை எதிர்கொண்டு 16 பவுண்டரிகள் அடங்கலாக 134 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் பிரதீப்பின் பந்து வீச்சில் சந்திமலிடம் பிடி கொடுத்து வெளியேறினார்.

அவரையடுத்து வந்த பிலேண்டர் 7 பந்துகளைச் சந்தித்து ஓட்டங்கள் எவற்றையும் பெறாமல் பிரதீப்பின் பந்து வீச்சுக்கு இலக்கானார்.

பார்னல் 23 ஓட்டங்களுடனும், டிகொக் 34 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க தென்னாபிரிக்கா அணி தனது முதல் இன்னிங்ஸில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 426 ஓட்டங்களை எடுத்தது.

நேற்று பந்துவீச்சில் பிரதீப் 4 விக்கெட்டுக்களையும், குமார 2 விக்கெட்டுக்களையும், மத்தியூஸ் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தனது முதல் இன்னிங்ஸுக்காக இலங்கை அணியின் கருணாரட்ண மற்றும் சில்வா ஆகியோர் களமிறங்கினர்.

கருணாரட்ண 4 பந்துகளை மட்டுமே சந்தித்து ஓட்டங்கள் எவற்றையும் பெறாமல் வெளியேறினார்.

சில்வா 42 பந்துகளுக்கு 13 ஓட்டங்களைப் பெற்று றபாடாவின் பந்துவீச்சில் டி கொக்கிடம் பிடிகொடுத்தார். மெண்டிஸ் 58 பந்துகளைச் சந்தித்து 41 ஓட்டங்களை எடுத்த நிலையில் றபாடாவின் பந்துக்கு இலக்கானார்.

டி சில்வா 10 ஓட்டங்களில் பிலேண்டரின் பந்துக்கு பவுமாவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இருள் காரணமாக நேற்றைய இரண்டாம் நாள் போட்டிகள் அத்துடன் நிறைவுக்கு வந்தன.

நேற்றைய ஆட்ட நேர முடிவில் இலங்கை அணி 4 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 80 ஓட்டங்களை எடுத்திருந்தது.

மத்தியூஸ் 11 ஓட்டங்களுடனும், சந்திமால் 3 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர்.

பந்துவீச்சில் பிலேண்டர் மற்றும் றபாடா ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

# வடக்கு கல்வி அமைச்சரின் வாழ்த்தில் பட்ட மரம், வெற்றுப் பானை, வரண்ட நிலம்

## கல்வியியலாளர்கள் அதிருப்தி


யாழ்ப்பாணம், ஜன.14

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் த.குருகுலராசா வடக்கில் உள்ள கல்வியியலாளர்களுக்கு அனுப்பிவைத்துள்ள தைப்பொங்கல் வாழ்த்து தொடர்பாககல்வியியலாளர்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

அவர் அனுப்பிய வாழ்த்து அட்டை வெற்றுப் பானை, வெடித்த நிலம், பட்டுப்போன மரம், வெளுத்த வானம் என்பவற்றைக்காட்சிகளாக உள்ளடக்கியுள்ளது. இதன் அர்த்தத்தை புரிந்துகொள்ள முடியவில்லை என்று கல்வியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மங்கலகரமானநிகழ்வொன்றுக்கு பிறர் வாழ்வு வளமும் நலமும் பெறவேண்டும் என்று வாழ்த்தி அனுப்புகின்றவாழ்த்து அட்டைகள்மங்கலகரமானதாக இருக்கவேண்டுமே அன்றி, வரண்டுபோனவாழ்வைத் தேடுவனவாக இருக்கக்கூடாது.

ஆனால், வடக்கு கல்வி



அமைச்சர் அனுப்பிய வாழ்த்து அட்டை வரண்டுபோன காட்சிகளை உள்ளடக்கியுள்ளமை தொடர்பாக கல்வியலாளர்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

எனினும் தற்போதைய வரட்சி நிலையைக் குறிப்பால் உணர்த்த இந்த உக்தியை அவர் கையாண்டார் என சிலர் கருத்து வெளியிட்டனர் (ம)

# மாற்றுத் திறனாளிக் குடும்பங்களுக்கு பொங்கல் பொருள்கள் வழங்கப்பட்டன

## சிவன் அறக்கட்டளை நிறுவனத்தால்

கிளிநொச்சி, ஜன.14

கிளிநொச்சியிலுள்ள மாற்றுத் திறனாளிகளின் குடும்பங்களுக்கு சிவன் அறக்கட்டளை நிறுவனத்தினால் பொங்கல் பொருட்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு அருகாமையிலுள்ள மாற்றுத்திறனாளிகள் சங்கத்தின் பணிமனையில் சிவன் அறக்கட்டளை நிறுவனத்தின் தலைவர் கணேஸ்வரன் வேலாயுதம் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

இந்நிகழ்வில்நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர்



செல்வம் அடைக்கலநாதன் கலந்து கொண்டார். மேலும், வடமாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் உட்பட மேலும் பலர் இந்நிகழ்வில் பலர் கலந்து கொண் டனர்.

இதில் பொங்கலுக்குரிய பானை, அரிசி, தேங்காய், அகப்பை, சர்க்கரை, பயறு உள்ளிட்ட பொருட்களும் உபகரணங்களும் வழங்கப்பட்டன. (ம)

### பல்கலைக்கழக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாறு உத்தரவிட்டவர் யார் என்பது பற்றிய விசாரணை அறிக்கை, பொலிஸாரின் விசாரணை அறிக்கை, சூடு நடத்துவதற்குப் பயன்படுத்தப்பட்ட துப்பாக்கி பற்றிய விசாரணை அறிக்கை, கொல்லப்பட்ட மாணவர்களின் பெற்றோரை மாங்குளத்திற்கு அழைத்து விசாரணை செய்த பொலிஸ் அதிகாரியிடம் நடத்திய விசாரணை அறிக்கை என்பவற்றைச் சமர்ப்பிக்குமாறு குற்றப் புலனாய்வுப் பொலிஸாருக்கு கடந்த வழக்குத்தவணையின் போது நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்த அறிக்கைகள் நேற்று நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படாமையால் நீதிவான் விசனம் வெளியிட்டார். மாணவர்களின் கொலை விசாரணை அறிக்கையை சமர்ப்பிக்கத் தாமதப்படுத்துவதன் மூலம் வழக்கு விசாரணையை வேறு திசைக்கு நகர்த்துவதற்கு முயற்சிக்கின்றீர்களா? இந்தக் கட்டத்தில் எதற்காக சட்டமா அதிபரின் ஆலோசனை பெறுகிறீர்கள்? – என்று பொலிஸாரிடம் கேள்வி எழுப்பினார்.

சம்பந்தப்பட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அடுத்த வழக்குத் தவணையின்போது மன்றில் ஆஜராகி விசாரணைகள் தொடர்பாக விளக்கமளிக்க வேண்டும். அவர் மன்றில் ஆஜராகாவிட்டால், மன்று அவருக்கு எதிராகப் பகிரங்க பிடியாணை பிறப்பித்து அவரைக் கைது செய்யும் என்றும் நீதிதிவான் எச்சரித்தார்.

மேற்படி வழக்கு எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (ம)

### ‘சனல் - 4’...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நியப்படலாம் என வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

பிரிட்டனுக்குச் சென்றுள்ள வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர கடந்த புதன்கிழமை லண்டன் சத்தம் ஹவுஸில் இடம்பெற்ற முக்கிய கலந்துரையாடல் ஒன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு கூறினார்.

இலங்கையில் உண்மையானநல்லிணக்கம்ஏற்படவேண்டுமாயின் தமிழ் மக்கள் மீது அரச படையினரால் இழைக்கப்பட்ட போர்க்குற்றங்கள் உள்ளிட்ட ஏனைய குற்றங்களை சிங்கள மக்கள் பார்வையிடவேண்டும் என்றும் தனது ஆவணப்படத்தை இலங்கையில் திரையிடுவதற்கு ஏன் இலங்கை அரசு தயங்குகிறது என்றும் இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றியிருந்த ‘சனல் 4’ தொலைக்காட்சியின் நோ பயர் ஸோன்’ ஆவணப்படத்தின் இயக்குனர் கலம் மக்ரே அமைச்சர் மங்கள சமரவீரவிடம் கேட்டார்.

சர்ச்சைக்குள்ளான காலப் பகுதியிலேயே இந்த ஒளி நாடாவை தான் இலங்கையில் பார்த்தார் என்றும் தற்போது இனங்களுக்கிடையிலான நல்லிணக்க முயற்சிகளில் அரசு தீவிரமாக இறங்கியிருக்கும் வேளையில் இந்த ஒளிநாடா திரையிடப்பட்டால் அது அரசிடமிருந்து தமிழர் அந்நியப்பட அல்லது விலகிச் செல்ல வழி வகுக்கும் என்று அஞ்சுவதாகவும் அதற்குப் பதிலளித்த அமைச்சர் சமரவீர தெரிவித்தார்.

ஆனாலும் இந்த ஆவணப் படத்தை இலங்கையில் திரையிடுவதற்கான ஒரு காலம் விரைவில் வரும் என்று தான் நம்புகின்றார் எனவும் அமைச்சர் மங்கள தெரிவித்தார்.

மீளவும் இலங்கைக்கு வர வேண்டும் என்று கலம் மக்ரேக்கு அழைப்பு விடுத்த அமைச்சர் மங்கள கடந்த 18 மாதங்கள் என்ற இந்தக் குறுகியகாலப்பகுதிக்குள் அரசு கணிசமான அளவு மாற்றத்தை வடக்கில் மேற்கொண்டுள்ளது என்றும் கூறினார். (ஓ)

### அடுத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த ஆண்டில் ஆட்சியைக் கவிழ்ப்பேன் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அண்மையில் சூளுரைத்திருந்தார். இந்த நிலையில் ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கெஹலிய ரம்புக்வெல உட்பட பலரும் ஆட்சிக்கவிழ்ப்பு பற்றி அண்மைக்காலமாகக் கருத்துத் தெரிவித்து வருகின்றனர்.

தேர்தல் முறைமை மாற்றம் தொடர்பில் 1978ஆம் ஆண்டிலிருந்தே பிரதான கட்சிகள் இரண்டும் பேச்சுக்களை நடத்தி வருகின்றன. தற்போதுதான் தேர்தல் முறைமை மாற்றம் மற்றும் புதிய அரசமைப்பு தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே நாட்டுக்கும் மக்களுக்கும் முன்பாக நமக்கு பல சவால்கள் உள்ளன.

இரண்டு கட்சிகளும் பிரிந்து சென்று ஆட்சியமைப்பது என்பது வெறும் கனவாகும். மஹிந்த ராஜபக்ஷ புதிதாக ஆட்சியமைப்பதுபற்றிதற்போது தெரிவித்துவருகின்றார். அந்தக் காய்ச்சல்ஹெகலியரம்புக்வெலவுக்கும் தொற்றியுள்ளது. அது வெறும் கனவாகுமே தவிர நடைமுறைக்குச் சாத்தியமானதல்ல.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது பதவியேற்பின் போது இனியொரு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என்று கூறியிருந்தார். எனினும் கடந்த பொதுத் தேர்தலில் கிடைத்த வெற்றியைத் தொடர்ந்து பிரதான இரண்டு கட்சிகளையும் இணைத்து தேசிய அரசை அமைக்க வேண்டிய நிலை ஜனாதிபதிக்கு நேரிட்டது. சர்வதேச அளவில் காணப்பட்ட சவால்களை எதிர்கொள்வதற்கு ஜனாதிபதி முன்வந்தார். சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைத்துவத்தையும் பொறுப்பேற்றுக்கொண்டார். எனவே சுதந்திரக் கட்சியுடன் ஜனாதிபதி இணக்கப்பாட்டுடன் செயற்பட வேண்டிவரும் என்ற வகையில் அடுத்த ஜனாதிபதித் தேர்தலிலும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வேட்பாளராக முன்னிற்பதற்கு ஏற்படும். – என்றார். (ஓ)

### கண்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று மிருக வைத்தியப் பிரிவு தெரிவித்துள்ளது.

இப்போது இது மனிதர்களில் இருந்தே மனிதர்களுக்கு பரவியதாகக் கருதப்படுகின்றது.

பறவைகளில் இருந்து பறவைகளுக்கும் பன்றி போன்ற விலங்குகளுக்கு இடையிலும் இந்த வைரஸ் பரவத் தொடங்கினாலே அது ஆபத்தானதாகவும், தடுக்கக் கஷ்டமானதாகவும் அமைவதோடு எல்லை மீறி மனித உயிர்களையும் காவு கொள்ளும் என்று வைத்திய வட்டாரங்கள் சுட்டிக்காட்டின.

அந்நிலைமை ஏற்படாத வரை இந்த வைரஸ் இன்புளுவன்சா காய்ச்சலை ‘பறவைக் காய்ச்சல்’ அல்லது ‘பன்றிக் காய்ச்சல்’ எனக் கருதிப் பீதி கொள்ளத் தேவையில்லை என்றும் வைத்திய வட்டாரங்கள் சுட்டிக்காட்டின.

# வித்தைப் பொங்கல்

ஊரிழந்தும் உறவிழந்தும் நலிந்தவர்;
வலிசுமந்த நெஞ்சினர் நொந்தழும்
கண்ணீர்ப் பொங்கல் நின்றிடா மண்ணிலே
இத்தைப் பொங்கலொரு வித்தைப் பொங்கல்!

சிறைப்பட்ட உறவுகள் முறைப்பட்டும் முறைப்பட்டும்
அடைபட்டே அழுந்திடும்
முறைக்கெட்ட ‘நல்லிணக்க விறுத்தத்தில்’
மனையோடு பிள்ளைகளும் பெற்றவளும்
குமுறியழும் ஓலப் பொங்கல் நின்றிடா மண்ணிலே
இத்தைப் பொங்கலொரு வித்தைப் பொங்கல்!

காலிழந்தும் கையிழந்தும் துடித்தவர்
புண் சுமந்த மேனியர் வெந்தழுந்தும்
புண்ணீர்ப் பொங்கல் நின்றிடா மண்ணிலே
இத்தைப் பொங்கலொரு வித்தைப் பொங்கல்!

மண்ணில் நல்லவண்ணம் மக்கள் வாழ்வதற்காய்
எண்ணிலாப் பாடுகள் பட்டோர்
அறைபட்ட சிலுவைகள் நிறைந்திட்ட மண்ணிலே
இத்தைப் பொங்கலொரு வித்தைப் பொங்கல்!

வரம்பிழந்தும் நரம்பிழந்தும் நம்மவர்
பரந்தழிந்திடப் போதை வர்த்தகம் நடத்துவோர்,
லஞ்சம் குவித்திடும் கஞ்சாக் கடத்தலின் ‘காவல்’ நாய்களும்
வஞ்சக வலை விரித்தே திரிந்திடும் மண்ணிலே
இத்தைப் பொங்கலொரு வித்தைப் பொங்கல்!

செத்த வழுக்கியாற்றுச் சேறு வடித்து நீர்பாய்ச்சும்
எத்தனை உழவர் இத்தகைய இழவிலிட்டார்?
பொய்த்த மழையும் காய்ந்த பயிரும்
உயிர்க்க விளையும் கனவிலின்னும் என்னூர்!
அதனாலும் இத்தைப் பொங்கலொரு வித்தைப் பொங்கல்!

கண்ணான மண்ணை வாழ்ந்திடக் கேட்டிடும் நம்மவர்
கண்ணிலே மண்ணையே தூவிடும்
செய்வினை சூனிய ‘மந்திரன்’ பேயாட்டும்
பேய்க்காட்டு நின்றிடா மண்ணிலே
இத்தைப் பொங்கலொரு வித்தைப் பொங்கல்!

சிறகிழந்தும் சீரிழந்தும் அடிமாடாகிப் போயினரே
அருமந்த காளைகளும் கன்னியரும்
அட! தைப்பெருமானே காலைக் கதிரோனே
எம்மினமே குடிமூழ்கிப் போவதுவா?
விடியாதா? துயர் முடியாதா?
இருளிடை வீழ்ந்த சூரியக் கொழுந்தே!
எழுந்திட நாளாகுமா?

ஒரு காலைக்கதிர் இருள் கிழித்திடும்
திரு நாளில் பதில் கிடைத்திடும்.

- இமைப்பொழுதும் நீங்காதான்

# வல்வையில் இன்று பட்டத் திருவிழா

வல்வை விக்னேஸ்வரா சன சமூக சேவா நிலையம் வருடந்தோறும் தைப்பொங்கலையொட்டிநடத்தும்பட்டத்திருவிழா இம்முறையும் இன்று பிற்பகல் 2.00 மணிமுதல் வல்வெட்டித்துறை உதயசூரியன் உல்லாசக் கடற்கரை, மடத்தடியில் இடம் பெறும். சனசமூக நிலையத் தலைவர் பா.சிவஅன்பு தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண மீன்பிடி, போக்குவரத்து மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரனும், சிறப்பு விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.கே.சிவாஜிலிங்கமும், கௌரவ விருந்தினர்களாக பருத்தித்துறை பிரதேச செயலர் த.ஜெய சீலன், வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவர் ச.பிரசாத் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். இப்போட்டியில் படலம், கொக்கு, பிராந்து, கட்டுக்கொடி, வெளவால், மூன்றுமூலை, பாம்பு போன்ற பட்டங்கள் ஏற்றுக்கொள்ளப் படுவதில்லை. விசித்திரமான, அபூர்வமான, விற்பனையில் இல்லாததும், கற்பனைத்திறனும் கைவண்ணத்தையும் கொண்டதுமான பட்டங்களையே தெரிவுசெய்து போட்டியாளர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இப்போட்டியைத் தொடர்ந்து சுப்பர் சிங்கர் நிகழ்ச்சியின் புகழ் பெற்ற நட்சத்திரங்கள் பங்கு பற்றும் இசை நிகழ்ச்சியும் இடம்பெறவுள்ளது. (உ-32)

### சாவகச்சேரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்தில் தினமும் 200 மாடுகள் களவாடப்படுகின்றன. வீட்டில் கட்டி வைத்துள்ள மாடுகளைக்கூட திருடி, திறந்த வெளியில் வைத்து வெட்டிவிடுகின்றனர். இவ்வாறு வெட்டப்படும் இறைச்சியை சுன்னாகம், யாழ்ப்பாணம், சாவகச்சேரி, மல்லாகம், சங்கானை போன்ற சந்தைகளில் விற்கிறார்கள். சாவகச்சேரியில் நேற்றும் மாடுகளை வெட்டி இருக்கிறார்கள்.

நாவற்குழியில் 12 மாடுகள் ஒரே இடத்தில்வைத்துவெட்டப்பட்டுள்ளன. அங்கேயே அவற்றின் கொம்புகள், தோல் மற்றும் கழிவுகளை புதைத்துள்ளனர். இது தொடர்பில்சாவகச்சேரிபொலிஸ் நிலையத்திலும் பல தடவைகள் முறையிட்டிருந்தோம். ஆயினும் எதுவிதமானநடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

இந்த நிலையில் கடந்த கிறிஸ்துமஸ்தினத்தன்று 12 மாடுகள் கொல்லப்பட்டன. ஆனால் இதுவரை எதுவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. மேலும், பட்டிப் பொங்கலுக்குள் உரிய நடவடிக்கை எடுக்காது விட்டால் 15ஆம் திகதி காலையில் சாவகச்சேரிபொலிஸ்நிலையம் முன்பு உண்ணாவிரதம் இருப்போம் என பொலிஸாருக்கு எச்சரிக்கை விடுத்துள்ளோம். – எனவும் மறவன்புலவு சச்சிதானந்தம் தெரிவித்தார்.

### பயங்கரவாத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தும் மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் செயற்பட வேண்டியுள்ளதால் அபிவிருத்தி நடவடிக்கைகளில் மத்திய அரசாங்கத்தை எதிர்பார்த்துக் காத்திருக்க வேண்டியுள்ளது.

வடமாகாணம் முழுமையாக அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். அங்குள்ள மக்கள் தமது வாழ்வாதாரத்தைக் கொண்டு செல்ல முடியாதளவிற்கு வறுமை தலை தூக்கியுள்ளது. மீள்குடியேற்ற நடவடிக்கைகளில் தொய்வு ஏற்பட்டுள்ளது. எனவே இந்தத் தேவைகள் நிவர்த்திக்கப்பட வேண்டும். என்றார்.

## இனிய தைத்திருநாள் நல்வாழ்த்துக்கள்

வட மாகாணத்தில் முதல்தர சாரதி பயிற்சிப் பாடசாலை

# கிருபா லேணர்ஸ்

No. 1 Driving Training School

(அரச அங்கீகாரம் பெற்ற 'A' தர கனரக சாரதிப் பயிற்சிப் பாடசாலை)

**மும்மொழிகளிலும் வாகனப்பயிற்சி அளிக்கப்படும்.**

+ வாகனப் பயிற்சிகள் சகல கிளைகளிலும் வழங்கப்படும். குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவாகசாரதி அனுமதிப்பத்திரம்வழங்கப்படும். எழுத்துப் பரீட்சையில் சித்தியடைய விசேட வீதி ஒழுங்கு வகுப்புகள் நடைபெறும்.
+ அனுபவம் வாய்ந்த வாகன பயிற்றுனர்களால் வாகனப் பயிற்சிகள் வழங்கப்படும்.
+ தாங்கள் விரும்பிய நேரங்களில் வாகனப் பயிற்சி வழங்கப்படும்.
+ தவணை முறைக் கட்டணங்கள்.
+ வான், கார், முச்சக்கர வண்டி, மோட்டார் சைக்கிள், லாண்ட்மாஸ்ரர், ரக்டர், பஸ் என் பவற்றுக்கு பயிற்சியுடன் சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கப்படும்.
+ ரெயலில் சித்தியடையத் தவறின் தொடர்பயிற்சி இலவசமாக வழங்கப்படும்.
+ எழுத, வாசிக்க கஷ்டமானவர்களுக்கும் மற்றும் சிறந்த சாரதிகளை உருவாக்குவதற்கும் நவீன முறை வீதிச்சட்டம் பற்றிய வீடியோ வகுப்புக்கள் நடைபெறும்.

### சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு தேவையான ஆவணங்கள்

- அடையாள அட்டை
- பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் (மூலப் பிரதி)
- திருமண அத்தாட்சிப் பத்திரம் (பெண்கள் மட்டும்)
- சாரதி அனுமதிப் பத்திரம் (வைத்திருந்தால்)
- தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவகம் வழங்கும் மருத்துவச் சான்றிதழ்

### எமது கிளைகள்:

A9 வீதி. கிளிநொச்சி.
0212285505 0714546955

216, A9 வீதி. வவுனியா.
(வசந்தி திரையரங்கு முன்)
0242227777. 0777100444

இல.227/6. கே.கே.எஸ்.வீதி
சுன்னாகம்.(மதவடி அருகில்)
0212242022. 0714546956

கண்டி வீதி. சாவகச்சேரி.
(நீதிமன்றம் அருகில்)
0214923202. 0712270700

முதலாம் கடைச்சந்தி. பருத்தித்துறை.
0214923201. 0714546961

பிரதான வீதி. நெல்லியடி.
(பொலிஸ் நிலையம் முன்பாக)
0213006550. 0714546958

யாழ் கச்சேரியடி. இல.36.
கச்சேரி நல் லூர் வீதி. யாழ்ப்பாணம்.
0212226699. 0767225292

ஓம் பிளாசா. பருத்தித்துறை வீதி.
ஆவரங்கால்.
0212226688. 0712422622

புளியடிச் சந்தி . முல்லை வீதி.
விசுவமடு.
0213201515. 0714546955

நாச்சிக்குடா சந்தி, மன்னார் வீதி.
முழங்காவில்.
0213006544,0714546955

வாடியடி சந்தி. பூநகரி.
0213201818. 0714546955

**தலைமைக் காரியாலயம்**
இல.226,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே :- 021 222 4353, 021 492 3200, 077 722 5292

**KIRUBA LEARNERS**
Govt. Approved 'A' Grade Driving Training School





ICBT CAMPUS JAFFNA
www.icbt.lk

# SOFTWARE ENGINEERING

RECOGNIZED BY UGC

HND & BSc (Hons)

*Qualified Lecture Panel | Library, Laboratory, Modern Lecture Hall facilities*
*Cafeteria | Recreation Area | Student Friendly Environment | Easy Payment*
**Accredited by:**
*Cardiff Metropolitan University, UK | European Quality Assurance Agency | NAARIC*

580,Hospital Rd., Jaffna | Tel: -0214 777 888
**0770 746 553 | 0769 289 784**



அனைவருக்கும் அருந்ததியின் தைத்திருநாள் வாழ்த்துக்கள் ...

## நாளை முதல் ஒவ்வொரு நாளும்

# அருந்ததியின் மணமக்கள் விபரம்

## உங்கள் காலைக்கதிரில்



**200 மணமக்களின் விபரங்களுடன்**

அருந்ததி திருமண பருவ இதழ் - 09

**16.01.2017 முதல்**
**அனைத்து கடைகளிலும் கிடைக்கும்**

**Arunthathee**
Online Matrimony | Wedding Magazine | Wedding Planner

**அலுவலக நேரம்**
திங்கள் - வெள்ளி : 08.30 a.m - 05.00 p.m
சனி : 08.30 a.m - 02.00 pm

480 /2C, Galle Road, Colombo 06. 011 406 32 82 | 20, K.K.S Road, Kokuvil, Jaffna. 021 492 75 27 | info@arunthathee.com www.arunthathee.com


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.01.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.